875

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
5 - SEP 1958

துரிதமாக
தயாராகிறது!
ஸ்ரீ பாபு பிலிம்ஸ் அளிக்கும்
அறிவாளி
சிவாஜி கணேசன் • T.S. பாலையா • T R. ராமச்சந்திரன் • தங்கவேலு
K. சாரங்கபாணி • பானுமதி • M. சரோஜா • T.P. முத்துலக்ஷ்மி
தயாரிப்பு: A.T.K. புரொடக்ஷன்ஸ்
திரைக்கதை டைரக்ஷன்: A.T கிருஷ்ணஸ்வாமி, B.A.
சங்கீதம்: S.V. வெங்கட்ராமன்
பாடல்கள்: சிவன் & மருதகாசி
ஸ்டுடியோ: வாஹினி & விஜயா (ரேவதி)
PSR
World Negative Rights Owned by
ஸ்ரீ பாபு பிலிம்ஸ்
12 சரோஜினி தெரு · சென்னை-17

படம் 17

காட்சி 1

பேசும்படம்

★ செப்டம்பர் 1958 ★

பொருளடக்கம் — பக்கம்

1.	செய்திச்சுருள்	...	5
2.	இம்மாத நக்ஷத்திரம்	...	10
3.	நாடோடி மன்னன் - திரைக்கதை, வசனம்		13
4.	வீனஸ் 'கல்யாணப் பரி'சில் பி. சரோஜா தேவி (வர்ணப் போட்டோ)	...	18
5.	'வெங்கடேஸ்வர மகாத்மியமு'வில் மோகனா (வர்ணப் போட்டோ)	...	19
6.	பாபநாசத்தில் பத்து நாட்கள்	...	20
7.	இவர்தான் மேனா	...	38
8.	புதிய வெளியீடுகள்	...	50
9.	ஸ்டூடியோ விஜயம்	...	52
10.	நான் சொல்லும் ரகசியம் (படக்காட்சிகள்)	...	57
11.	கேள்வி - பதில்	...	65
12.	ஹிந்திப் பட உலகில்	...	73
13.	வி. கே. சீனிவாசன்	...	77
14.	காத்தவராயன் (படக்கர்ட்சிகள்)	...	81
15.	மனசுக் கேத்த மாப்பிள்ளை	...	85
16.	தபால் பெட்டி	...	90
17.	நான் ரசித்த காட்சி	...	96
18.	வெட்டுங்கள் வெட்டுகள்	...	102

★ **SEVENTEENTH YEAR OF PUBLICATION** ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: Ramanath Publications. Managing Editor: T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES :-
17, General Patters Road, Madras-2.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon

செப்டம்பர் 22வ் முதல்
RAJESWARI FILMS MADRAS 2
ராஜேஸ்வரி பிலிம்ஸ்
சுமங்கலி
E.V.சரோஜா • பாலாஜி • E.R.சகாதேவன்
நடராஜன் பக்கிரிசாமி மோஹனா K.கண்ணன்
P.சரஸ்வதி T.K.புஷ்பவல்லி
மூலக்கதை
வடுவூர் K.துரைசாமி அய்யங்கார்
வசனம்
நடராஜன்
கலை
I.ஞானயுதம்
ஒளிப்பதிவு
S.S.நாதன்
சங்கீதம்
ரங்கா ராவ்
தயாரிப்பு
V.தாண்டவம்
டைரக்ஷன்
M.K.R.நம்பியார்
ஸ்டூடியோ
வாஹினி
நரசு, நியூடோன்
BHARAT STUDIO
ராஜேஸ்வரி பிலிம்ஸ், ௨/11. மவுண்டு ரோடு சென்னை ௨

செய்திச் சுருள்

சபாஷ் மீனு

பத்மினி பிக்சர்ஸார் தயாரித்து வரும் 'சபாஷ் மீனு' விரைவில் திரைக்கு வரப் போகிறது. தலைப்பிலிருந்து இது பெண்ணின் சாதனையைச் சித்தரிக்கும் கதை என்று தெரிகிறதல்லவா? மீனுவாக மாலினி நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக சிவாஜி கணேசன் வருகிறார். சந்திரபாபுவின் ஹாஸ்யமும் நடிப்பும் இதில் தலை சிறந்து விளங்கும் என்று தெரிகிறது. மற்றும் பி. சரோஜாதேவி, பி.ஆர். பந்துலு முதலியோர் நடித்திருக்கும் இப்படத்தை பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்திருக்கிறார். படம் ஏஎல்எஸ் வெளியீடாகும்.

மனசுக் கேத்த மாப்பிள்ளை

கண்ணன் பிலிம்ஸார் தமிழ்ப் படுத்தி வரும் 'மனசுக் கேத்த மாப்பிள்ளை' உள்ள முருக்கும், உயர்ந்த சமூகக் கதையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அஞ்சலிதேவி, ராஜசுலோசனா, ஏ. நாகேஸ்வரராவ் முதலிய நக்ஷத்திர நடிகர்கள் நடித்துள்ள இப்படம் ஏ. சுப்பாராவின் டைரக்ஷனில் வளர்ந்திருக்கிறது.

ஏவி. எம்.மின் படங்கள்

'பூம்புகார்' வர்ணப்படத்திற்குத் திட்டமிட்டிருக்கும் ஏவி. எம். புரொடக்ஷன்ஸார், டைரக்டர்கள் கிருஷ்ணன் - பஞ்சுவின் கூட்டுடன் 'மாமியார் மெச்சின மருமகள்' என்ற படத்தை தயாரித்து வருகிறார்கள். தீபாவளி தினம் இப்படம் திரையிடப்படும் எனத்தெரிகிறது. இவை தவிர, மேலும் இரண்டு தமிழ்ப்படங்கள் விரைவிலேயே ஏவி. எம்.மில் ஆரம்பமாக விருக்கின்றன.

ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கும் 'களத்தூர் கண்ணம்மா' என்ற படத்தை ஜி. கே. புரொடக்ஷன்ஸார் இங்கு தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். பீம் சிங் இதை டைரக்ட் செய்யப் போகிறார். ஒரு குழந்தையை மையமாகக் கொண்டு பின்னப்பட்ட இதில் அப்பாத்திரத்தில் நடிக்க டெய்ஸி இராணி ஒப்பந்தமாகியிருக்கிறாள். மற்றொன்று, எம். எஸ். திரௌபதி நடத்தி வரும் 'திலகம்' நாடகம். ஏவி. எம்.மில் நீண்டகாலம் உதவி டைரக்டர்களாகப் பணியாற்றிய லக்ஷ்மிநாராயணன்-வெங்கட்ராமன் இருவரிடமும் இதன் டைரக்ஷன் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எம். என். ராஜம் இதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார்.

அபலை அஞ்சுகம்

அருணா பிலிம்ஸைச் சேர்ந்த டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணசாமி 'பார்த்திபன் புரொடக்ஷன்ஸ்' என்று ஒரு புதிய படக்கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். 'கல்கி' பத்திரி

ஜெமினி லாபரடரியை ஆரம்பித்து வைக்கிறார் மத்திய மந்திரி பி. கோபால் ரெட்டி.

கையில் கி. ரா. கோபாலன் தொடர் கதையாக எழுதிய 'அபலை அஞ்சுகம்' என்ற கதையை இவர் இக்கம்பெனியின் முதல் படமாகத் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார். சௌகார் ஜானகி இதன் பிரதம பாகத்தில் நடிப்பார்.

கனவு பலித்ததம்மா

பத்மினி பிக்சர்ஸில் படத்தயாரிப்பு நிர்வாகியாக இருந்த அண்ணாமலையும் மற்றும் சிலரும் சேர்ந்து 'கலைமகள் பிக்சர்ஸ்' என்ற படக் கம்பெனியை நிறுவியிருக்கின்றனர். இதன் சார்பில், பத்மினி பிக்சர்ஸ் உதவி டைரக்டர்களில் ஒருவரான இரா. ஷண்முகம் எழுதிய 'கனவு பலித்ததம்மா' என்ற சமூகக் கதையைப் படமாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மெட்ரோவின் தயாரிப்பு

ராஜசுலோசனா, கண்ணாம்பா, முத்துலக்ஷ்மி, பிரேம்நஸீர், ஓ. ஏ. கே. தேவர், காகா ராதாகிருஷ்ணன் மற்றும் பலர் நடிக்கும் சமூகப் படமொன்றை மெட்ரோ பிலிம்ஸார் பாரமவுண்ட் ஸ்டுடியோவில் தயாரித்து வருகின்றனர். க. நாராயணன் - கே. பி. ராஜூ கூட்டு டைரக்ஷனில் தயாராகும் இதன்கதையை உசிலை சோமநாதன் எழுதியிருக்கிறார்.

பாரதிவிழா பற்றி நிருபர்களிடம் விளக்குகிறார் 'நடிகர் திலகம்'

'நாடோடி மன்னன்' பத்திரிகை காட்சியின் போது, படத்தயாரிப்பு விஷயங்களில் தனக்கேற்பட்ட அனுபவங்களை கூறினார் எம். ஜி. ஆர்.

ஜெமினியின் சாதனை

இந்தியப் படவுலகில் ஒரு புதிய சகாப்தத்தை சென்ற ஜூலை 31-ம் தேதியன்று ஜெமினி ஸ்தாபனம் தோற்றுவித்திருக்கிறது. தூரக் கிழக்கு நாடுகளிலேயே இல்லாததும், மிகப் பெரியதும், சிறந்தது மான 'வர்ணப்பட லாபரடரி'யை ஜெமினி அன்றைய தினம் ஆரம்பித்திருக்கிறது.

'ஜெமினி லாபரடரீஸ்' என்ற இதில் டெக்னிகலருக்கு அடுத்து சிறந்ததாக விளங்கும் 'ஈஸ்ட்மன்' கலர் பிலிம்களைக் கழுவவும் பிரதியெடுக்கவும், மற்றும் கேவாகலர், ஆக்பா கலர், பெர்ரானியா கலர் பிலிம்களைக் கழுவவும், பிரதியெடுக்கவும் முடியும்.

லாபரடரியை இந்திய சர்க்காரின் ரெவின்யூ மந்திரி பி. கோபால ரெட்டி திறந்து வைத்தார். "வர்ணப்பட லாபரடரியின் மூலம் வாசன் படவுலகுக்கு மற்றொரு பெரும் தொண்டு புரிந்திருக்கிறார்" என்றார் அவர்.

விழாவுக்குத் தலைமை வகித்த சென்னை முதலமைச்சர் காமராஜ நாடார் ''செய்வன திருந்தச் செய்வதில் வாசன் சிறந்தவர். அவரது இந்த வர்ணப்பட லாபரடாரியும் இதற்கு உதாரணமாகத் திகழும்'' என்றார்.

ஆரம்பத்தில் தமது வரவேற்புரையில் வாசன் ''வர்ணப் படங்கள் இந்தியாவில் தயாராவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. தவிர, இதற்காக நாம் இனி அயல் நாடுகளுக்கு ஓடவேணடியதில்லை. இங்கேயே நமது வர்ணப் படங்களைக் கழுவி பிரதி யெடுக்கலாம். இதனால் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய பணம் மிச்சமாவதோடு காலதாமதமும் தவிர்க்கப்படுகிறது. தவிர தூரக்கிழக்கு நாடுகளும் கிழக்காசிய நாடுகளும் இங்கு தங்கள் படத்தை அனுப்பலாம். இதனால் நமக்கு அத்தேசங்களிலிருந்தும் அந்நியச் செலவாணி கிடைக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

இது இருபது லக்ஷம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

'சம உரிமை' ஆரம்பவிழாவில் தயாரிப்பாளரும், கலைஞர்களும்.

பாரதி விழா

எட்டயபுரத்தில் நடைபெறவிருக்கும் பாரதி விழா பலவகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடந்த ஆணடுகளில் அங்கு 'பாரதி விழா' கொண்டாடப்பட்டதைவிட இவ்வாண்டு விழா மேலும் அதி சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. தவிர, இந்த ஏற்பாடுகளை தனது படத்துறை சகாக்களின் துணையோடு

சமைப்பதில் இந்த காதல் ஜோடியின் ஒற்றுமையைப் பாருங்கள்! 'புதுமைப் பெண்'ணில் எம். என். ராஜம்— எஸ். எஸ். ராஜேந்திரன்.

ஜெயந்தி பிக்சர்ஸ் படத்தில் நடித்து வரும் திவாகரன்.

தமது சொந்தப் பொறுப்பில் நடத்த முன்வந்திருக்கிறார் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன். இது படவுலகிற்கே பெருமையாகும்.

காலமானார்

பிரபல காபி கம்பெனி அதிபரும் சென்னை நரசு ஸ்டுடியோஸ், பாரகன் தியேட்டர் மற்றும் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் உரிமையாளருமான வி. எல். நரசு சென்ற மாதம் காலஞ்சென்ற செய்திகேட்டு வருந்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலிங்கராணி

'தங்கரத்தினம்' என்ற படத்தைத் தயாரித்து வரும் எஸ். எஸ். ராஜேந்திரன், 'கலிங்கராணி' என்ற படத்தையும் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

மாசில்லா மாணிக்கம்

டைரக்டர் எம். ஏ. திருமுகம் டைரக்ஷனில் வளர்ந்து வரும் அமரா புரொடக்ஷன்ஸின் 'மாசில்லா மாணிக்கம்' படம் விஜயா ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாராகி வருகிறது. ஆரூர்தாஸ் கதை வசன மெழுதியிருக்கும் இதில் கண்ணம்பா, சுலோசனா, எம். என். ராஜம், எஸ். எஸ். ராஜேந்திரன், வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், காகா ராதாகிருஷ்ணன் முதலியோர் நடித்து வருகின்றனர்.

தான் வாழ்வதற்காகக் கலையுலகில் புகுந்து புகழ் பெற்ற பின், நாட்டு மக்கள் வாழ்வதற்காகத் தன்னலம் கருதாது மகத்தான பணியாற்றிய மாபெரும் கலைஞரான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அமரராகி ஆண்டு ஒன்று ஆகிவிட்டது இன்று. ஆனால் அவர் நினைவு கலை உள்ளளவும் மக்கள் மனதிலே இடம் பெற்றிருக்கும் என்பது திண்ணம். எந்தக் கட்சியிலும் சேராது, எல்லாக் கட்சியினராலும் பாராட்டப்பட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவருடைய பெரும் பணிகளைத் தொடரும்படி கலைஞர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எச்சரிக்கை!

உங்கள் குழந்தையின்
ஜலதோஷம்
அபாயகரமாகக் கூடும்!

வியாதி ஆரம்பிக்கு முன்னரே,
அவன் சளித்தொந்திரவுகளை இந்த நல்ல,
சக்திவாய்ந்த ஆயின்மென்டால் ஒழியுங்கள்!

2 விதங்களில் ஜலதோஷத்திலிருந்து
நிம்மதி தருகிறது.

1

மூக்கின்
வழியாக
வேலை
செய்கிறது.

உங்கள் குழந்தை விக்ஸ் வேபோரப்பின் சக்தி வாய்ந்த ஔஷத ஆவிகளை சுவாசிப்பதால், அவன் மூக்கிலும், தொண்டையிலும் உள்ள சளி உபாதை அகல்கிறது.

2

சருமத்தின்
வழியாக
வேலை
செய்கிறது.

வேபோரப்பின் சுகம் தரும் உஷ்ணம் சருமத்தினூடே சென்று உங்கள் குழந்தையின் மார்கபத்தை உடைத்தெறிகிறது.

விக்ஸ்
வேபோரப்

மார்பிலும், முதுகிலும்,
தொண்டையிலும் தேய்த்தாலே போதும்!

328-A

இம்மாத நக்ஷத்திரம்

எம். ஜி. ராமச்சந்திரன்

சென்ற வாரம் திரையிடப்பட்ட எம்ஜியார் பிக்சர்ஸின் பிரம்மாண்ட தயாரிப்பான 'நாடோடி மன்னன்' தமிழ்ப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் வீராங்கன் என்ற நாடோடியாகவும் மார்த்தாண்டன் என்ற மன்னனுகவும் இரு வேடங்களில் தோன்றி சிறப்பாக நடித்திருக்கிருர். 'அவர் கத்திச் சண்டை செய்வதில் மட்டும் தான் திறமை பெற்றவர்; நடிப்பில் அல்ல' என்ற தவருன கருத்து கொண்டவர்களுக்கு, 'அவர் திறமை மிக்க நடிகர்' என்ற விளக்கத்தையும் தரும் வகையிலே அவரது நடிப்பு இப்படத்தில் அமைந்திருக்கிறது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றையும் மூச்சாகக் கொண்டவன் வீராங்கன் என்ற நாடோடி. நாட்டில் மக்களாட்சி நிறுவுவதைக் கடமையாகக்கொண்ட அவன், மன்னனாக நடிக்கும் நிலைவந்ததும் மகாராணியிடம் கண்ணியமாக நடந்து கொள்கிறான். தன் குணத்தினால் மக்களைக் கட்டுப்பாடுடன் நடக்கச் செய்து வெற்றி பெறுகிறான்.

மார்த்தாண்டன் பண்புள்ள ஒரு மன்னன். ஏழைகளின் வாழ்வை உயர்த்த மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுகிறான். அவர்கள் துன்பம் அறியாத தன்னைவிட அவர்களில் ஒருவனை வீராங்கனே நாடாளும் தகுதி பெற்றவன் என்று தீர்மானித்து, மகுடம் துறந்து மக்கள் தலைவனை வீராங்கனையே தலைவனாக - நாட்டின் காவலனாக ஆக்கி விடுகிறான்.

மாறுபட்ட குண விசேஷம் கொண்ட இரு வேடங்களில் மிகச் சிறப்பாக நடித்திருக்கும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை இம்மாத நக்ஷத்திரம் எனத் தேர்ந்தெடுத்துக் கௌரவிக்கிறோம்,

வியாதியஸ்தர்கள்

1. போலியோ 2. முகம், கழுத்து, இடுப்பு, கால்கள் மற்றும் பாதி அல்லது பூராதேகமோ பாரிசவாயுவினுல் தாக்கப் பட்டவர்கள். 3. அதிக ரத்தஅழுத்தம். 4. செவிடு. 5. ஊமை அல்லது திக்குவாய். 6. குருடு அல்லது ஒண்ணரைக்கண். 7. மூளைக் கோளாறு இவற்ருல் அவதியுறு பவர்கள் எங்கள் வைத்தியர் கவிராஜ் ஓம் பிரகாஷ் பி.ஏ., பிஷ்காசார்யா தன்வந்திரி, ரிஜிஸ்டர்ட் பிராக்டீஷனர்(டெல்லி) அவர் களை கீழ்க்கண்ட ஊர்களில், குறிப்பட்ட காலத்தில் யோசனை கேட்கலாம்.

பனரஸ் : பனரஸ் லாட்ஜ் 12-9-58 காலை 8 முதல் 11; கல்கத்தா : பிராட்வே ஹோட்டல் - 17-9-58 காலை 8 முதல் 12 மாலை 3 முதல் 5; ஜெம்ஷட்பூர் : புலே வார்ட் ஹோட்டல், பிஸ்டுபூர் 18-9-58 காலை 8 முதல் 11; விசாகப்பட்டனம் : கிரீன்லண்ட்ஸ் ஹோட் டல் 23-9-58 காலை 8 முதல் 11. பெஜவாடா: மாடர்ன் கேப், கவர்னர்பேட் - 29-9-58 காலை 8 முதல் 11; நெல் லூர் : நேஷனல் லாட்ஜ், போர்டிங், லாட்ஜிங் 30-9-58 காலை 8 முதல் 11 ; சென்னை : உட்லண்ட்ஸ் ஹோட் டல்-2-10-58 காலை 8 முதல் 12 மாலை 3 முதல் 5; கடலூர் என். டி.: பிருந்தாவனம் ஹோட்டல் 3-10-58 காலை 8 முதல் 11; கும்பகோணம் : தாஜ்மகால் லாட்ஜ்-4-10-58 காலை 8 முதல் 11; தஞ்சாவூர்: ராஜாவின் விருந்தினர் விடுதி-4-10-58 மாலை 4 முதல் 6; திருச்சி : அசோக் பவன் 5-10-58 காலை 8 முதல் 11; மதுரை : உடுப்பி போர்டிங் லாட்ஜ்-7-10-58 காலை 8 முதல் 11; திருநெல்வேலி : நெல்லை லாட்ஜ 8-10-58 காலை 8 முதல் 11; திருவனந்தபுரம் : அரிஸ்டோ ஹோட்டல் 9-10-58 காலை 8 முதல் 11; எர்ணுகுளம் : பாரத் கேப்- 11-10-58 காலை 8 முதல் 11; கள்ளிக்கோட்டை : சாந்தா பவன்-13-10-58 காலை 8 முதல் 11; மங்களூர் : ஜெயா கேப் 14-10-58 காலை 8 முதல் 12-1 முதல் 3: கோவை : உட்லண்ட்ஸ் ஹோட்டல் 1-10-58 காலை 11 முதல் 3; பெங்களூர் : மதரூஸ் உட்லண்ட்ஸ் ஹோட்டல்-16-10-58 காலை 10 முதல் 1 -- மாலை 2 முதல் 4; கர்னூல் : ஸ்ரீவெங்க டேஸ்வரா ஹோட்டல் - 18-10-58 காலை 8 முதல் 11; ஹைதராபாத் : தாஜ்மகால் ஓட்டல், கிங்கோட்டி ரோடு- 19-10-58 காலை 8 முதல் 12 மாலை -- 1 முதல் 3.

மேற்சொன்ன வியாதிகளை குணப்படுத்தும் முறைகள் கொண்ட, படங்கள் நிறைந்த ஆங்கிலப் புத்தகம்- **Poliomyelitis & Ayurveda** - விலை ரூ. 7-50. தபால் செலவு- 90 ந. பை. ஆலோசனைகளுக்கு ஆங்கிலத்தையாவது ஹிந்தி யையாவது உபயோகிக்கவும்.

ARYAVARTA POLIO ASHRAM

114-E, KAMALA NAGAR, DELHI-6

Phone: 27858 Grams: "POLIOCURE"

எம்ஜியார் பிக்சர்ஸ்

நாடோடி மன்னன்

காட்சி 1

வீராங்கனின் வேண்டுகோள்!

அரசரின் படையிலே முன்னாள் சேவகனான வீராங்கன் இப்போது சாத்விகப் புரட்சியில் ஈடுபடுகிறான். மக்களை மாக்களாக மதிக்கும் மன்னராட்சி மடிந்து மக்களாட்சி மலர வேண்டுமென்பதற்காகத் தன் உயிரையும் இழக்கத் தயாராக இருக்கும் உத்தமன் இவன். வீராங்கனின் அன்புத் தோழனான சகாயம் ஒரு குறும்புக்காரன். இவர்களைப் பின்பற்றி ஏராளமான மக்கள் மன்னர் மாளிகை நோக்கிப் போகிறார்கள். மக்களாட்சி வாழ்க - மன்னராட்சி ஒழிக-என்று கூவும் அவர்களில் சகாயம் மட்டும் கொஞ்சம் உணவுப் பிரியன்! ஆகவே 'சோறு போடு' என்று எழுதப்பட்ட விளம்பர தட்டியுடன் வருகிறான். அப்போது அரசாங்க சேவகர்கள் குதிரைமீது வருகின்றனர். கூக்குரலைக் கேட்டதும்— வீராங்கனைக் கண்டதும் அவர்கள் முகங்கள் சிவக்கின்றன. ஒரு சிப்பாய் பேச ஆரம்பிக்கிறான்.

சிப் : நில்லுங்கள்...இந்த எல்லையைத் தாண்டி ஒரு காக்கா குருவி கூடப் போகக்கூடாது.

வீராங்கன் : நாங்கள் காக்காயுமல்ல, குருவியுமல்ல; மனிதர்கள்.

சிப் : எதுவாக இருந்தாலும் சரி, கூட்டமாகப் போகவே கூடாது.

சகா : அப்பொ ஒண்ணு செய்யலாம் வீராங்கா!

வீரா : என்ன?

சகா : தனித்தனியா ,போயி அங்கே போயி ஒண்ணு சேர்ந்துடலாம்.

சிப் : உங்கள் பிணங்கள் கூட இந்த இடத்தை விட்டுப் போக விடமாட்டோம்.

சகா : சே....ஏனய்யா கோவிச்சுக்கிறே? உங்க கிட்ட என்னய்யா கேட்டோம் நாங்க? இந்தாய்யா, இது வேண்டாமய்யா. இது கொடு.

சோறு போடு என்ற விளம்பரத் தட்டியை முதலில் காட்டிவிட்டு பிறகு பின்புறம் திருப்பிக் காட்டுகிறான். ''உணவு கொடு'' என்று எழுதப்பட்டிருக்கிறது அங்கே.

சிப்: (வீராங்கனைப் பார்த்து.) ஏய்! மரியாதையாக உன் கூட்டத்தை அழைத்துச் செல்கிறாயா அல்லது வீரர்களைவிட்டு விர



திரைக்கதை - வசனம்

ட்டச் சொல்லட்டுமா?

சகா: பேசி நியாயத்தைச் சொல்லுடான்னுக்கா...வந்து அடிக்கச் சொல்ருனே.

வீரா: (இடைமறித்து) அப்படியெல்லாம் பேசக்கூடாது.

சகா: (கோபித்து)...ம்....அப்படீன்னு நீயும் அவங்களோடே போய் சேந்துட்டியா?

சிப்: கலைந்து போகிறீர்களா இல்லையா?

வீரா: அவசரப் படாதீர்கள். உங்கள் மன்னரை நேரில் சந்தித்து 'இந்நாட்டுக்கு வைரமுடி வேண்டாம். வீரவாள் வேண்டாம்; வாழ்வின் வழி வகுக்க சில சட்டமும் திட்டமும்தான் தேவை. அதற்கு அரசர் தேவையில்லை. மக்கள் மனமறிந்த ஒரு தலைவனே போதும்'' என்பதை விளக்கத்தான் ரத்னபுரி நோக்கிச் செல்கிருேம்.

ஒரு சிப்பாய்: இவன் பொல்லாதவன். இந்தக் கூட்டத்துக்கே இவன்தான் தலைவன். இவனுக்கு நாடு ஆறுமாசம், சிறை ஆறுமாசம்.

முதல் சிப்: சிறைசென்ற பிறகுமா இன்னும் புத்திவரவில்லை?

வீரா: சிறைச்சாலை அமைத்த அவர்களுக்கே அது இல்லையே!

சிப்: (சேவகர்களிடம்) இவர்கள் இருவரையும் பிடித்து இழுத்து வாருங்கள்.

சிப்பாய்கள் முன்வர, கூட்டத்தினர் கூக்குரலெழுப்புகின்றனர். மக்களுக்கு வீராங்கன் வேண்டுகோள் விடுக்கிருன்.

வீரா: நான் சொல்வதைக் கேளுங்கள். பொறுமையாய் இருங்கள். அவர்கள் செய்யும் தவறுகளை நீங்களும் செய்யவேண்டாம். அமைதியாகத் திரும்பிச் செல்லுங்கள். அடிபடும் காளையர்கள், இடிபடும் தாய்மார்கள், மிதிபடும் குழந்தைகள், இவர்கள் வடிக்கும் கண்ணீரில்தான் நமது வாழ்வு மலரப்போகிறது; துடிக்கும் துடிப்பிலேதான் நமது லட்சியம் நிறைவேறப் போகிறது. அதுவரை காத்திருப்போம்; காரியம் ஆற்றுவோம். தயவு செய்து திரும்பிச் செல்லுங்கள்; அமைதியாகச் செல்லுங்கள். நான் வருகிறேன்.

வீராங்கன் மட்டும் சிப்பாய்களுடன் செல்ல கூட்டம் கலைந்து, அமைதியோடு செல்கின்றனர் தொண்டர்கள். சகாயம் தனியே நிற்கிருன்.

சகா: (தனக்குத்தானே) என்னய்யா அக்கிரமமா இருக்குது? ஒண்ணும்செய்யாதவனைப் பிடிச்சு இழுத்துக்கிட்டுப் போருங்க. ஆமா, நான் இனி சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவேன்? இவன் வேறே இப்படிப் போயிட்டானே!

போகிருன், ஏக்கத்தோடு.

காட்சி 2

பிங்களன் வீராப்பு

ராஜகுருவும் கார்மேகமும் அரண்மனையிலிருக்கிருர்கள். கொடுமையே உருவான ராஜகுரு, அரசாட்சியை அபகரிக்கத் திட்டம் தீட்டுகிருன்.

கார்மேகம் அவனது கையாள். அவன் ராஜ குருவிடம் அபார பக்தி கொண்ட மூடன். மறைந்த மன்னரின் மருமகனான மார்த்தாண்டன் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புகிறான். அவன் பட்டமேற்க வரப்போவதைப் பறையறிவிக்கிறார்கள். அது கேட்டு ராஜகுரு பேசுகிறார்.

ராஜ: ம்...மன்னனாம் மார்த்தாண்டன்! மண்ணைச் சொந்தமாக்கும் ஆசையில் மண்ணுக்கே சொந்தமாகப் போகிறான்...மடையன்.

கார்: காலம் சென்ற மகாராஜாவுக்கு புதிய மன்னர் மார்த்தாண்டன் ஒரு வகையில் மருமகனல்லவா? அந்த உறவு முறையை வைத்து ஊரார் ஆசைப்படுவது தவறல்லவே.

ராஜ: மன்னனுக்கு மருமகனாயிருந்தாலென்ன, ஆண்டவனுக்கே அருள்மகனாயிருந்தால் என்ன? இந்த நாட்டு அரியாசனத்துக்குத் தேவை, நான் சொல்வதைக் கேட்டு நடமாடும் ஒரு பொம்மை. அதை நான் என்றோ தேர்ந்தெடுத்து விட்டேன்!

கார்: ஹா...யாரது?

ராஜ: பிங்களன்!

பிங்களன் அப்போது தன் அறையில் கட்டாரியால் பழத்தைக் குத்தியபடி நிற்கிறான். அவன் ஒரு வீரன்தான். ஆனால் ராஜகுருவின் உபதேசம் காரணமாக தன் நிலை மறந்து மண்ணாசை பிடித்தலைகிறான். பணியாள் ஒருவன் மார்த்தாண்டனின் உருவப்படத்துடன் அங்கே வருகிறான்.

பிங்களன்: மார்த்தாண்டன் மன்னன்!

பணி: மார்த்தாண்டன்தான் மன்னன்னு தீர்மானமாயிட்டுதுங்களே!

பிங்களன் கையிலுள்ள பழத்தை அவன் முகத்தில் எறிந்து விட்டுச் சிரிக்கிறான்.

பிங்: முட்டாள்!

பணி: என்னாங்க இது, எனக்கு சுயபுத்திங்கற பட்டப்பேர் இருக்குது. முட்டாள்னு சொல்றீங்களே...

பிங்: (சித்திரத்தைப் பார்த்தபடி) பெயரில் என்ன இருக்கிறது? இவனுக்குக் கூடத்தான் மன்னன் மார்த்தாண்டன் என்ற பெயர் இருக்கிறது. பயன் என்ன?

பணி: அப்படின்னா இவா பெயரையும் மாத்தப் போறீங்களா?

பிங்: இவனுடைய மன்னன் என்ற பட்டப் பெயரை மாற்றப் போகிறேன்.

பணி: அப்போ மன்னராவதற்குத் தகுதியுள்ள ஒரு ஆளு வேணுங்களே.

பிங் : (கண்ணாடி முன் நின்று) மன்னனாவதற்குத் தகுதி என்ன வேண்டும்? வாட்டசாட்டமான உடல், வாள் எடுத்துப் போர் புரியும் வலிமை, ஆரணங்குகளை மயக்குகின்ற அழகு இவைதானே சுய புத்தி! 'நானே மன்னன்' என்று பறை சாற்றித் திரிகிறானே மார்த்தாண்டன், அவனையும் பார், என்னையும் பார். மன்னனுக்கு வேண்டியது மகுடம் தாங்கும் தலை, செங்கோல் தாங்கும் கை இவை எனக்கும் தான் இருக்கின்றன. இந்த பிங்களன் உயிரோடிருக்கும் வரை மார்த்தாண்டன் மன்னன் ஆகவே முடியாது.

வீராப்புடன் நிமிர்ந்து நிற்கிறான்.

பாத்திரங்கள்

எம். ஜி. ராமச்சந்திரன்	மார்த்தாண்டன், வீராங்கன்
பி. எஸ். வீரப்பா	ராஜகுரு
எம். என். நம்பியார்	பிங்களன்
எம். ஜி. சக்கரபாணி	கார்மேகம்
சந்திரபாபு	சகாயம்
பி. பானுமதி	மதனா
எம். என். ராஜம்	மனோகரி
பி. சரோஜாதேவி	ரத்னா

வசனம் :
கண்ணதாசன்
ரவீந்தர்

டைரக்ஷன் :
எம். ஜி. ஆர்.

காட்சி 3

தூங்காதே தம்பி!

சிறையிலே சிந்தனையிலீடுபட்டிருக்கும் வீராங்கன், குறட்டை சப்தம் கேட்டுக் கதவருகே வருகிறான். காவலாளி தூங்குகிறான். 'தூங்காதே தம்பி' என்று பாடி அவனுக்குக் கருத்துரை வழங்குகிறான் வீராங்கன். அப்போது கை தட்டும் சப்தத்துடன் "பேஷ் பேஷ்" என்ற பெண் குரலும் கேட்கின்றது. அவன் அறைக்கு மேல் அறையிலிருக்கும் ஒரு குழாய் வழியாக குரல் வருகிறது. முகம் தெரியவில்லை. அங்கிருப்பவள் மதனா என்ற அழகி. அவள் உண்மை ராஜ விசுவாசியும், தேசபக்தருமான பூபதியின் மகள். நாட்டின் நேர்மையான வாரிசைத் தேடிப் பிடிக்க புரட்சி செய்யும் அவளும் வீராங்கனைபோல் சிறைப்பட்டிருக்கிறாள். அவள் பெரிய குறும்புக்காரி. பாட்டைப் பாராட்டுகிறாள். சிறைப்பட்டிருக்கிறோம் என்றும் பாராமல்.

மதனா : பிரமாதம் பிரமாதம், ரொம்பப் பிரமாதம்.

வீர : யாராது, சபாஷ் போடுவது?

மத : யாரங்கே பாடினது?

வீரா : உன் பேரென்ன?

மத : உன் பேரென்ன?

வீரா : ஹும், என் பேர் வீராங்கன்.

மத : ம்....என் பேர் மதனா.

வீரா : அழகான பேர்தான்!

மத : (குழாய் வழியாக பார்க்க முயற்சித்து) முடியலியே.

வீரா : ஆம்...என்ன தெரியலே?

மத : உன் முகம்தான்...சே... சே...சே...ஆமாம்...நீ எப்படி இருப்பே?

வீரா : (வேண்டுமென்று) விகாரமா ஹும்...பயங்கரமா...பார்க்க அசிங்கமா.

மதனா முகத்தைக் கோணலாக்கிக் கொள்கிறாள், வெறுப்பாக.

வீரா : என்ன, பேச்சையே காணமே, பயந்திட்டியா?

மத : ஹும்...நான் பயப்படுவேனா?

வீரா : ஆமா, நீ எப்படி இருப்பே?

மத : (குறும்பாக) அசிங்கமா இருப்பேன். ஒருகால் நொண்டி. நாலுபல்லு வெளியே நீட்டிக்கிட்டிருக்கும்.

வீராங்கன் மௌனமாக இருக்கிறான்.

மத : என்ன, பேச்சையே காணோம்....பயந்துட்டியா?

(106-ம் பக்கம் பார்க்க)

அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள்!
P.A.R
P.A. ராஜு செட்டியார்
& பிரதர்

பாபநாசத்தில் பத்து நாட்கள்

தாமிரபரணி நதி 'சலசல'வென்று. மெல்லிய ஒலியை எழுப்பி, மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

வானவில்லின் அழகும், இளமையும் கொண்ட நடனமாது ஒயிலாக ஆடும்போது, அவளது காலில் அணிந்துள்ள சலங்கைகள் எப்படி ஒரு 'கிண்கிணி' நாதத்தைக் கிளப்புமோ, அதே போல, நதியில் துவண்டு வந்த சின்னஞ் சிறு அலைகள், சிறு கற்களை மோதித் தள்ளிக் கொண்டு சென்ற போது ஓசை எழுந்து கொண் டிருந்தது.

மலரின் நறுமணத்தைச் சுமந்து தென்றல் மெதுவாக வீசிக் கொண்டிருந்தது. கீழ்த்திசை யில் புள்ளினங்கள் இசைபாடிக் கொண்டிருந்த பசுஞ்சோலைகளினிடையே, 'கண்ணுமூச்சி' ஆடு வது போல, கதிரவன் ஒளிந்தும் ஒளியாமலுமாக மெதுவாக தலையை எழுப்பிக் கொண்டிருந்தான்.

இந்த இனிமையான சூழ்நிலையில்தான் அங்கு ஒரு 'தங்கப்பதுமை' வந்தாள்.

ஆமாம், அந்த 'தங்கப்பதுமை' வேறு யாரு மில்லை. ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'தங்கப்பதுமை'தான் அவள்.

அடுத்து அந்தத் 'தங்கப்பதுமை' ஏன் அங்கு வந்தாள் என்பதை அறிய நீங்கள் விரும்புவீர்கள் அல்லவா? அதையும் சொல்லி விடுகிறேன்.

எதிர்ப்புறம்: 'தங்கப் பதுமை'யில் பத்மினி. கீழே பத்மினி காட்சி யளிப்பது 'அரசிளங்குமரி'யில்

செல்வியை தன் வாழ்க்கைச் செல்வமாக அடைந்த மணிவண்ணன்

ஒருநாள் ஜூபிடர் பிக்சர்ஸ் காரியாலயத்தில் நான் உட்கார்ந்து, அங்கிருந்த நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

திடீரென்று அங்கிருந்த நண்பர்களில் ஒருவர் ''நீங்கள் ஏன் எங்களுடன் குற்றாலத்திற்கு வரக் கூடாது?'' என்று ஒரு கேள்வி

மணிவண்ணன் நீராடுகிருன்.

★



யைத் தூக்கிப் போட்டார்.

நண்பரின் திடீர் கேள்வியால் தாக்குண்ட எனக்கு ஒன்றுமே புரியவில்லே. உடனே அவர் பக்கம் திரும்பினேன்.

''குற்ருலத்திற்கு நீங்கள் எப்போது என்னைக் கூப்பிட்டீர்கள்? எதற்காகக் கூப்பிடுகிறீர்கள்? இதையெல்லாம் சொன்னுல் தானே விஷயம் எனக்குப் புரியும்?'' என்றேன்.

நண்பருக்கும் அப்போதுதான் எனது

கேள்விகளின் அர்த்தம் சரியாகப் புரிந்தது.

''இதோ விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று என் அருகில் வந்து உட்கார்ந்தார்.

நான் ஆவலுடன் அவரை நோக்கினேன்.

★

மணிவண்ணனை மணுளனுக அடைந்த செல்வி ஆடுகிருள்

செல்வியின் தோழி
சொக்கி இவள்

★

தனிப்பட்ட புகைப் படங்களையும் தர முடியும் என்று நான் தீர்மானித்தேன். அந்த எண்ணத்தில் எங்கள் காரியாலய புகைப்பட நிபுணர் திரு. சந்தாமியானை அவர்களுடன் அனுப்புவதாக ஒப்புக் கொண்டேன்.

திரு. சந்தாமியான் எடுத்து வந்த புகைப் படங்களையும், அங்கு சென்று வந்த அவர் சொன்ன தகவல்களையும், மற்றும் நான் திரு சோமு, டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி, திரு. காசி (திரு. சோமுவின்

குற்றாலத்திற்கும் - பாபநாசத்திற்கும் இடையே உள்ள சுற்றுப் புறங்களில் அவர்கள் தயாரித்து வந்த 'தங்கப்பதுமை'க்கான சில வெளிப்புறக் காட்சிகள் சுடப்பட வேண்டியிருந்தன. அது சம்பந்தமாக ஜூபிடர் கலைஞர்களும், படத்தின் நடிகர்களும் அந்த இடங்களுக்குப் பிரயாணமாக திட்டம் வகுத்திருந்தார்கள். அவர்களுடன் என்னையும் அழைத்தார் நண்பர்.

'பேசும்-படம்' ரஸிகர்களுக்குச் சுவையான செய்திகளையும்,



★

மணிவண்ணனின்
தோழன் வீரப்பன்



1. சொக்கி துரத்துகிருளா என்று வீரப்பா பார்க்கிருர். 2. சொக்கி பாய்ந்து வருகிருள். 3. கோயிலில்-சித்தர் 4. சித்தரை சந்திக்கும் முத்து வேலர் 5. செல்வி ஆடுகிருள்.

மகன், 'தங்கப்பதுமை' உதவி டைரக்டர் ஜேவியர் ஆகியோரிட மிருந்து கேட்டறிந்த விவரங்களைத் தான் கட்டுரை வடிவாக்கித் தந் திருக்கிறேன்.

ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'தங்கப்பதுமை'யில் கதா நாயகனுக வரும் மணிவண்ணன், ஒரு பெரிய வைத்தியரின் மகன். அவனைக் காதலிக்கும் செல்வி ஒரு பெரிய வணிகரின் மகள்.

இவர்களை வைத்துப் பின்னப் பட்ட இக்கதை, உறையூர் நகரைப் பின்னணியாகக் கொண்டது.

எனவே வெளிப்புறக் காட்சிகளை படமாக்கும் விஷயத்தில் உறை யூரின் சூழ்நிலை இருக்கிறதா என் பதை ஆராய வேண்டியிருந்தது.

தவிர, படத்தின் கதாநாயகனும்-கதாநாயகியும் நீராடும்துறையில் சந்தித்துக் காதல் கொள்வதாகவும் படக்கதை சித்தரித்தது. இந்தக் காட்சிகளைப் படமாக்கும் நீர்த்துறையும் உறையூரின் சாயலிலே இருக்க வேண்டும் என்று ஜூபிடர் பிக்சர்ஸார் விரும்பினுர்கள்.

இது விஷயமாக எந்த இடத்தில் இக்காட்சிகளைச் சென்று படமாக்கலாம் என்று ஒரு நாள் டைரக்டர் சாமி, கதாசிரியர் அரு. ராமனுதன், திரு சோமு முதலியோர் பேசிக்கொண்டிருந்தபோது, நடிகை எனெஸ்கே மதுரம் அங்கு வந்தார். குற்ருலத்தில் 'ஆனந்த விலாஸ்' என்ற, ஒரு பண்ணையாரின், வீடு இருப்பதாகவும், அங்கே இக்காட்சிகளைப் படமாக்கலாம் என்றும் மதுரம் தெரிவித்தார்.

"நாங்கள் குற்ருலத்திற்கு கிளம்பிப்போனேம். அங்கே ஸ்ரீமதி மதுரம் தெரிவித்த ஆனந்த விலாஸ் மாளிகையையும் கண்டோம். எங்களுக்குப் பூரண திருப்தி ஏற்பட்டு விட்டது. குற்ருலத்திலேயே இக்காட்சிகளையும், மற்றும் படத்தின் சில காட்சிகளையும் படமாக்கலாம் என்று முடிவு செய்தோம்'' என்ருர் டைரக்டர் ஏ.எஸ்.ஏ. சாமி.

''ஆமாம், ஏன் இக்காட்சிகளை குற்ருலத்தில் படமெடுத்தீர்கள்?'' என்றுசாமியிடம் கேட்டபோதுதான் இவ்வாறு பதிலளித்தார்.

6. புனலாடும் - மணிவண்ணனும் செல்வியும். 7. வண்டியில் பிரயாணம். 8. அருவியில் செல்வி.

மேல் இரண்டு
படங்கள்:
செல்விக்கு மண
வண்ணன் வைத்
தியம் செய்ய வரும்
போது காதல்
அரும்புகிறது;
'வள்ளுவன்
குறளை'
என்று பா
டியவா
றாகச்
செல்லும்
காதல்
ஜோடி
கள்.

கீழே:

உணவு
தயாரிக்
கும் ஆன
ந்த தம்பதி
கள்; கண்
ணகி விழா
வுக்கு கட்டியம்
கூறப்படுகிறது,
கரி மீதமர்ந்திருக்
கும் கட்டிளம்
கன்னியர்களால்.



கணேசனை கதாசிரியரும் டைரக்டரும் வரவேற்கிறார்கள்.



திரு. சோமுவுடன் கணேசன் படப்பிடிப்புபற்றி பேசுகிறார்.

தண்ணீரில் நிற்கும் சிவாஜிக்கு 'மேக்-அப்' போடப்படுகிறது

கடந்த ஜூன் மாதம் ஐந்து முதல் பதினாறு தேதி வரை 'தங்கப் பதுமை'க்கான வெளிப் புறக்காட்சிகள் இந்த இடத்திலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் படமாக்கப்பட்டன. இதற்காக சுமார் ஆராயிரம் மைல்கள் வரை பிரயாணம் செய்தனர் நடிகர்களும் கலைஞர்களும்.

விடியற்காலை ஐந்து மணிக்கே எல்லோரும் எழுந்து விடுவார்கள். காலைச்சிற்றுண்டி முடிந்ததும் ஆரம்பமாகும் படப்பிடிப்பு. மாலை–கதிரவன் மங்கி–ஒளி குன்றும் வரை நடைபெறும். ஆனால் பெரும்பாலான நாட்களில் கதிரவன் சரிவரக் கண்ணைத் திறக்கவில்லை; கூட மழையும் பெய்ய ஆரம்பித்து விட்டது. இதனால் காட்சி சுடப்படும்போது இடையிடையே நிறுத்தி வைக்க வேண்டியதாகி விட்டது.

முதல் நாள் பாபநாசத்தை அடுத்துள்ள கிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் எம். ஆர். சாமிநாதன் சம்பந்தப்பட்ட காட்சியை காலையில் படமாக்கினார்கள். சாமிநாதன் இதில் சித்தராக வருகிறார். கிருஷ்ணாபுரத்திலுள்ள கிருஷ்ணன் கோயில் பிரகாரத்தில் "விதியென்னும் குழந்தை கையில் உலகம் தன்னை – விளையாடக் கொடுத்து விட்டாள் இயற்கை அன்னை" என்ற பாட்டைப் பாடியபடி அவர் வரும் காட்சி சுடப்பட்டது.



சாமிநாதனுக்குப் படப்பிடிப்பு நடைபெற்று வந்த போது, அதே கோயிலின் வெளியிலே, பத்மினி தங்கப்பதுமைக்காக ஆடும் நடன மொன்றின் சில அடிகள் படமாக்கப் பட்டன.

மணிவண்ணன் என்ற கட்டிளம் காளையிடம் மனதைப் பறி கொடுத்து விடுகிருள் செல்வி. அவர்கள் சந்தித்த போதெல்லாம் அவர்களது காதலும் வளர்ந்து கொண்டே வந்தது.

ஒரு நாள் துணிந்து மணிவண் ணனை தான் காதலிக்கும் விவரத்தை தன் தந்தை முத்துவேலரிடம் கூறு கிருள் செல்வி — தன் தந்தையின் பதில் ஏதாயிருக்குமோ. எப்படியிருக் குமோ என்ற படபடத்துடன். ஆனல் முத்துவேலர் செல்வியின் விருப்பத் துக்கு இணங்கி விடுகிருர்.

"தான் காதலிப்பவனை மணக்க தன் தந்தை அனுமதித்துவிட்ட சந் தோஷத்தில் "என் வாழ்வில் புதுப் பாதை கண்டேன்" என்று செல்வி (பத்மினி) ஆடும் நடனம்தான் இது" என்று அக்காட்சிக்கு விளக்கம் தந்தார் உதவி டைரக்டர் ஜேவியர்.

அன்று பிற்பகல், இதே கோயிலை அடுத்துள்ள பாழும் மண்டபத்தில் காமெடியன் வி. ஆர். ராஜகோபால், முத்துலக்ஷ்மி. புளிமூட்டை கலந்து கொண்ட ஒரு ஹாஸ்ய கட்டத்தை படமாக்கினர் டைரக்டர் சாமி.

வி. ஆர். ராஜகோபால், இதில் மணிவண்ணனின் (சிவாஜி) தோழன் வீரப்பனுக வருகிருர். முத்துலக்ஷ்மி தான் செல்வியின் தோழி சொக்கி.

குளிக்கப் போகும் சொக்கியிடம் வம்பு பேசவே, வீரப்பனை துரத்து கிருள் அவள். அந்த வழியில் ஒரு பாழ் மண்டபம் இருக்கிறது. எண் ணெயும் சீயக்காயுமாக ஸ்நானம் செய்ய அங்கே அமர்ந்திருக்கிரு புளிமூட்டை.



யாரோ கூப்பிடவே எழுந்து அப்பால் அவர் சென்று விடுகிறார். வீரப்பனைத் துரத்தும் சொக்கியின் கையில் இந்த எண்ணெய் கிண்ணமும், சீயக்காய் கொட்டாங்கச்சியும் அகப்படுகின்றன. கொட்டாங்கச்சியை வீரப்பன் முகத்தில் அடிக்க, அது தவறிப் போய் புளி மூட்டையின் மீது பட்டு விடுகிறது.

இரண்டாவது தினம், 'ஆனந்த விலாஸ்' மாளிகையின் பின்புறமிருந்த படித்துறையில் . தாமிரபரணியில் - மணிவண்ணனும் செல்வியும் சந்திக்கும் காட்சிகள் எடுக்கப்பட்டன.

தன் தோழன் வீரப்பனுடன் புனலில் நீராட வருகிறான் மணிவண்ணன். அவர்கள் குளிக்க வரும் இடம் தனவணிகன் குமாரத்தி செல்வியின் பிரத்தியேக நீராடும் துறை. அங்கே செல்வி குளிப்பதாகவும், செல்லக்கூடாதென்றும் சொக்கி அவர்களைத் தடுக்கிறாள். சொக்கியிடம் வீரப்பன் பேசிக்கொண்டிருக்கும் போதே, மணிவண்ணன் மெள்ள நழுவிச் சென்று விடுகிறான்.

செல்வியும் மணிவண்ணனும் சந்திக்கிறார்கள். முன்னரே வைத்தியம் செய்யப் போய் அவளது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மணிவண்ணன் - செல்வியைப் பார்க்க, இருவரது நயனங்களும் பேசிக் கொள்ளுகின்றன.

1. "என் வாழ்வில் புதுப் பாதை கண்டேன்"—என்று பாடி ஆடுகிறார் பப்பி. 2. காமெடியன் ராஜகோபால்-முத்துலக்ஷ்மி சம்பந்தப்பட்ட காட்சிகள் நடப்பதை 'ஆனந்தவிலாஸ்' மாடியிலிருந்து கவனிக்கிறார் கணேசன்; அவரை ரசிகர்கள் கவனிக்கிறார்கள். 3. 'ஆனந்த விலாஸி'ல் மதுரத்திற்கு உணவு பரிமாறுகிறார் பத்மினி, 4. வெளிப்புறக் காட்சியில் உணவுப்பந்தி. சாப்பிடுபவர் இடமிருந்து திரு. சோமு. அரு. ராமநாதன்; காமிரா ராமசாமி; டைரக்டர். 5. 'ஆனந்த விலாஸ்' பின்புறமுள்ள வடிகாலில் பத்மினி பல் துலக்குகிறார். 6. படப்பிடிப்பில் வி. ஆர். ராஜகோபாலும்-முத்துலக்ஷ்மியும். 7. புனலாடும் பத்மினி. 8. சோமுவின் குடும்பத்தினரும், பத்மினியும் படமெடுத்துக் கொண்டார்கள் அங்கே.



கணேசன் 'மேக்-அப்' கலைப்பதை புளிமூட்டை கவனிக்கிறார். அருகிலிருப்பது காமெடியன் ராஜகோபால்.

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் மணிவண்ணனாக மாற்றப்படுகிறார் 'மேக்-அப்' கலைஞரால்.

தான் நடிக்கும் கட்டத்தில் வரும் 'வள்ளுவன் குறளே' என்ற பாடலை ஜேவியருடன் கேட்கிறார் நடிகர் திலகம்.

'மேக்-அப்' முடிந்த பிறகு சிவாஜி கணேசனுக்கு ஆடை அணிவிக்கிறார் காஸ்ட்டியூம் பொறுப்பாளர் நடராஜ்.

இந்தக் காட்சியுடன் மறு நாள் அதே இடத்தில் படத்தின் பிற்பகுதிக்குத் தேவையான சில காட்சிகளும் சுடப்பட்டன.

அடுத்த தினம், 8-ம் தேதியன்று படப்பிடிப்பு நடைபெறவில்லை-கதிரவன் தோன்ருததால்.

மறு நாள் 9-ம் தேதியன்று பாபநாசத்தில் குன்றுகளினிடையே கணேசனும் பத்மினியும் நடந்து செல்லும் காட்சிகளும், அவர்கள் இரட்டை மாட்டுவண்டியில் பிரயாணம் செய்யும் காட்சிகளும் சுடப்பட்டன. இத்துடன் ஊரைவிட்டு பிழைப்புக்காக வேறு ஊருக்குச் செல்லும் செல்வியும் மணிவண்ணனும் நடுவழியில் மரத்தடியில் சமைத்துச் சாப்பிடுவது போன்ற ஒரு காட்சியும் முண்டந்துறை என்ற இடத்தில் அன்றே படமாக்கப்பட்டது. ''இந்த குறிப்பிட்ட இடத்தில் மேற்படி காட்சியை எடுப்பதற்காக முயன்றபோது மழை பெய்தபடி இருந்தது. ஆயினும் இந்த ரமணியமான இடத்தைப் படமாக்காமல் விட்டுவிட மனம் வரவில்லை. கடைசியில் இரண்டு தினங்கள் காத்திருந்து இதைப் படமாக்கினேம்'' என்ருர் டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி.

மேற்படி காட்சியில் சில 18-ம் தேதியன்றும் படமாக்கப்பட்டன.

கடைசி நாளான 11-ம் தேதியன்று, பிரம்மதேசம் என்ற ஊரிலிருக்கும் பிரும்மதீஸ்வரர் என்ற ஆலயத்தில் இரண்டு முக்கியமான காட்சிகள் சுடப்பட்டன.

''நாங்கள் பாபநாசத்திலிருந்து குற்ருலத்திற்கு காரில் பிரயாணம் செய்து வந்த போது, மன்னர் கோயில் என்ற இடத்தில் தற்செயலாக இக்கோயிலைக் கண்டோம். கோயிலின் பாணி சூழ்நிலை அனைத்தும் உறையூர் காலத்துப் பிற்பட்ட பாணியில் இருந்ததால் சில காட்சிகளை அங்கே எடுத்தோம்.

''செல்வியின் தந்தை முத்துவேலரும், சித்தரும் கோயில் பிராகாரத்தில் சந்தித்து செல்வியின் திருமண விஷயமாகப் பேசுவது போன்ற ஒரு சம்பவம் காலையில் படமாக்கப்பட்டது.

''அன்று மாலை கோயிலின் வெளியே கண்ணகி விழாவுக்காக யானைமீதமர்ந்தபடி கன்னியர்கள் கட்டியம் கூறும் காட்சி காமிராவில் திணிக்கப்பட்டது. இதற்காக மூன்று யானைகள் கொண்டு வரப்பட்டன. முக்கூடல் திரு. ஹரிராம் சேட் இரண்டு யானைகளைத் தந்துதவினர். மற்ருென்று பொட்டலப்புதூர் என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டது.

''இதுதான் 'தங்கப் பதுமை'யின் ஆரம்பக் காட்சி.

''இதுவரை குற்ருலத்தில் நடைபெற்ற படப்பிடிப்பு விவரங்களைப் பற்றிப் படித்தீர்கள். இனி அந்தப் படப்பிடிப்புகளின் இடையே நடைபெற்ற சில ரஸமான தகவல்களையும் சொல்லி விடுகிறேன்.

''பாபநாசத்தின் மலைப் பிளவுகளில் பத்மினியும் கணேசனும் செல்லும் சில காட்சிகள் சுடப்பட்டன என்று சொன்னேனல்லவா? அவற்றின் மீது புள்ளிமானைப்போல் துள்ளி ஓடி, ஒவ்வொரு நூறு அடி உயரத்திற்கும் கீழே குனிந்து, ''இந்த உயரத்தில் நின்ருல் போதுமா, சார்?'' என்று என்னைப் பார்த்துக் கேட்பார் பத்மினி. எனக்கோ பத்தடி ஏறுவதற்குள் மூச்சு வாங்க ஆரம்பித்து விடும்.

''மற்ருெரு சந்தர்ப்பத்தில் அருவியின் குறுக்காக பத்மினி செல்ல வேண்டிய காட்சி படமாக்கப்பட வேண்டி யிருந்தது. பயங்கரமான அந்த இடத்தில், அனுயாசமாக நடந்து சென்ருர் பத்மினி'' என்ருர் டைரக்டர் சாமி.



1. டைரக்டர் சாமியும் காமிரா ராமசாமியும் 2 'அடுத்ததை எங்கு படம் பிடிக்கலாம்' என்று யோசிக்கிறார் சோமு. 3. கணேசனுக்கு சற்று ஓய்வு. 4. மழையிலும் நனைந்தனர் கலைஞர்கள். 5. திரு. சிவனுப்பாண்டியதேவரும் சிவாஜியும் நீராடுகின்றனர். 6. மழலை பேசும் குழந்தையுடன் 'வசன வேந்தர்' சிவாஜி கணேசன்.

படப்பிடிப்பு வைத்திருந்த முதல் மூன்று தினங்களில் திருநெல்வேலியில் சிவாஜி கணேசன் கட்டபொம்மன் நாடகங்களை நடத்தினார். நாடகங்கள் இரவு 9 மணிக்கு ஆரம்பமாகும். நாடகம் நடைபெறும் இடத்திற்கும் ஆனந்த விலாஸுக்கும் இடையே 36-மைல்கள் இருந்தன.

கணேசன் மாலை வரை படப்பிடிப்பில் கலந்துவிட்டு, அது முடிந்ததும் திருநெல்வேலிக்கு காரில் சென்று, இரவு நாடகத்தில் நடித்துவிட்டு, மீணடும் விடியற்காலை மூன்று மணிக்கெல்லாம் ஆனந்த விலாஸ் திரும்பி, மறுநாள் காலை 7 மணிக்கு, அலுப்போ சோர்வோ இல்லாமல் படப்பிடிப்புக்குத் தயாராகி விடுவார்.

நாடகம் இல்லாத நாட்களில் நண்பர்களிடம் பேசிப் பொழுதைப் போக்குவார்- முண்டந்துறை என்ற இடத்தில் படப்பிடிப்பு நடைபெற்று வந்தபோது ஒரு விளையாட்டுப் போட்டியையும் நடத்தினார் சிவாஜி.

அதாவது அங்கு கிடந்த குழாங்கல்லில் பெரிதாக ஒன்றை எடுத்துக் கொண்டு - இதை யார் அதிக தூரம் வீசி எறிகிறார்கள் என்பதைப் பார்ப்போம் - என்று ஒரு சிறு போட்டியை வைத்தார்.

போட்டியில் அதிக தூரம் கல்லை எறிந்து வெற்றி பெற்றது யார் தெரியுமா? நடிகர் திலகம்தான். பதினேழு அடி தூரத்திற்கு அதை வீசி எறிந்தார். குறைந்த அளவில் நின்றவர் - ஐந்தடி வீசிய 'தங்கப் பதுமை' ஆசிரியர் அரு. ராமநாதன்.

இது தவிர, திரு. சோமுவின் மைந்தர் திரு. காசியை, பந்தைப் போன்ற சிறு கற்களை வீசச் செய்து, அருகிலிருந்த ஒரு மட்டையை எடுத்து கிரிக்கெட் ஆட ஆரம்பித்து விட்டார் ஒரு நாள் - அதே இடத்தில்'



படப்பிடிப்பில் கலந்து கொண்ட பத்மினியும் ஸ்ரீமதி சாமியும்.

கணேசன் ஒரு வேட்டைப் பிரியர் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அங்கு தங்கியபோது, இரண்டொரு தினங்கள் துப்பாக்கியைத் தோளில் போட்டுக் கொண்டு வேட்டையாடியும் வந்தார். பகல் உணவுக்குப் பின்னர்தான் அவர் வேட்டைக்குக் கிளம்புவார். அவரது குண்டுக்கு இலக்கானவை சில நீர்க்காகங்கள் தான்!

இக்கட்டுரையை முடிக்குமுன் திரு. சோமு அவர்கள் என்னிடம் பிரத்தியேகமாகக் குறிப்பிட்ட மூவரைப் பற்றிமட்டும் சொல்லி விடுகிறேன்.

இந்தப் படப்பிடிப்பு கோஷ்டியில் அறுபத்தைந்து நபர்கள் இருந்தனர். இவர்கள் அனைவருக்கும் 'ஆனந்த விலா'ஸில் தங்க இடமளித்து, மற்றும் தேவைப்பட்ட எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுத்தவர் திரு.சிவனுப்பாண்டிய தேவர் என்ற பெரும் பண்ணைக்காரர். கதிரவன் அவரது கட்டளைக்கு அங்கு அடிபணியவில்லையே தவிர, மற்றவை எல்லாம் அவரது ஆணைக்கு அடங்கி நடந்தன.

இரண்டாமவர் பீடிச்சக்கரவர்த்தியான முக்கூடல் திரு. ஹரிராம்சேட். அவர் திருநெல்வேலியில் இந்தக் கோஷ்டியினர் தங்க வந்தபோது பல வசதிகளைச் செய்து கொடுத்தார். படப்பிடிப்புக்காக தனது இருயானைகளைக் கொடுத்துதவினர்.

அடுத்துக் குறிப்பிடப்படவேண்டியவர்கள் எஸ். கே. பிக்சர்ஸ் திரு. கல்யாணசுந்தரம், அவரது மைத்துனர் திரு. கணபதிஇருவருமாவர். திரு. கணபதி கோஷ்டியுடன் கூடவே இருந்து படப்பிடிப்பு தங்கு தடையின்றி நடக்க உதவி புரிந்தார். ஒரு கட்டத்தில் சுமார் ஐயாயிரத்துக்கு மேல் படப்பிடிப்பைப் பார்க்கத் திரணடுவிட்ட கூட்டத்தினரைக் கணடு தயாரிப்பாளரும், டைரக்டரும் தயங்கியபோது, "நீங்கள் கவலைப்படாதீர்கள். படப்பிடிப்பைத் துவக்கும் போது சொல்லுங்கள். நான் அவர்களை அமைதியாக இருக்கச் சொல்கிறேன்" என்று தைரியமூட்டி, அப்படியே செய்தும் காட்டினர்.

வெளிப்புறக் காட்சிகளைப்படம் பிடிப்பதில் எவ்வளவு சிரமங்கள் உள்ளன என்பதை நேயர்கள் இக்கட்டுரையின் மூலம் ஓரளவு அறிந்திருக்கலாம்.

முடிவில், நான் எங்கள் ஸ்தாபனத்தின் சார்பில், எங்கள் புகைப்பட நிபுணரை உடன் அழைத்துச் சென்று வசதிகள் கொடுத்து, இக்கட்டுரைக்கான குறிப்புகளையும் கொடுத்துதவியதற்காக ஜுபிடர் ஸ்தாபனத்திற்கும், குறிப்பாக திரு. சோமு, திரு. சாமி, திரு. காசி ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'பாபநாசத்தில் பத்துநாட்கள் என்ற இக்கட்டுரையில் பாபநாசத்தில் பத்து நாட்கள் படப்பிடிப்பு நடைபெறு விட்டாலும் அதை மெய்யமாக கொண்ட அதன் சுற்றுப்புறங்களில் படப்பிடிப்பு நடைபெற்றதால், இக்கட்டுரைத் தலைப்பு பொருத்தமானதாகவே இருக்கும் என்று எண்ணுகிறோம். படத்தில் இக்காட்சிகளைக் காணும்போது பாபநாசத்தின் நினைவு நிச்சயம் உங்களுக்கு வரும்.

சோகத்தின் மெருகை, தன் சொர்ண பிம்ப உடலிலே ஏற்றி, உள்ளத்தின் வேதனைக் குமுறலை விழியின் ஓரத்திலே கண்ணீர் முத்துக்களாக்கி - இதோ நிற்கிருளே, அவள் தான் பார்வதி (பத்மினி).

அவள் எண்ணினுள் எளி தென்று குடிகார சங்கரை (சிவாஜி கணேசன்) அந்தப் பேயிடமிருந்து விடுவிப்பதை. ஆனல் மதுவை உறுதுணையாகக் கொண்ட ஓவியன் சங்கர், பாருவின் திட்டங்களை பாலைவனத்தின் கானல் நீராக்கி விட்டான்.

ஒருநாள் பார்வதி சிந்தித்தாள். ஒரு வேஷம் போட்டாள்.

வானம்பாடிகள் போல - அவர்கள் இசைபாடித் திரியும் மலர்ச் சோலையிலே பார்வதி தனித்திருந்தாள். வழக்கம்போல தேடி வந்தான் சங்கர். ஆனல் வழக்கம் போல் பாருதான் இல்லை. அவள் தங்கம் நிகர்மேனியில் சாராயத்தின் நெடி வீசியது. போதையிலே அவள் தடுமாறினள். விவரம் கேட்டான் சங்கர்.

சங்கரைப்போல அவளும் குடித்திருப்பதாகச் சொன்னுள்.

சங்கர் - சீறி விழுந்தான் சிறைபட்ட சிங்கம்போல. "குடிகேடி" என்று கொக்கரித்து. அவளை நிலத்தில் தள்ளிவிட்டு வெளியேறினன். சங்கர் சென்றதும் பாரு சிரித்தாள் 'தான் குடித்தது போல் நடித்தது வெற்றி பெற்று விட்டது; சங்கர் குடி ஒரு கெட்டப் பழக்கம் என்பதை உணர்ந்து விட்டான்' என்று.

நீதிபதியைத் தயாரித்த விஜயா பிலிம்ஸின் மூன்ருவது சமூகச் சித்திரத்திற்காக இக்காட்சி படமாக்கப்பட்டது. ஆர்.எஸ்.மணி டைரக்ட் செய்யும் இதன் ஒளிப்பதிவாளர் வின்சென்ட். திரைக்கதை வசனம் ஸ்ரீதர் எழுதுகிருர்.



முன் பக்கம் வார்த்தைகளில் மேற்படி காட்சியைப் படித்தீர்கள். இதோ அச்சொற்களுக்கு விளக்கச் சித்திரம்!

'மேனா' இன்று புகழின் உச்சியில் இருக்கிறார். அவரது இந்த வெற்றிக்குக் காரணம் என்ன?

'ஸாரதி' எழுதும்

இவர்தான் 'மேனா'

"முள்ளைக் கடந்துதான்—
ரோஜா
மலரைத் தீண்ட முடியும்"—

என்று ஒரு வடமொழிப் பாட்டு இருக்கிறது. வெற்றியின் எல்லையைத்தொடு முன் இடர்கள் பல ஏற்படத்தான் செய்யும் என்பதன் பொருள்தான் இச்செய்யுள். திரு. மேனா அவர்கள் இதை, தொழிலில் காலடி எடுத்து வைத்த போதே நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். இல்லாவிடில் 'அல்லி அர்ஜுனா என்ற அவரது முதல் தயாரிப்பில் ஏற்பட்ட சங்கடங்களைத் தொடர்ந்து படப்பிடிப்பில் மீண்டும் இறங்க முயற்சித்திருப்பாரா?

ஆனால் மேனா இம்முறை சற்று சாவதானமாகவே தனது இரண்டாவது படத்திற்குத் திட்டம் போட்டார். ஆனால் இதிலும் பல சோதனைகள் புதிதாக முளைத்தன,

மேனாவின் இரண்டாவது படம் 'ரத்னாவளி' நாடக மேடையில் மிகவும் பிரபலமடைந்த இந்தக் கதையை கல்கத்தாவிலிருந்த பயனீர் பிலிம்ஸ் ஸ்டுடியோவில் தயாரிப்பதென்று முடிவு செய்தார். பிராம்ஜி மதன் என்பவரின் ஸ்டுடியோ இது, அந்த நாளில் ஸ்டுடியோவுடன், கலைநுணுக்க டைரக்டர் ஒருவரையும் தயாரிப்பாளர்களுக்கு உதவிக்குத் தருவார்கள்.

'ரத்னாவளி' படத்தில் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, ரத்னா பாய் சகோதரிகள் ஸி. எஸ். சாமண்ணா, சுப்பிரமணிய முதலியார் முதலியோர் நடித்தனர். சுமார் ஒன்றேகால் லக்ஷ ரூபாயில், நாற்பத்தைந்தே நாட்களில் எடுக்கப்பட்டது இப்படம். ஆனால் படமெடுத்து முடிக்கப்பட்ட பின்னர்தான் அதில் உள்ள ஒரு பெரிய குறை தெரிந்தது.

'ரத்னாவளி' ஒரு புதிய காமிராவில் படமாக்கப்பட்டது.

படத்தயாரிப்பின் போது வசனங்கள் ஒரு கருவியில் பதிவாகப்படும். காட்சி தனியே காமிராவில் பதிவாக்கப்படும். இந்த இரண்டின் வேகமும் ஒன்றாக இருக்கும்.



ஹம் பஞ்சி ஏக் தால்கே' என்ற குழந்தைகள் படத்தைத் தயாரித்ததற்காக, பாரத ஜனாதிபதியிடமிருந்து, பிரதமர் நேருவின் தங்கப் பதக்கத்தைப் பெறுகிறார் திரு. ஏவி. எம்.



ஆனல் ரத்னவளியின் படப்பிடிப்பின் போது, காமிராவின் வேகத்திற்கேற்ப-ஒலிப்பதிவு கருவியின் வேகத்தை வைக்கவில்லை. இதனல் படம் பூராவும் ஒலியும் ஒளியும் இணையவேயில்லை.

மேனு இந்தச் செய்தி கேட்டுத் திடுக்கிடவில்லை. பதட்டப் படவுமில்லை. இத்தவறைத் திருத்துவது எப்படி என்று அமைதியாக ஆராய்ந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் படத்துறையின் கலை நுணுக்கங்களை ஆழ்ந்து ஆராயவும், அவற்றைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளவும் மேனுவினல் முடிந்தது.

படத்தில் ஒலிப்பதிவே தேவையில்லாத இடைவெளிகளைக் குறித்தார். ஒவ்வொரு ஐம்பது அடிக்கும், இரண்டு பிலிம்கள்தான் தேர்ந்தன. இவற்றை வெட்டியெடுத்து விட்டு, ஒலியை-ஒளியோடு இணையும்படிச் செய்வதில் ஓரளவு வெற்றியும் பெற்ருர்.

இது மட்டுமல்ல. படப்பிடிப்பின் நடுவிலே-படத்தை டைரக்ட் செய்து வந்த வங்க டைரக்டருக்கும் தயாரிப்பாளர்களுக்கும் மனஸ்தாபம் வரவே அவர் விலகி விட்டார். டைரக்ஷனைப் பற்றி ஒன்றும் தெரியாத-அனுபவமில்லாத மேனு, இதற்காகவும் கலங்கவில்லை. தன்னுடன் இருந்தவர்களையே - அவர்களுக்கும் டைரக்ஷன் துறையில் அனுபவம் கிடையாது-படத்தைத் தொடர்ந்து டைரக்ட் செய்யச் சொல்லி முடித்தார்.

முதல் இரண்டு படங்களில் ஏற்பட்ட அனுபவங்கள், "இனி சொந்த ஸ்டுடியோ இல்லாமல் படப்பிடிப்பில் இறங்கக்கூடாது" என்ற எண்ணத்தை மேனுவின் உள்ளத்தில் எழுப்பி விட்டன. அடுத்து அவரது கவனம் அதில்தான் சென்றது.

பெங்களூரின் பிரபல பட விநியோகஸ்தரான திரு. ஜெயந்திலாலுடனும்-மற்றும் சிலருடனும் சேர்ந்து பிரகதி பிக்சர்ஸ் ஸ்தாபனத்தை ஆரம்பித்தார் மேனு. அதன் சார்பில் பெங்களூரிலேயே ஒரு ஸ்டுடியோவை நிர்மாணிக்கத் திட்டமிட்டு, அதற்கான கருவிகளை வரவழைப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்தார்.

அப்போது யுத்தகாலம். இரண்டாவது உலகப்போர் ஆரம்பமாகியிருந்தது. கருவிகள் வரத் தாமதப்பட்டன. இத்தாமதத்தை ஜெயந்திலாலால் பொறுக்க முடியவில்லை. அவர் மேனுவிடம் ஒரு யோசனை சொன்னர்.

பூனு பிரபாத் ஸ்டுடியோவின் பாகஸ்தர்களில் ஒருவரான திரு. தைபர் தனியே பிரிந்து வந்து, 'நந்தகுமார்' என்ற படத்தை எடுக்கத் திட்டம் வகுத்திருப்பதாகவும்-அவருடன் சேர்ந்து அதே படத்தை நாமும் எடுக்கலாம் என்றும் கூறினர்.

மேனு இதற்கு இணங்கினர். 'நந்தகுமார்' தமிழ்ப் படத்தில் நடிப்பதற்கான நடிகர்கள் தேர்தலில் தீவிரமாக முனைந்தார்.

டி. ஆர். மகாலிங்கத்தை மேனு ஒரு நாடகத்தில் பார்த்திருந்தார். அவரது நினைவு உடனே அவருக்கு வந்தது. நேரே மகாலிங்கத்திடம் சென்று அவரையும், அங்கிருந்த டி. ஆர். ராமச்சந்திரனையும் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார். நாடக மேடையில் பிரபல மடைந்த எஸ். வி. வெங்கட்ராமனையும் முதன் முதலாக தன் படத்திற்கு சங்கீத டைரக்டராக அமர்த்தினர்.

மேனுவுக்கு அப்போது ராமய்யர் என்ற ஹோட்டல் முதலாளி ஒருவர் பரிச்சயமாகி யிருந்தார். நாடகம், நடனம் மற்றும் இவைபோன்ற நிகழ்ச்சிகளில் திறமை வாய்ந்தவர்களைப்பற்றி தெரிவிப்பார். ரூபாய்க்கு எட்டு போட்டோக்கள் வீதம்

எடுத்த, பெண்மணியின் புகைப் படத்தை மேனுவிடம் கொண்டு வந்தார் ராமய்யர். மேனுவின் பார் வையில் அந்தப் பெண்மணி ஒரு நடிகையாகத் திகழுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிய வந்தது. உடனே ராமய்யருடன் திருச்சிக்குப் புறப்பட்டார் அவர். அப்போது அப்பெண்மணி திருச்சி யில் தங்கி யிருந்தார்.

மேனுவுக்கு அவரை நேரில் பார்த் ததும் பூரண திருப்தி ஏற்பட்டது. இருநூற்றைம்பது ரூபாய்க்கு தனது படத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதற்கு முன்பண மாக ரூபாய் ஐம்பதும் கொடுத் தார். ஏவி. எம். அன்று தேர்ந் தெடுத்த அப்பெண்மணி அவரது தீர்க்க தரிசனத்தின்படியே எதிர் காலத்தில் ஒரு மிகச் சிறந்த நடிகை யாக வந்தார்.

ஆம், மேனு அன்று தேர்ந் தெடுத்தது டி. ஏ. மதுரத்தைத் தான்!

நந்தகுமார் தைபரின் டைரக்ஷ னில் ஹிந்தி, மராட்டி மொழிகளில் தயாராகியது. பதினோராயிரம் அடி களில் முடிந்தது. படம் முடிந்த தும், பம்பாயிலிருந்த ஒருவர் அதன் மராட்டி, ஹிந்திப் பதிப்பு களின் உரிமையை தைபரிடம் ஏழு லக்ஷம் ரூபாய்களுக்குக் கேட்டார். தைபர் மறுத்து விட்டார்.

தைபருக்கு படத்தின் மீது அதிக நம்பிக்கை இருந்தது. கிருஷ்ணன் மாடு விரட்டும் காட்சி யொன்றில் ஆயிரம் மாடுகளையும், மற்றொரு தெருக் காட்சிக்காக பிரம் மாண்டமான தெருவு ஒன்றைப் போட்டும் ஏராளமான பொருட் செலவில் இப்படத்தைத் தயாரித் திருந்தார் தைபர்.

ஆனல் படம் திரையிடப்பட்ட தினமே, இரண்டாவது காட்சி நடைபெறவில்லை. படம் படு தோல்வி யடைந்தது.

ஹிந்திப் படத்திற்கு நேர்ந்த இக் கதியைக் கேட்ட மேனுவுக்கும் பகீ ரென்றது. உடனே ஓடிப் போய் படத்தைப் பார்த்தார். படத்தின் தோல்விக்கான காரணங்கள் அவ ருக்கு 'பளிச்' சென்று விளங்கியது. கம்சனும், நாரதரும் இல்லாத 'கிருஷ்ணலீலா'வை யார் தான் ரஸிக்க முடியும்?

மேனு உடனே தன் திட்டங்களை மாற்றினர். தமிழில் தயாரித்து முடித்திருந்த 'நந்தகுமார்' படத்தி லிருந்து ஆராயிரம் அடிகளை நீக்கி னர். கம்சனும் நாரதரும் சம்பந்தப் பட்ட சுமார் எட்டாயிரம் அடிகளை பம்பாய் ஸ்டுடியோ யொன்றில் புதி தாகத் தயாரித்து வெளியிட்டார்.

நந்தகுமார் தமிழ்ப்படம் ஒரு வெற்றிப்படமாக அமைந்தது. டி. ஆர். மகாலிங்கம் நடித்த முதல் பட மும் இதுதான்.

நந்தகுமார் படம் திரையிட்டபின் மேனுவிடமிருந்து திரு. கே. எஸ். நாராயண அய்யங்கார் விலகிக் கொண்டார். பெங்களூரில் ஸ்டுடியோ நடத்தும் யோசனையும் கைவிடப்பட்டது.

பெங்களூரில் ஸ்டுடியோ ஏற் படுத்தா விட்டால் தனக்கு வசதிப் படாது என்று திரு ஜெயந்திலா லும் தெரிவித்து விடவே, அவரது பங்குகளையும் விலைக்கு வாங்கிக் கொண்டு, 1940-ல் சென்னையில் பிரகதி ஸ்டுடியோவை நிர்மாணித் தார் மேனு.

மேனுவின்வாழ்க்கையில் ஏற்பட்ட முதல் பெரிய திருப்பம் இது. அத் துடன் அவர் கண்டு வந்த இன்பக் கனவுகள் நினைவதற்கான அறி குறியாகவும் இது இருந்தது.

பிரகதியில் இரண்டே படப் பிடிப்பு கொட்டகைகள் தான்

நிர்மாணிக்கப்பட்டன. அறுபது அடி நீளமும் நாற்பதடி அகலமும் கொண்டதுதான் பெரிய கொட்டகை. மற்றென்று இருபத்தைந்து அடி அகலமும் நாற்பதடி நீளமும் கொண்டது. ஸ்டுடியோவை நிர்மாணித்தவுடன் 'பூகைலாஸ்' படத்தைத் தயாரித்து வெளியிட்டார் மேனு. அடுத்து 'சபாபதி' என்ற முழு நீள ஹாஸ்யப் படத்தை, தன் சொந்த டைரக்ஷனில் தயாரித்தார் இவர். தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் முழு நீள ஹாஸ்யப்படம் இதுதான்.

'சபாபதி'யை வெளியிட்ட கையோடு 'மேனு' மற்றெரு துணிகர முயற்சியில் இறங்கினர். அதுதான் கன்னடத்தில் வெளிவந்த 'ஹரிச்சந்திரா'வைத் தமிழ்ப்படுத்தி வெளியிட்டது.

அன்றுவரை தமிழ் நாட்டில் யாரும் இம்மாதிரி செய்ததில்லை. தவிர, பிரபல நக்ஷத்திரங்கள் நடித்த 'ஹரிச்சந்திரா' தனித் தமிழ்ப் படமும் தயாராகி வந்தது. மேனுவின் இந்த முயற்சி பைத்தியக்காரத்தனமானது என்று பலரும் எண்ணினார்கள்.

ஆனல் மேனுவின் உள்ளத்தில் நிறைந்து நின்ற துணிவு இதை லக்ஷியம் செய்யவில்லை. தவிர, நியூ தியேட்டர்ஸ் அச்சமயம் வெளியிட்டிருந்த 'டாக்டர்' என்ற படம் அவருக்குப் பக்கதுணையாக நின்றது. அதன் பாதிப் பகுதி வங்க மொழியிலிருந்து ஹிந்தியில் 'டப்' செய்யப்பட்டிருந்தது.

அப்போது பிரகதியில் ஒலிப் பதிவு இலாக்காவை நிர்வகித்து வந்தவர் திரு. வி. எஸ். ராகவன். அவரும் செட்டியாருக்குப் பக்கபலமாக நின்றார்.

ஹரிச்சந்திராவில் மயான காண்டத்தில்தான் வசனம் அதிகம். லக்ஷ்மிபாய் கன்னடத்தில் பேசும் அந்தக் காட்சியை தமிழில் முதன் முதலாக சோதனைக்கு 'டப்' செய்து பார்த்தார்கள்.

சோதனை வெற்றிகரமாக முடியவே, படம் பூராவையும் 'டப்' செய்து வெளியிட்டார் மேனு. இந்தியாவிலேயே 'டப்' செய்யப்பட்டு வெளியிடப்பட்ட முதல் படம் இதுதான். இது வெற்றிகரமாக ஓடியதோடு, மேனுவின் சாதனையைப் பிறர் வியக்கும்படியும் செய்து விட்டது.

இதற்கிடையில் மேனுவுடன் கூட்டாக இருந்த நண்பர்கள் நக்ஷத்திர நடிகர்களைக் கொண்டு ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட வேண்டும் என்று யோசனை தெரிவித்தார்கள். மேனுவுக்கு இதில் பூரண விருப்பம் இல்லை.

"நக்ஷத்திர நடிகர்கள் இல்லாமல்தான் நாம் இதுவரை படங்கள் தயாரித்து, வெற்றி கண்டு வந்திருக்கிறேம்" என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார் மேனு. ஆனல் நண்பர்கள் தொடர்ந்து வற்புறுத்தவே இணங்கினர்.

அப்போது தியாகராஜ பாகவதர் புகழின் சிகரத்தை எட்டிப் பிடித்திருந்தார். 'மங்கம்மா சபதம்' வெளியிடப்பட்டு வசுந்தராதேவியும் தமிழகமெங்கும் பிரபலமாகி யிருந்தார். இவர்களிருவரையும் இணைத்து 'ராஜயோகி' என்ற படத்தை எடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இதற்கும் முன்னரே பாகவதரை வேலன், வேடன், விருத்தனக வைத்து 'ஸ்ரீவள்ளி' யைத் தயாரிப்பதென்றும் ஒரு எண்ணம் இருந்தது.

பாகவதருக்கு ரூபாய் நாற்பதாயிரம் தருவதென்று ஒப்பந்தமாகியது. 'ராஜயோகி'க்கான பாடல்களும் சில பதிவாக்கப்பட்டன. ராஜயோகியின் பூஜாக்கிரகத்துக்காக பிரகதியின் பெரிய படப்பிடிப்பு

கொட்டகையில், ஐயாயிரம் ரூபாய் செலவில் ஒரு பெரிய ஸெட்டும் போடப்பட்டது.

ஆனுல் 'ராஜயோகி' பலவித காரணங்களால் படமாக்கப்படவேயில்லை. சுமார் ஒன்றரை லக்ஷம் ரூபாய் செலவழிந்ததே தவிர, படம் வளரவே யில்லை. நக்ஷத்திர நடிகர்களை வைத்து படமெடுக்கும் யோசனை மேனுவின் நண்பர்களிடையே யிருந்து நழுவ ஆரம்பித்தது. மேனுவின் எண்ணப்படியே அடுத்த தயாரிப்பை விட்டு விட்டனர்.

மேனு 'ஸ்ரீவள்ளி'யைத் தேர்ந்தெடுத்தார். மதுரையில் மகாலிங்கம் அப்போது நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தார். மகாலிங்கத்தின் குரலில் அபார இனிமையைக்கண்ட மேனு, வேலனுக வள்ளியில் நடிக்க அவரே ஏற்றவர் என முடிவு செய்தார். மூவாயிரம் ரூபாய் சன்மானத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்தார் மேனு. அவருக்கு ஜோடியாக குமாரி ருக்மணியை ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஸ்ரீ வள்ளியை மேனு டைரக்ட் செய்தார், ஏ. டி. கே. யின் கூட்டுறவோடு. படம் ஒரு மகத்தான வெற்றியாக முடிந்தது.

ஸ்ரீவள்ளி படம் வெளியானவுடன் பிரகதியில் கூட்டாக இருந்த நண்பர்கள் மேனுவிடமிருந்து விலகி விட்டார்கள். யுத்த நெருக்கடி காலம் அது.

மேனு சொந்தத்தில் ஒரு புதிய ஸ்டூடியோவை ஆரம்பிக்க முயற்சித்தார். ஆனுல் ஸ்டூடியோ நடத்துவதற்கு மட்டுமல்லாமல், மின்சாரத்தின் உபயோகத்திற்கும் 'லைசென்ஸ்' கிடைக்கவில்லை. மேனுவுக்கு, காரைக்குடி தேவகோட்டை ரஸ்தாவில் இருந்த ஒரு நாடகக் கொட்டகை வெற்றுக இருப்பதும், அதற்கான மின்சாரப் பெர்மிட் இருப்பதும் தெரிந்தது. அந்த நாடகக் கொட்டகையையே ஸ்டூடியோவாக்கி விடுவது என்று முடிவு செய்தார். பலர் இவரது யோசனையைக் கண்டு பரிகசித்தனர். 'நாடகக் கொட்டகையை படப்பிடிப்புக் கொட்டகையாக மாற்றுவதா?' என்று எதிர்க்கேள்வி போட்டனர்.

மேனு நினைப்பதை செய்து முடிக்கும் திடம் வாய்ந்தவர். அதன்படியே தான் நினைத்தபடி, காரைக்குடியில் இருந்த அந்த நாடகக் கொட்டகையை 'ஏவி.எம். ஸ்டூடியோ'வாக மாற்றினுர் மேனு. மேனுவின் வாழ்க்கையில் ஏற்பட்ட இரண்டாவது பெரிய திருப்பம் இது. இந்த ஸ்டூடியோவில் 'நாம் இருவர்' படப்பிடிப்பை ஆரம்பித்தார்.

நாடகக் கொட்டகையாதலால் அதன் மேல்கூரையைத் தாங்குவதற்காக இருபுறமும் சிறு இடைவெளி விடப்பட்டு வரிசையாக கம்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கம்பங்களை அகற்ற முடியாது. எனவே வீடு, அரண்மனை போன்ற காட்சிகளில்அவற்றை மறைத்து, தூண்களாக்கி விடுவார்கள்; தோட்டம் போன்ற கட்டங்களில் அது மரமாகி விடும். 'வேதாள உலக'த்தில் தத்தனை அரக்கர்கள் பிடித்துக் கொண்டு, அரசவை மண்டபத்துக்கு வரும்போது, நாடகக் கொட்டை பூராவும்'ஸெட்' போடப்பட்டது. இதில் அந்த கம்பங்கள் வரிசையாக அரண்மனைத் தூண்களாக்கப்பட்டிருப்பதை படத்தைப் பார்த்தவர்கள் நினைவுறுத்திக் கொண்டால் புரிந்துவிடும்.

'நாம் இருவர்' ஒரு சமூகக்கதை. 'சமூகக்கதைகள் வெற்றி பெறுமா?' என்று மற்றவர்கள் யோசித்து வந்த நேரத்தில் இதை வெளியிட்டார் மேனு. இது மகத்தானதொரு வெற்றிப்படமாக அமைந்ததுடன், தமிழ்ப்படவுலகிலே சமூகப் படங்

களுக்கு ஒரு புதிய ஆரம்பத்தையும் உண்டாக்கி விட்டது. அடுத்து 'வேதாள உலகம்' காரைக்குடியில் தயாராகியது.

காரைக்குடியிலிருப்பதை விட சென்னையில் ஒரு ஸ்டுடியோ இருந்தால் வசதியாக இருக்கும் என்று நினைத்தார் மேனா. யுத்த கெடுபிடிகள் முடிவடைந்து, நாடும் சுதந்திரம் அடைந்த சமயம் அது.

சென்னை கோடம்பாக்கத்தில் நிலத்தைப் பார்த்தார். முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான அந்த இடத்தை ஒண்ணே

கால் லக்ஷம் ரூபாய் வரை விலைக்குக் கேட்டார் மேனு. தர மறுத்த அவர், சுதந்திரத்திற்குப் பின் பாகிஸ்தான் போக விரும்பவே முப்பத்தேழாயிரத்து ஐநூற்றுக்கு அதே இடத்தை மேனுவுக்கு விற்றார். இதிலேயே மேனுவிற்கு அதிருஷ்டத்தின் முத்திரை பதிந்து விட்டது.

அக்டோபர் - 1948-ம் ஆண்டு மேனு ஸ்டுடியோவுக்கான இடத்தை வாங்கினார். படப்பிடிப்புக்கான கொட்டகைகள் தவிர, மற்ற எல்லா இலாக்காக்களுக்கும் காரைக்குடியில் செய்தது போல, குடிசைகளைப் போட்டார். அதே வருடம் டிசம்பரில் 'வாழ்க்கை' படத்திற்கான ஒத்திகைகள் நடக்க ஆரம்பித்தன. 1949-ல் ஜூனில் படப்பிடிப்பு ஆரம்பமாகி, டிசம்பரில் 'வாழ்க்கை' திரையிடப்பட்டது. மேனு இந்தப் படத்தில் வைஜயந்திமாலாவை திரையுலகுக்கு கதாநாயகியாக அறிமுகப்படுத்தினார்.

வாழ்க்கை ஒரு மகத்தான வெற்றிப் படமாக அமைந்தது.

அடுத்து 'ஓரிரவு', 'செல்லப் பிள்ளை', 'பெண்' முதலிய படங்களுக்குத் திட்டமிட்டார் மேனா.

அப்போது வட இந்தியாவில் ஹிந்தி 'சந்திரலேகா'வையும், 'அபூர்வ சகோதரர்களையும் வெளியிட்டு, ஹிந்திப் படவுலகைக் கைப்பற்றினார் ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன்.

அவர் தன் சக தயாரிப்பாளர்களைச் சந்திக்கும் போதெல்லாம் "நீங்களும் ஹிந்திப் படங்கள் எடுங்களேன்" என்று ஓயாது சொல்வார். மேனாவிடமும் பன்முறை சொல்லியிருக்கிறார்.

வாழ்க்கை - தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் பெற்ற வெற்றியும், வாசனின் ஊக்கமும், 'மேனா'வை ஒரு புதுப் பாதையில் அடியெடுத்து வைக்கச் செய்தன. ஆம், வாழ்க்கையை ஹிந்தியில் தயாரிக்க முடிவு செய்து, 'பஹார்' என்ற பெயரில் அதை வெளியிட்டார். மேனாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட மூன்றாவது பெரிய திருப்பம் இது.

அடுத்து 'பெண்'ணும் ஹிந்தி பேசினாள்; வாகை சூடினாள்.

தமிழ்ப் படங்களைப் போல, ஏவி. எம். கலைக்கூடத்திலிருந்து தொடர்ந்து ஹிந்திப் படங்களும் வெளிவர ஆரம்பமாயின.

இதற்கிடையில் சென்னையில் சர்வதேச திரைப்பட விழா ஒன்று 1952-ல் நடைபெற்றது. பல நாடுகளிலிருந்து சிறந்த படங்கள் அதுசமயம் சென்னையில் திரையிடப் பட்டன. ஜப்பானிலிருந்து வெளிவந்த ஆடல் பாடலின்றிய, 'ராஷ்ஹோமன்' என்ற படம் செட்டியார் அவர்களை மிகவும் கவர்ந்தது.

காரைக்குடி 'ஏவி. எம்.' கலைக்கூடம்.

இந்த எண்ணம் அவரது இதயத்தில் பசுமையாக இருந்தபோதே, ஜப்பானுக்குச் சென்று வரும் வாய்ப்பும் தன்னிச்சையாக அவருக்குக் கிடைத்தது.

ஜப்பானுக்குச் சென்று திரும்பியதும் ராஷ்ஹோமனைப் போல் ஒரு படம் தயாரிக்க வேண்டும் என்ற ஆவல் மேனாவுக்கு உண்டாயிற்று. நடிகர், டைரக்டர் எஸ். பாலசந்தர் தம்மிடம் அம்மாதிரி ஒரு கதை இருப்பதாகக் கூறினார். மேனா அதைக் கேட்டார்.

புதுமை விரும்பிகள் இருவர் சந்தித்தால் கேட்க வேண்டுமா?

பாலசந்தரின் கதை 'அந்தநாள்' படமாக உருவாகி, ஏவி. எம். முத்திரையில் வெளிவந்தது. ஆடல் பாடல் எதுவுமின்றி இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல்படம் இது. 'அந்தநாள்' தமிழ்த் திரைப்பட உலகின் முன்னேற்றத்தில் மற்றொரு மைல் கல்லை ஏற்படுத்தி, அதன் அந்தஸ்தையும் உயர்த்திவிட்டது.

"நீங்கள் ஏன் இதை ஹிந்தியில் தயாரித்து வெளியிடக்கூடாது?" என்று மேனாவைக் கேட்டேன்.

மேனா குறுநகை புரிந்தார்.

"அந்த திட்டம் என் மனதிலும் இருக்கிறது. அது இருக்கட்டும், கணேசனைப் போல் நடிப்பதற்கு அங்கு யார் இருக்கிறார்கள்? நான் கணேசனிடம் கதையைச் சொன்ன போதே கதையுடன் ஒன்றிப் போய் விட்ட அவர், உடனே இதில் நடிக்கச் சம்மதித்தார்.

"முக்கியமாக நாம் கதையைச் சொல்லும் போது அதில் ஈடுபடும் தன்மை இருந்தால்தான் ஒரு நடிகர் வெற்றிபெற முடியும். அந்தநாள் கதையை நான் சில ஹிந்தி நடிகர்களிடம் சொன்னேன். ஆனால் கதையில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கேட்கவேயில்லை.

"ஹூம். எதிர்காலத்தில் 'அந்த நாள்' நிச்சயம் ஹிந்தியில் உருவாகத்தான் போகிறது" என்றார் மேனா ஆணித்தரமாக.

அந்தநாளைத் தொடர்ந்து, பல தமிழ், ஹிந்தி, தெலுங்கு, கன்னடப் படங்கள் ஏவி. எம். மில் தனித் தயாரிப்பாகவும், கூட்டுத் தயாரிப்பாகவும் வெளிவந்தன. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைப்பது போல் இருந்தது, சென்ற ஆண்டில் அவர் வெளியிட்ட 'ஹம் பஞ்சி ஏக் டால்கே' என்ற குழந்தைகள் படம்.

பாரத சர்க்கார் சிறந்த முழுநீளப் படத்திற்கும், குழந்தைகள் படத்திற்கும் பரிசுகள் வழங்கும் வழக்கத்தை ஏற்படுத்திய பின், முதன் முதலாக பரிசு பெறும் குழந்தைகள் படம் இதுதான். தமிழ் நாட்டுக்கு அந்தப் பெருமையைத் தேடித்தந்து தானும் அந்த அளவிற்கு உயர்ந்து விட்டார் மேனா.



சென்னையில் கலைக்கூடத்தின் ஆரம்ப நிலை.

மேனாவின் சாதனைகள் என்ன என்பதைப்பற்றி சொல்லால் விளக்குவதைவிட, அவரது ஸ்டுடியோவைச் சுற்றி அழைத்துச் சென்று காட்டி விட்டால் போதும் என்று நினைக்கிறேன். ஆம், பொட்டல் காடாக இருந்த அந்த இடம் - பாலையாக காட்சி தந்த இடம்-இப்போது பசுஞ்சோலையாக விளங்குகிறது. குடிசைகளில் ஆரம்பித்த ஸ்டுடியோ இன்று இந்தியாவின் மிகச் சிறந்த ஸ்டுடியோக்களில் ஒன்றாக மாறிக்கொண்டு-கோபுரமளவுக்கு உயர்ந்திருக்கிறது.

மேனாவுடன் நெருங்கிப் பழகியவர்களும், அவரிடம் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தவர்களும் அவரைப்பற்றி சொல்லுவதைக் கேட்போமானால், "மேனா எத்தகைய மனிதர்" என்பது தெரிந்துவிடும்.

ஒரு நாள் தயாரிப்பாளர் டைரக்டர் ப. நீலகண்டனுடன் பேசிக்கொண்டிருந்தேன். மேனாவிடம் அவர் 'நாம் இருவர்' படப்பிடிப்பின் போது அசோசியேட் டைரக்டராகச் சேர்ந்தார். பல ஆண்டுகள் அங்கு அவருடன் பணி புரிந்தார்.

மேனாவைப்பற்றி அவர் சொன்ன கருத்துக்களை அப்படியே இங்கு தருகிறேன்.

"மேனாவின் இன்றைய மகோன்னத நிலைக்குக் காரணம் அதிருஷ்டம்தான் என்று சிலர் சொல்கிறார்கள். சிலர்

பிரதமரின் பரிசு பெற்றதற்காக ஏவி. எம். குழுவினர் நடத்திய பாராட்டு விழாவில் 'மேனு' நன்றி கூறுகிறார்.

அவருடைய இன்றைய நிலையைப் பார்த்துப் பொறுமைப் படுகிறார்கள். ஆனால் இன்றைய அவரது உன்னத நிலைக்குக் காரணமாயிருப்பது அவரது விடா முயற்சியும் சலியாத உழைப்பும் தான். மேனுவைக் கண்டு பொறுமைப்படும் அன்பர்கள் அவர் எப்படி இன்றைய நிலைக்கு வந்தார் என்பதைத் தெரிந்து கொண்டால் அது அவர்களுக்குக்கூட நன்மையைத் தரும்.

"காரைக்குடியில் ஸ்டுடியோவை நிர்மாணித்து, 'நாம் இருவர்' படத்தைத் தயாரித்து வந்தபோது அவர் அதிகாலை ஆறுமணிக்கு ஸ்டுடியோவுக்கு வந்து விடுவார். நடுநிசியில்தான் வீடு திரும்புவார்.

"ஒவ்வொரு நிமிஷமும் எதையாவது சிந்தித்து, செயலாற்றியபடி இருப்பார். கதையில் புதிதாக என்ன திருப்பங்கள் செய்யலாம் என்று யோசிப்பார். நடிகர்கள் வசனங்களை உச்சரிப்பதை கவனிப்பார். சொற்களுக்கு சேதம் ஏற்படுவதை அவர் விரும்புவதுமில்லை; அனுமதிக்கவும் மாட்டார்.

"நக்ஷத்திரங்களைப் போட்டு படமெடுத்தால்தான் வெற்றியடைய முடியும் என்ற எண்ணத்தில் அவருக்குத் துளிக்கூட நம்பிக்கை கிடையாது. ஒரு படத்தின் வெற்றி அதன் கதையிலும், நடிகர்களுக்கு அளிக்கப்படும் ஒத்திகையிலும்தான் இருக்கிறது என்ற எண்ணமுடையவர் அவர்.

'நாம் இருவர்' படப்பிடிப்பின் போது நடிகர் பி. ஆர். பந்துலு சம்பந்தப்பட்ட காட்சிகளுக்கு பல நாட்களும், 'வாழ்க்கை'யில் சஹஸ்ரநாமம்- திரௌபதி சம்பந்தப்பட்ட காட்சிகளுக்கு இருபது நாட்களுக்கு மேலும் ஒத்திகை தரப்பட்டிருக்கின்றன.

அன்று அந்த நடிகர்களும் ரொம்ப ஆவலுடன் ஒத்திகை பார்த்தார்கள். அனாவசியத் தொல்லை இது என்று எண்ணாமல் அவர்கள் ஒத்துழைத்ததை நாம் பாராட்டத்தான் வேண்டும். இம்மாதிரி ஒத்திகை பார்க்கப்பட்ட பல கட்டங்கள் படத்திலேயே மிகச் சிறந்த காட்சிகளாக விளங்கின.

ஒத்திகைகள் அதிகமாகத் தரப்பட்டால் வசனம் பாடமாகிவிடும். இதனால், 'வசனம் மறந்து விடப் போகிறதே' என்ற கவலையில்லாமல் நடிகர்கள் வார்த்தையின் ஆழத்தைப் புரிந்து கொண்டு, அதை தங்கள் நடிப்பில் உணர்ச்சியுடன் தத்ரூபமாகப் பிரதிபலிக்க முடியும் என்பது அவரது எண்ணம்.

"ஆனால் இன்றைய கெடுபிடியில் இவ்விஷயத்தில் அவர் சிறிது விட்டுக் கொடுத்திருக்கிறார் என்பது என் யூகம். முன்போல் அவர் இந்த விஷயத்தை வற்புறுத்துவதில்லை என்று கேள்விப்படுகிறேன்.

"ஏவி. எம். நல்ல சங்கீத ஞானம் படைத்தவர். அவரது காதுகள் சங்கீத வசப்பட்டவை. சுருதியையும் நாதத்தையும் அவை

எப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்கும். இதனுல்தான் அவர் தயாரிக்கும் படங்கள் நல்ல சங்கீதப் படங்களாக விளங்குகின்றன.

"ஏவி. எம். துணிச்சல் மிக்கவர். ஒரு காரியம் நல்ல விதமாக நடக்க வேண்டுமானுல், அதனுல் ஏற்படும் நஷ்டத்தைப் பாராட்டமாட்டார் அவர். இதற்கு இரு உதாரணங்களைத் தருகிறேன்.

"வேதாள உலகம் படத்திற்காக பதினுயிரம் ரூபாய் செலவில் ஒரு பெரிய ஸெட்டைப் போட்டு, எடுத்த நடனத்தை அவர் பொருத்தமில்லை என்று வெட்டி விட்டார். அந்த நடனம் மிகவும் அழகான முறையில் படமாக்கப்பட்டிருந்தது. கண்களுக்கு ரமணீயமாக காட்சி தந்தது.

இதேபோல் வாழ்க்கையில் கதைக்கு அஸ்திவாரமானது என்று நாங்கள் முடிவு செய்திருந்த சுப்பய்யா பிள்ளை, எம். எஸ். திரௌபதி சம்பந்தப்பட்ட காட்சியை, நாங்கள், அனைவரும் எதிர்த்தும்கூட, 'கதையின் வேகத்தை குறைக்கிறது' என்று சொல்லி வெட்டினுர் மேனு. இதனுல் நாங்கள் கொஞ்சம் மனவருத்தம் அடைந்தோம். ஆனுல் அக்காட்சியை எடுத்த பின் படத்தை நாங்கள் பார்த்த போது, அவர் செய்தது சரியென்றே மனதார ஒப்புக் கொண்டோம்.

"இம்மாதிரி ஒவ்வொரு காட்சியையும் எடைபோட்டு, அவை படத்திற்கு அவசியமானதா இல்லையா என்பதை சீர்த்தூக்கிப் பார்ப்பதில் அவர் திறமை மிக்கவர்.

"மேனு தற்போது டைரக்ட் செய்வதில்லையே தவிர, அவர் ஒரு சிறந்த டைரக்டர். தொழிலாளர்களுக்கு உரிமை கொடுத்து, அன்புடன் வேலை வாங்குவார். இதுதான் மேனுவை இன்று இந்நிலைக்கு உயர்த்தியிருக்கிறது" என்று மனம் விட்டுக் கூறினுர்.

மேனு ஒரு சிறந்த தேசபக்தர். அவர் எப்போதும் தூய கதராடையையே அணிகிறுர். பாரதியார் பாடல்களை திரைப்படத்தில் புகுத்திப் பிரபலமாகச் செய்த பெருமையும், தேசீய உணர்ச்சியை திரையின் மூலம் பரப்பியதிலும் அவருக்கு முக்கிய இடம் உண்டு.

"இந்திய சர்க்கார் நல்ல படங்களுக்கு தமாஷாவரி விலக்கு அளிக்க வேண்டும். இன்னும் அதிக ஊக்கமளிக்க வேண்டும்" என்று சொல்லும் மேனு, சர்க்காரின் பாரபட்சக் கொள்கையையும்குறிப்பிட்டு, அதை அவர்கள் விட்டொழிக்க வேண்டும்" என்கிறுர்.

இக்கட்டுரைக்காக சுமார் நான்கு மணி நேரம் மேனுவுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தேன். என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோதே அவர் காரியாலய பைல்களைப்புரட்டி முக்கிய கடிதங்களுக்கான குறிப்புகளும் போன் அழைப்புகளுக்குப் பதிலையும், இடையிடையே நேரில் வந்த சிப்பந்திகளுக்குப் பதிலையும் சொல்லி, ஒவ்வொரு நிமிஷமும் வீணுக்காமல் உழைப்பதைக் கண்டேன். இந்த உழைப்புதான் மேனுவை இன்று உயரிய ஸ்தானத்தில் வைத்திருக்கிறது.

ஏவி. எம். 'பூம்புகார்' என்ற வர்ணப் படத்தை தயாரிக்கப்போகிறுர். "பூம்புகார் ஏவி. எம்.மின் லக்ஷியப் படமாக விளங்கப் போவதுடன், இதன் மூலம் உலக மார்க்கெட்டிலும் காலடி, எடுத்து வைக்க எண்ணியுள்ளேன்" என்றுர் மேனு.

'பூம்புகார்' அந்த இன்பக் கனவை நினைவாக்கி உலகப்படச் சரித்திரத்தில் மேனுவுக்கும், நமது தமிழ்ப் படவுலகுக்கும் ஒரு பெருமையைப் பெற்றுத் தரும் என்று நினைக்கிறேன்.

"இன்றைய செய்கையின்
சாதனைகள்
நாளை நிலைக்கும் நினைவுச்
சின்னங்கள்".

– பைரன். ★

புதிய வெளியீடுகள்

இல்லறமே நல்லறம்

தயாரிப்பு : நாராயணன் கம்பெனி
டைரக்ஷன் : பி. புல்லய்யா
நீளம் : 14,544 அடி
வெளியிட்ட தேதி : 1-8-58
கதை, வசனம் : கே. வி. ஸ்ரீனிவாசன்
நடிகர்கள் : கணேஷ், நாகய்யா, நம்பியார், அஞ்சலிதேவி, ராஜம்மா, சரோஜாதேவி.

செல்வராஜ் காதலில் தனக்குப் போட்டியாக வந்தவனைக் கொன்றுவிட்டு ஆயுள் தண்டனை பெறுகிறான். செல்வராஜின் மகன் வேணுவும் வயது வந்ததும் தந்தையின் அடிச்சுவட்டையே பின்பற்றுகிறான். அவனும் ஒரு நாட்டியக்காரியை நேசிக்கிறான்; குடிக்கிறான்; கூத்தடிக்கிறான்.

விடுதலை பெற்ற செல்வராஜ் தர்மா என்ற வேலைக்காரனாகத் தன் மகனிடமே சேருகிறான். வேணுவின் நண்பன் கோபு, வேணுவை எல்லா வகையிலும் ஏமாற்றி அவன் பணம் முழுவதையும் சுரண்டி, வேறு இடத்திற்கு ஓடிப் போக முயற்சிக்கையில் வேணுவிற்கு விஷயம் தெரிகிறது.

கோபுவைத் தப்பவிடாமல் செய்யும் முயற்சியில், கோபு வேணுவைச் சுடுகிறான். ஆனால் அப்போது அங்கே வந்த தர்மா குண்டுக்குப் பலியாகிறான். அவனிடமிருந்த டைரியிலிருந்து அவன்தான் செல்வராஜ் என்று தெரிந்து வேணு திருந்துகிறான்.

விமர்சனம்

ஏற்கனவே வந்து போன பல படக்கதைகளின் கருத்தையே இப்படத்திலும் பார்க்கிறோம். அத்துடன் கதைப்போக்கிலும் குறைகள் இருக்கின்றன.

சாரங்கதரா

தயாரிப்பு : மினர்வா பிக்சர்ஸ்
டைரக்ஷன் : வி. எஸ். ராகவன்
வசனம் : எஸ். டி. சுந்தரம்
வெளியிட்ட தேதி : 15-8-58
நீளம் : ?
நடிகர்கள் : சிவாஜி கணேசன், நம்பியார், ரங்கராவ், பானுமதி, சாந்தகுமாரி, ராஜசுலோசனா.

அஸ்தினாபுர மன்னன் நரேந்திரன் அரசியல் காரணங்களுக்காக சித்ரபுரி இளவரசி சித்ராங்கியைத் தன் மகன் சாரங்கதரனுக்கு நிச்சயிக்கிறான். ஆனால் சாரங்கதரன் அவளை மணக்க மறுக்கவே, சித்ராங்கியை மன்னனே மணக்கிறான்.

சாரங்கதரனைக் காதலித்த சித்ராங்கி அவனை வஞ்சகமாகத் தன் அந்தப்புரத்துக்கு அழைத்துத் தன் எண்ணத்தை வெளியிடுகிறாள். அவன் மறுத்து வெறுத்து வெளியேறுகிறான். அப்போது அங்கே வந்த மன்னரிடம் விஷயத்தைத் திரித்துக் கூறுகிறாள் சித்ராங்கி. மகனுக்கு மரணதண்டனை விதிக்கிறார் மன்னர்.

சாரங்கதரன் தூக்குமேடையில் நிற்கும்போது, அவன் நண்பன் மூலம் மன்னர் உண்மையறிந்து மகனை விடுதலை செய்கிறார். இந்த விடுதலை உத்திரவு கிடைக்கும்போது ஆத்திரம் கொண்ட மந்திரி, கொலைக்களத்துக்கு வந்த சித்ராங்கியைக் கொன்று விடுகிறான்.

இளவரசன் சாரங்கதரன் தனது உண்மைக் காதலி கனகாங்கியை மணந்து சுகமாக வாழ்கிறான்.

விமர்சனம்

நாட்டு மக்களுக்கு நன்கு தெரிந்த பரம்பரைக் கதைகளை மாற்றியமைப்பது அவ்வளவு நல்ல தல்ல என்பதை இப்படம் வற் புறுத்துகிறது.

நாடோடி மன்னன்

தயாரிப்பு : எம்ஜியார் பிக்சர்ஸ்
டைரக்ஷன் : எம். ஜி. ஆர்.
நீளம் : 19,830 அடி
வெளியிட்ட தேதி : 22 - 8 - 58
வசனம் : கண்ணதாசன், ரவீந்தர்
நடிகர்கள் : எம். ஜி. ராமச்சந் திரன், நம்பியார், வீரப்பா, பானுமதி, சரோஜாதேவி, எம். என். ராஜம், சந்திரபாபு.

குழந்தையான இளவரசி ரத்னு காணமற் போன கவலையினுல் இரத் தினபுரி மன்னர் இறந்து விடுகிருர். அவருக்குப்பின் பட்டத்துக்கு வரும் உரிமை பெற்றவர் அரச குடும்பத் தைச் சேர்ந்த மார்த்தாண்டன். வெளிநாட்டுப் பிரயாணத்தி லிருந்து திரும்பியதும் மார்த்தாண் டனுக்கு முடி சூட்ட செய்யப்பட்ட முடிவை ராஜகுருவும், மாண்ட மன் னரின் தம்பியான பிங்களனும், இவர்களுக்கு உடந்தையான கார் மேகமும் சுயநலம் காரணமாக எதிர்க்கின்றனர்.

ராஜாங்க சேனையில் சிப்பாயாக இருந்து, அரசினர் கொடுமையைச் சகிக்காமல் புரட்சி இயக்கம் ஆரம் பித்து, மக்கள் தலைவனுகிருன் வீராங்கன். இவனும் மார்த்தாண் டனும் உருவத்தில் ஒரே மாதிரி யிருக்கின்றனர்.

புரட்சித் தலைவன் என்பதற்காக சிறைப்பட்டு, பட்டம் சூட்டு விழா காரணமாக விடுதலை பெற்ற வீராங்கன் அரண்மனையைச் சேர்ந் தவர்களால் மன்னர் என்று தவறு தலாக எண்ணப்படுவதால் மார்த் தாண்டனைச் சந்திக்கும்படியாகி றது. இந்தச் சந்திப்பில் மார்த் தாண்டன் நல்லவன் என்பதை வீராங்கன் அறிகிருன்.

இதற்கிடையில் மார்த்தாண் டனைக் கொன்று, பிங்களனுக்கு முடி சூட்ட ராஜகுரு செய்யும் முயற்சி தோல்வியுற்று, மன்னர் மயங்கவும், வீராங்கன் முடிசூட்டிக் கொள்கி ருன். மன்னரின் மயக்கம் தெளி யும் வரை வீராங்கன் மன்னன் மார்த்தாண்டனுக நடிக்கிருன்.

கடைசியாக மார்த்தாண்டனைக் கன்னித்தீவில் சிறை வைத்திருக்கி ருர்கள் என்றறிந்த வீராங்கன் அங்கே போகும்போது இளவரசி ரத்னு, தீவின் தலைவனிடம் வளர்வ தைத் தெரிந்து கொள்கிருன். அந்தத் தலைவன் வேறுயாருமில்லை; ராஜகுருவேதான். ரத்னுவையும் தானே மணக்கத் திட்டமிட்டுத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கி ருன்ராஜகுரு. பிங்களனைக்கொன்று, மறைவிடத்திலிருந்து மார்த்தாண் டனையும்கண்டுபிடித்துக்காப்பாற்றி விட்டு, தர்பாருக்கு வந்து ராஜகுரு வுடன் போரிட்டு ரத்னுவை மீட்கி ருன் வீராங்கன். இதற்கும் முன்பே பிங்களனின் கத்திக்கு இரையாகி விடுகிருள் மதனு. மார்த்தாண்ட னும் மகாராணியும் ஆட்சியை மக் கள் தலைவனுன வீராங்கனிடமே ஒப்படைத்து விடுகின்றனர். வீராங் கன் ரத்னுவை \ மணந்து கொள் கிருன்.

விமர்சனம்

குழப்பமில்லாத தெளிவான கதைப்போக்கும், கட்டுக்கோப் பான சம்பவங்களும், கருத்துடன் அமைந்த வசனமும் பாடல்களும் இப்படத்தில் இருக்கின்றன. எம். ஜி. ஆர். இரு வேடங்களில் ஏக காலத்தில் தோன்றும் கட்டங்களும் வண்ணக் காட்சிகளும் நல்ல கோணங்களில் மிக அழகாக ஒளிப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு வேடங்களைத் தாங்கி திறமையாக நடித்து, படத்தை சிறப்பாக டைரக்ட் செய்திருக்கிருர் எம். ஜி. ஆர்.

ஸ்டூடியோ விஜயம்

சுயராஜ்யம் வந்து ஒரு மாமாங்கம் ஆனபிறகு கூட இந்தியாவில் இன்னும் சில மூலைகளில் தாழ்ந்தப் பட்டவர்கள் கொடுமைப் படுத்தப் படுகிறார்கள் என்று நினைவு படுத்தும் ஒரு காட்சியை கோல்டன் ஸ்டூடியோவில் பார்த்தேன்.

கல்யாணி பிக்சர்ஸ் தயாரிக்கும் 'தாமரைக் குளம்' என்ற படத்தில் இப்படிப்பட்ட காட்சி யொன்று வருகிறது.

புலிப்பட்டி ஜமீன்தார் உண்மையான வைதீகப் பித்து உடையவராக இல்லாவிட்டாலும் திமிர் பிடித்தவராக மட்டும் இருந்தார். அதன் காரணமாக தாமரைக் குளத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று கடுமையான உத்தரவு போட்டார்.

ஜமீன் உத்தரவுக்கு அப்படியே அடிபணிந்தது அந்தக் காலம்; இந்தக் காலத்தில் அது நடக்குமா? கோடங்கி, செல்லய்யா முதலியவர்கள் ஒன்றுகூடி ஜமீன் கையாளான காளிமுத்துவை மடக்கி, "நீயும் எங்களவன் தானே; எங்களுக்கு ஆனதுதானே நாளைக்கு உனக்கும் ஏற்படும்?" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். ஆனால் காளிமுத்து சுயநினைவில் இருக்கவில்லை. "சரிதான் போங்கடா! ஜமீன்தார் சொன்னால் சொன்னதுதான்; அதுதான் சரியான சட்டம்" என்று உளறினான். அவனுக்குப் பாடம் போதிக்க வேண்டுமென்று அவனைக் கட்டிப்போட்டு விடுகின்றனர், கோடங்கியும் மற்றவர்களும். சேரிக்கூட்டத்தினர் ஒன்று சேர்ந்த போது சிலபேர் காளிமுத்துவிடம் அனுதாபப்பட்டனர்.

இந்தக் காட்சியில் என். என். கண்ணப்பா, டி. கே. பாலசந்தர், நாராயணசாமி முதலியோர் அன்று நடித்தனர்.

புலிப்பட்டி ஜமீன்தாராக இப்படத்தில் எம். ஆர். ராதா நடித்து வருகிறார். அவருடன் சௌகார் ஜானகி, பத்மினி பிரியதர்சினி, சாரங்கபாணி, காகா ராதாகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், எம். ஆர். சாமிநாதன், ஜி. சகுந்தலா, எஸ். என். லக்ஷ்மி, இந்துலேகா முதலியவர்கள் நடிக்கிறார்கள். முகவை ராஜமாணிக்கம் கதை-வசனம் எழுதியுள்ள இப்படத்தை 'முதலாளி' ஸ்ரீனிவாசன் டைரக்ட் செய்து வருகிறார்.

* * *

கோல்டன் ஸ்டுடியோவில் பூங்காவனம் ஒன்றில் காதலரிருவர் கருத்தொருமித்து கானமிசைத்துக் கொண்

'அவள்யார்' செட்டில் எடுத்தபடம்

'மனைவியே மனிதனின் மாணிக்கம்' செட்டில் எடுத்த படம். சோபா
வின் கைப்பிடியில் அமர்ந்திருப்பவர் டைரக்டர் கே. வேம்பு.

டிருந்தனர்.

"பட்டுப்பூச்சிபோலே ராணி" என்று அவளை அவள் காதலன் வர்ணித்தான். பாட்டின் அடுத்த அடியைக்கூட! நான் மறந்து விட்டு, அந்தப் பட்டுப் பூச்சி ராணியார் என்று தெரிந்துகொள்ள விரும்பினேன்.

பளபளக்கும் பட்டாடையுடன் ஜம்மென்று அபிநயம் பிடித்து அந்த வண்ணப் பூங்காவிலே பறந்துகொண்டிருந்தது ஒருபட்டுப் பூச்சி - அதாவது விஜயா. அவள் காதலன் கண்ணன்தான் அவளை அவ்வாறு புகழ்ந்து கொண்டிருந்தான். அவர்களிருவரும் அந்தப் பூங்காவில் மெய்மறந்திருக்கும் போது கே. ஜெ. மகாதேவன் 'நிறுத்து' என்றார்.

ஆமாம்; கே. ஜெ. மகாதேவன் டைரக்ஷனில் வளரும் அவரது தயாரிப்பான 'அவள் யார்?' படத்துக்கான ஷூட்டிங்தான் அது. இந்தக் காட்சியில் சூர்யகுமார் என்பவர் கண்ணனாகவும், சௌகார் ஜானகி விஜயாவாகவும் நடித்தனர். கலாசாகரம் ராஜகோபால் நிர்மாணித்த அந்த அழகுப் பூங்காவிலே இனிமையாக ஒலித்த அந்த 'டூயட்' பாடலை ஜிக்கி - ராஜா தம்பதிகள் பின்னணியில் பாடியிருந்தனர். ராஜேஸ்வரராவ் இதற்கான சங்கீத அமைப்பாளர் என்பதையும், வே. லக்ஷ்மணன் இப்பாடலை இயற்றியவர் என்பதையும் உங்களுக்குச் சொல்ல வேண்டுமல்லவா?

சென்ற மாதத்தில் அனேகமாக நான் போன இடத்திலெல்லாம் பாட்டும் ஆட்டமுமாகத்தானிருந்தது. விஜயா ஸ்டுடியோவில் சாரதா பிலிம்ஸாரின் முதல் தயாரிப்பாக வளர்ந்து வரும் படத்துக்கு ஒரு காட்சி சுடப்பட்டது. அதிலே அஞ்சலிதேவியும் நாகேஸ்வரராவும் இரண்டு கோஷ்டிகளாக இருந்து போட்டா போட்டியில் நாடக மேடைமீது நின்று 'சவால்' விட்டுக் கொண்டிருந்தனர்.

கல்லூரிப் பெண்ணைப்போல் அம்பிகா இப்படி ஒயிலாகக் காட்சி தருவதும்....

"ஆளைக் கண்டு மருண்டோடும்
மானுமில்லை - ரொம்ப
ஆழத்திலே நீந்தி வரும் மீனு
மில்லை...."

என்று நாகேஸ்வரராவிடம் ஏதோ புதிர் போட்டுப் பாடிக்கொண்டிருந்தார் அஞ்சலிதேவி. அதற்கும் முன்பு வாயாடிப் பெண்களை ஊமைகளாக்குவது பற்றி ஏதோ குறிப்பிட்டார் நாகேஸ்வரராவ். அவர் உள்ளூர் வாசி. அஞ்சலிதேவியும் கோஷ்டியும் வெளியூரிலிருந்து வந்து தங்களுடன் கிராம வாசிகளைப் போட்டிக்கழைத்தனர். ரோஷத்துடன் எதிர் நடை போட்டவர் நாகேஸ்வரராவ் ஒருவர்தான். அடடா! இவ்வளவு நேரம் உண்மைப் பெயர்களையே குறிப்பிட்டு விட்டேன். நாகேஸ்வரராவ் என்பதை காசி என்றும் அஞ்சலிதேவி என்பதை மாலா என்றும் திருத்தி வாசித்துக் கொள்ளுகிறீர்களா?

பெண்டியாலா சங்கீத டைரக்ஷனில் 'பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் இயற்றிய மேற்படி பாடலை ஜிக்கியும் செளந்திரராஜனும் பின்னணியில் பாடியிருந்தனர். பி. புல்லய்யா டைரக்ஷனில் வளருகிறது இப்படம்.

* * *

' ஜெயபேரி ' தயாரிப்பாளர்களுடன் அதன் கதாநாயகன் ஏ. நாகேஸ்வரராவ்

சமையல்வேலை செய்வதற்குத்தான் அவள் அந்த விட்டில் வந்து சேர்ந்தாள். அவளை வேலைக்குச் சேர்க்கும்போதே அந்த விட்டில் ஒரு ஐயா அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தார். அப்போது அவளுக்கு அது புரியவில்லை. "நீ கொஞ்சம் மையல் செய்தால் போதும்" என்று அவர் சொன்னபோது "என்னது?" என்று கேட்டு அவள் முறைத்தாள். "இல்லையில்லை. நீ சமையல் செய்தால் போதும்" என்று மழுப்பினர் அவர்.

நாளா வட்டத்தில் என்ன நடந்திருக்கும் என்று நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய

····கம்பைப் பிடித்து உதய குமார் நிற்பதும் 'இவன் அவனேதான்' படத்திற்காக.

வேண்டும்? இப்படி ஒரு காட்சி சென்ற மாதம் பாரமவுண்ட் ஸ்டுடியோவில் லலிதகலா பிலிம்ஸாரின் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற படத்துக்காகச் சுடப்பட்டது. இதில் அவராக குலதெய்வம் ராஜகோபாலும், சமையல்காரியாக ராஜேஸ்வரியும் நடித்தனர்.

அய்யா பிள்ளையின் இந்தக் கதையை திருமுகம் டைரக்ட் செய்து வருகிறார். ஹொன்னப்ப பாகவதரின் பொறுப்பில் தயாராகிறது இப்படம்.

* * *

பூதாகாரமான ஒரு பெரிய விக்கிரகம் கழுத்து வரையில் வைக்கப் பட்டிருந்தது. அதன் அருகிலே ஓர் இளம் அழகி விசித்திரமாக ஆடை யணிந்திருந்தாள். கவர்ச்சி மிகுந்த அவள் உடையைப் பார்க்கும் போது காட்டு ராணியைப் போலிருந்தது. மலைஜாதியினரின் கூட்டத்தைச் சேர்ந்தவள் தான் அவள்.

யாரோ ஒரு வாலிபன் அந்தக் கூட்டத்தினரைப் பிடிக்க வந்து அவர்களிடமே மாட்டிக் கொள்கிறான் அவன் அங்கிருக்கும்போது தான் இந்த மலைநாட்டு அழகிக்கு சுயம்வரம் ஏற்பாடு செய்யப்படுகிறது. முடிவு நாம் எதிர்பார்த்த படியேதான் இருக்கிறது. அவள் அவனுக்கு மாலையிடுகிறாள். அவனை ஏற்கனவே காதலித்த வந்த காட்டு மிராண்டிப் பயல் ஒருவனும், மலைஜாதித் தலைவனுமாகச் சேர்ந்து அந்த வாலிபனைப் பலவிதக் கொடுமைகளுக்கு ஆளாக்குகின்றனர். இவைகளிலிருந்து அவன் எப்படித் தப்புகிறான், என்ன ஆகிறான் என்பதெல்லாம் கதை.....

மேலே கண்ட காட்சியில் சிறும் நாகங்கள் சில தோன்றி நடித்தன. அந்தப் பெண்ணுக்கு இருபுறமும் இரண்டு நாகப் பாம்புகள் படம் விரித்து நின்ற காட்சி அற்புதமாக இருந்தது. மலைஜாதிப் பெண் மல்வியாக நடித்த சோபாவின் மனம் மட்டும் படக் படக்கென்று அடித்துக் கொண்டுதானிருந்தது. அருகில் நின்றிருந்த டைரக்டர் டி. பி. சுந்தரம் சோபாவுக்குத் தைரிய மூட்டிக் கொண்டிருந்தார்.

பயனீர் பிலிம்ஸார் தயாரிக்கும் 'கில்லாடி' என்ற படத்தில் வரும் இக்காட்சி சென்ற மாதம் கோல்டனில் படமாகியது. ரஞ்சன், ஸ்ரீரஞ்சனி, பட்டு, டி. பி. முத்துலக்ஷ்மி முதலியோர் இதில் நடித்து வருகின்றனர்.

'அறிவாளி'யில் சிவாஜியும், ராமச்சந்திரனும் தோன்றும் ஒரு காட்சி.

'கில்லாடி' ஸெட்டில் சோபா தோன்றும் காட்சி. அருகிலிருப்பவர் டைரக்டர் டி. பி. சுந்தரம்.

பாபு பிலிம்ஸாரின் பொறுப்பில் ஏ. டி. கே. புரொடக்ஷன்ஸார் தயாரிக்கும் அறிவாளியில் ஒரு காட்சி சென்ற மாதத்தில் விஜயா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி, தங்கவேலுபாலய்யா, பானுமதி, எம். சரோஜா, டி. பி. முத்துலக்ஷ்மி முதலியோர் இதில் நடிக்கின்றனர். இதன் கதை வசனகர்த்தாவான ஏ. டி. கிருஷ்ணசாமி இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறுர். ஏக்லல்வுக்கு அவன் தகப்பனுர் எழுதிய கடிதத்தில் அவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் கல்யாணம் நடக்கப்போகிறது என்று நினைத்துக் கொண்ட இந்தியா அவனிடம் வந்து கலாட்டா செய்கிருள். ஏக்லவ் அவளிடம் சிக்கித் திணறுகிருன். அவளைச் சமாதானப்படுத்த பெருமுயற்சி செய்கிருன். ஏக்லவ் - இந்தியா என்ற தமாஷ் ஜோடி தோன்றும் இக்காட்சியில் டி. ஆர். ராமச்சந்திரன் ஏக்லவ்வாகவும், எம். சரோஜா இந்தியாவாகவும் அன்று நடித்தனர்.

* * *

கே. எம். டி. வி. என். புரொடக்ஷன்ஸார் ''மனைவியே மனிதனின் மாணிக்கம்'' என்ற பெயரில் தயாரித்து வரும் படத்துக்கான ஒரு காட்சி சென்ற மாதம் கோல்டனில் படமாகியது. கே. வேம்பு டைரக்ட் செய்யும் இதில் பாலாஜி, பண்டரிபாய், விஜயகுமாரி, தங்கவேலு, எம். சரோஜா, சட்டாம்பிள்ளை வெங்கடராமன் முதலியோர் நடித்து வருகின்றனர். ராஜகோபால் என்பவர் எழுதிய இக்கதைக்கு அவருடன் மக்களன்பன் என்பவரும் வசனம் எழுதுகிருர்.

சுந்தர் ஒரு நல்லமனிதர். அவரைத் தவருன பாதையில் அழைத்துச் செல்கிருர் கவிவரதன். ஆனுல் மேனகாவுக்கு உண்மையிலேயே சுந்தரின் நன்மையில் நாட்டம் உண்டு. கடைசியில் தலைக்குமேல் போன வெள்ளத்தைத் தடுக்க முடியாமல் சுந்தரின் கம்பெனியே மார்வாடியின் கைக்கு மாறும் நிலை வந்து விட்டது.

இந்தக்கட்டம்தான் அன்று படமாகியது. இதில் சுந்தராக பாலாஜியும், கவிவரதனுக சட்டாம்பிள்ளை வெங்கட்ராமனும், மேனகாவாக விஜயகுமாரியும் நடித்தனர்.

வாஹினி ஸ்டுடியோவில் கல்பனு கலாமந்திர் தயாரிக்கும் 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி'க்கான ஒரு காட்சியில் எம். ஜி. ராமச்சந்திரனும், ஜமுனுவும் நடித்துக்கொண்டிருந்தனர்.

ஸி. என். அண்ணுதுரையின் இக்கதைக்கு அரங்கண்ணல் வசனம் எழுதியிருக்கிருர். ஆர். ஆர். சந்திரன் டைரக்ட் செய்கிருர்.

கஸ்தூரி
பிலிம்ஸ்...
நான் சொல்லும்
ரகசியம்
காட்சிகள்





எஸ். வி. சுப்பய்யா, தசர
தன், எம். என். ராஜம், ஜி.
சகுந்தலா, மனோரமா முதவி
யோரும் நடிக்கும் இப்படத்
தில் ஹெலனின் கவர்ச்சிகர
மான நடனமும் உண்டு.





கஸ்தூரி பிலிம்ஸின் மூன்
றாவது தயாரிப்பான "நான்
சொல்லும் ரகசியம்"
தமிழ்ப்படம் விரைவில்
திரைக்கு வரவிருக்கிறது.
சிவாஜி கணேசனும்-அஞ்ச
லியும் பிரதம நடிகர்கள்.





சந்திரபாபுவின் ஹாஸ்யம் இப் படத்தில் சிறப்பாக இருக்கும். டைரக்ஷன் பி. ஸ்ரீதர்.

கேள்வி ? பதில்

சௌந்தரபாண்டியன், பெங்களூர்

'சினிமா நக்ஷத்திரங்கள் 'ரிடையர்' ஆவதுண்டா?

இல்லை; அதற்குப் பதிலாக 'மறந்து விட'ப் படுகிறார்கள்.

திறமையற்ற சில நடிகைகள் கதாநாயகிகளாக உலவுகிறார்களே இன்று, இதுபற்றி என்ன சொல்கிறீர்?

அவர்களிடையே யுள்ள 'நடிப்புப் பஞ்ச'த்தை படவுலகிலிருக்கும் 'நடிகைகள் பஞ்சம்' சாப்பிடுவதால்தான்!

வாஸனின் டைரக்ஷனுக்கும் பிரசாத்தின் டைரக்ஷனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பிரசாத்தின் டைரக்ஷன் இதயத்தைத் தொடும்; வாஸனின் டைரக்ஷன் கண்களை நிரப்பும்.

கிருஷ்ணன்குட்டி, ஓலவக்கோடு

சினிமாவில் வரும் பிச்சைக்காரனுக்கும், வீதியில் அலையும் பிச்சைக்காரனுக்கும் என்ன வேற்றுமை?

பின்னவர் ஒத்திகையே பார்ப்பதில்லை!

ஹாஸ்ய நடிகர் பொட்டை கிருஷ்ணமூர்த்தியிடம் ஆச்சரியப் படும்படி என்ன இருக்கிறது?

அவரது உருவமும் அளவும்.

பங்காரு, மதுரை

அங்கமுத்து விமானத்தில் ஏர் ஹோஸ்டஸாக நியமிக்கப் பட்டால்?

பிரயாணிகளின் எண்ணிக்கையில் இரண்டு குறைக்க வேண்டியிருக்கும்.

செல்லப்பன், சிவகங்கை

பத்மினி ஏன் சொந்தக் குரலில் பாடுவதில்லை?

தோகை மயில் ஆடத்தான் செய்யும்!

இன்றைய சோகக் கதை எது?

நாளைய தினம் பற்றிய பயம்.

ஓட்டுப் பெட்டிகள் பேசுவதுண்டா?

அவை காலியாக்கப்பட்ட பின்!

சமீபத்திய படங்கள் ஏன் வெள்ளி விழா, பொன் விழா கொண்டாடுவதில்லை?

படங்களின் கருத்தில் 'போலி' மிகுந்து விட்டதால்.

கு. ரா. கிருட்டினன், சிதம்பரம்

ஆணை முட்டாளாக்க பெண்ணுக்கு உதவுவது எது?

வசியம்.

படங்களில் நடிக்கும் மிருகங்களுக்கு 'கால் ஷீட்' உபத்திரவம் கிடையாதே?

இன்று வரை இல்லை.

நிலவில்லா வானத்திற்கு எதை ஒப்பிடலாம்?

கருத்தில்லாத சினிமாக் கதையை.

ஏ. வி. ராஜரத்னம், மதுரை

இந்திய ரயில், தமிழ்ப்படம் இவற்றில் குறிப்பிட்ட காலத்தில் வருவது எது?

தண்டவாளத்தையும் கச்சா பிலிமையும் பொறுத்த விஷயம் இது!

நர்கிஸ் சிபாரிசு செய்வது போன்ற ஸ்நோ, பவுடர், ஹேர் ஆயில் ஏதேனும் விளம்பரங்களை பார்த்திருக்கிறீர்களா?

பானுமதி சிபாரிசு செய்வது போன்று ஏதேனும் இம்மாதிரி விளம்பரங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

திரைப்படங்களை யார் யார் டைரக்ட் செய்வது, படங்களில் யார் யார் நடனம் ஆடுவது என்ற வரை முறையே இல்லாது போய் விட்டதே, ஏன்?

'பணம் பத்தும் செய்யும்' என்பதைக் கேட்டதில்லையா?

நா. ராமன், மதுரை

குருடனுக்கு திருமணம் எதைப் போன்றது?

காரிருளில் ஓர் மின்னலைப் போன்றது.

டி. ஸ்ரீநிவாஸராகவன், பெங்களூர்

'வஞ்சிக்கோட்டை வாலிப'னில் மகாராணியாக - தளபதி தூர்ஜயனின் தங்கையாக - வருவது யார்?

பம்பாய் மீனாக்ஷி.

'அன்னையின் ஆணை'யில் ஒ. ஏ. கே. தேவர் எந்த பாகம் ஏற்றுள்ளார்?

நீதி மன்றத்தில் வழக்கை எடுத்துரைக்கும் பப்ளிக் பிராசிக்யூடராக.

ஐ. ஆர். சுப்பராயன், ஹைதராபாத்

'பாவை விளக்'கின் வசன கர்த்தா கண்ணதாசனா, நாகராஜனா?

நாகராஜன்தான்.

படாதிபதி டைரக்டராகிறார்; நடிகர் டைரக்டராகிறார்; வசன கர்த்தா நடிகராகிறார். இதனால் அவர்களுக்கு நன்மையா தீமையா?

ரஸிகர்கள் விமர்சகர்களாக மாறாத வரையில் தீமையில்லை.

மணந்தால் நடிகை.........வை மணப்பது அல்லது மரணதேவதையை அடைவது என்ற உறுதியுடன் இருக்கும் எனக்கு நடிகை கிடைப்பாளா?

மரணதேவதை கிடைக்கலாம்.

'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்கள்' என்று நான் எழுதி வைத்திருக்கும் கதையை எந்தப் படமுதலாளிக்கு அனுப்பலாம்?

உங்களை இதுவரை ஏமாற்றாத படமுதலாளிக்கு.

பூம்பொழில், கொழும்பு

அஞ்சலிதேவி நடித்த முதல் படம் எது?

சோபனசலாவின் 'கொல்ல பாமா' என்ற தெலுங்குப் படம்.

ஜே. வசந்தா, திண்டுக்கல்

பிரசாத் டைரக்ட் செய்து வரும் படங்கள் எவை?

விஜயாவின் 'கடன்வாங்கிக் கல்யாணம்', அவரது சொந்த ஹிந்திப் படம்.

'கல்கி'யின் 'சிவகாமியின் சபதம்' படமாக்கப்பட்டு வருகிறதா?

விளம்பரத்தோடு நிற்கிறது.

'செந்தாமரை' ஏன் இன்னும் திரையிடப்படவில்லை?

மலராததால்.

வனஜா-விஜயா, சென்னை

'சகுந்தலை'யில் எம். எஸ். சுப்புலக்ஷ்மியுடன் கதாநாயகனாக நடித்தவர் யார்?

பிரபல சங்கீத வித்வான் ஜி.என். பாலசுப்ரமணியம்.

குணசித்திர நடிகருக்கு தேவையான அம்சங்கள் என்ன?

பாத்திரத்துடன் ஒன்றி தன்னை மறந்து நடிக்கும் தன்மை.

கே. எஸ். சுப்பிரமணியன், சென்னை

சாவித்திரி அங்கமுத்துவின் உறவினரா?

உருவத்தைப் பார்த்துக் கேட்கிறீர் என்று நினைக்கிறேன். அப்படியொன்றும் இல்லை.

நடிகர் டைரக்டராவது போல, டைரக்டர் நடிகராக மாறினால்?

'பர்மாராணி'யும், 'அனந்தசயனமும்' பெருகி விடும்.

வி. நரசிம்மலு,
திருக்கோவிலூர்

'பால் கவர்ச்சி' நடிகை என்றால் என்ன அர்த்தம்?

'நிமிர்ந்து உட்காரச் செய்பவர்' என்று பொருள்.

நான் உங்களுக்கு ஒரு லாபகரமான திட்டத்தைப்பற்றி தனியாக ஒரு கடிதம் எழுத விரும்புகிறேன். பதில் எழுதுவீர்களா?

என் நேரத்தை 'நஷ்டப்படுத்தி'த் தானே?

அசு. அப்துல்ஹை,
அரகண்டநல்லூர்

துன்பம் பெற்றெடுக்கும் குழந்தையின் பெயர் என்ன?

வறுமை.

தேதி என்பது என்ன?

காலத்தேவனின் 'அடிக்கோல்'.

பேராசை என்பது என்ன?

பகற் கனவின் பிறப்பிடம்.

ராதாவின் 'எதிரொலி', வஹாப் காஷ்மீரி எத்தனை படங்களில் நடிக்கிறார்?

மேகலாவின் 'குறவஞ்சி'யில் நடித்து வருகிறார்.

நடிகர்களின் தீராப் பசி எது?

நல்லதொரு சந்தர்ப்பம்.

ஆர். நாதன், கரக்பூர்

சினிமாக்களில் வரும் கதாநாயகனும் கதாநாயகியும் முதல் சந்திப்பிலேயே காதல் கொண்டு விடுகிறார்கள். ஆனால் நானோ ஒரு பெண்ணை கடந்த ஓராண்டு காலமாகச் சந்தித்தும் அன்பு ஏற்படவில்லையே, ஏன்?

நடிப்புக்கும் உண்மைக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்!

ராஜா ஸ்னோ

ராஜா
டால்கம்பவுடர்

உங்களுடைய முகத்தை வசீகரமாக்க ராஜாடால்கம் பவுடர் ஏற்ற சாதனம்.

ராஜா ஸ்னோ உங்களுடைய சருமத்திற்கு கவர்ச்சியை அளிக்கிறது. இவைகள் கைவசம் இருக்கட்டும்.

use
Raja Kusturi Soap for luxury Bath
Raja Bar Soap for easy washing

MFRS : MANYAM & CO., BANGALORE-3.

ஜே. என். பாலானந்தம், ஜம்பை

மார்லன் பிராண்டாவோவைப் பற்றி சற்று தெளிவாகக் கூறுங்கள்?

மார்லன் பிராண்டோ அமெரிக்க நடிகர். அமெரிக்காவிலுள்ள நடிப்புக்கலைப் பயிற்சிப்பள்ளியில் நடிப்புக்கலை பயின்றவர். இன்றைய அமெரிக்க நடிகர்களில் தலை சிறந்து விளங்கும் ஓர் உன்னத நடிகர். பரிசு பெற்ற பல அமெரிக்கப் படங்களில் நடித்திருக்கிறார்.

எஸ். என். நெய்ல், சென்னை

'ஔவை' ஷண்முகம், சுந்தராம்பாள் இருவரில் யாருக்கு முதலிடம் தரலாம், 'ஔவையார்' நடிப்பில்?

'ஔவை' ஷண்முகத்திற்கு. பெண்ணைப்போல் ஆண் தத்ரூபமாக நடிப்பது பாராட்டப்பட வேண்டியதுதானே?

க. ஆ. சின்னதம்பி, கருப்பம்பாளையம்

மேகலாவின் 'குறவஞ்சி' படத்திலிருந்து ராஜசுலோசனா விலகி விட்டாராமே, அப்படியானால் அவர் பாகத்தில் தற்போது நடித்து வருவது யார்?

இன்னும் தேர்ந்தெடுக்கவில்லை.

ஒரு நடிகைக்குத் தேவையானது அன்பா, அழகா, அணிகலனா, அமுதக்குரலா?

'அ'வில் ஆரம்பிக்கும் 'அதிருஷ்டம்'தான்!

சுகுமார், உடுமலைப்பேட்டை

காலம் செய்யும் கோலம் என்ன?

இயற்கையின் முத்திரைகளைப் பதிப்பது.

ஆசை நிராசையாவது எப்போது?

ஆவலுடன் தியேட்டருக்குள் நுழையும் நாம் அதிருப்தியுடன் வெளிவரும்போது.

கலை உலகின் கலங்கரை விளக்கம் எது?

தற்போது அணைந்திருக்கிறது அது.

ஜெனிக், கண்டி

இப்போது வரும் சினிமாக்களுக்குக் கொடுக்கப்படும் தலைப்புகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

வாக்கியங்கள்.

'பத்து கட்டளைகள்' என்ற ஸிஸில் பி. டிமிலியின் ஆங்கிலப் படத்தை தமிழில் எடுக்க முடியுமா?

எடுக்க முடியும். ஆனால் அதே தரத்தில் எடுக்க முடியுமா என்பது தான் சந்தேகம்.

இந்தக் குமரியின் (பி. சரோஜாதேவி) களங்கமற்ற சிரிப்பிலே மனம் பறிகொடுக்கும் இந்த வாலிபன் (எம். ஜி. ஆர்.)...

கி. ரா. திருமலையப்பன்,
தென்காசி

'செஞ்சுலக்ஷ்மி' தனித்தமிழ்ப் படமா, 'டப்பிங்' படமா?

தனித்தமிழ்ப் படம்.

'முதலாளி' புகழ் சீனிவாசன் எந்தப் படங்களை டைரக்ட் செய்து வருகிறார்?

மகனே கேள், தாமரைக்குளம், ஓடிவிளையாடு பாப்பா முதலிய படங்

...இந்தப் பாவையின் (எம். என். ராஜம்) நமட்டுச் சிரிப்பிலே சந்தேகம் கொள்கிறார். ஏஎல்எஸ். "திருடாதே" தமிழ்ப் படத்தில்.

களை டைரக்ட் செய்து வருகிறார்.

அன்பு, பாசம், காதல் இந்த மூன்றுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பொதுவாக ஒருவர் மீது ஒருவர் காட்டும் பரிவு-அன்பு; உறவின் இணைப்பைப் பிணைப்பது-பாசம்; இளம் உள்ளங்களின் மோதலிலே தோன்றும் மின்னல் காதல்.

தற்கொலை, சன்னியாசம். விளக்கம் தர முடியுமா?

தமிழ்ப் படங்களிலே 'கிளைமாக்ஸ்' காட்சியைத் தொடரும் பாட்டு அல்லது நடனம் - தற்கொலை. படத்தைத் திரையிடுவதில் உள்ள சிக்கலை எண்ணும் படாதிபதியின் மனோ நிலை - சன்னியாசம்.

இன்றைய தமிழ்ப் படவுலகில் எது அதிகம், எது குறைவு?

முறையே சுயநலம்; நாணயம்.

வி. கே. கையூம், பலமநேர்

'சினிமாஸ்கோப்' முறையைக் கண்டு பிடித்தவர் யார்?

ஹென்ரி செரிடன் என்ற பிரஞ்சுக்காரர். அதை சாத்தியமாக்கியவர் இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியின் தலைவரான ஸ்பைரோஸ் பி. ஸ்கூராஸ்.

பா. தேவராசு,
சென்னை

'ஊமையன் கோட்டை' என்னவாகியது?

'தொடர் கட்டுரை'யாக மாறிவிட்டது.

ச. முருகேசன்,
வண்டியூர்

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனும் வைஜயந்திமாலாவும் நடித்து வரும் சித்தூர் ராணி பத்மினி என்னவாயிற்று?

சில காட்சிகள் சுடப்பட்டிருக்கின்றன.

பரந்தாமன், உலிக்கல்

ரகசியம் நிற்காத இடம் எது?

பெண்களின் இதயம்.

சுயநலத்தின் பிரதிபிம்பங்கள் யார்?

பிறர் வாழுவதை சகிக்க முடியாதவர்கள்.

ஜி. ராஜேந்திரன், கொழும்பு

கலைஞன், ரஸிகையை மணந்தால் அவர்கள் வாழ்வு...?

'வாழ்த்துப்பா' பிறர் பாட வேண்டியதில்லை!

மூ. கிருஷ்ணன், கொழும்பு

நீங்கள் அதிகம் எதை விரும்புகிறீர்கள்?

நேசப்பான்மையை எல்லோரிடமும்.

ஏ. சி. லக்ஷ்மணன், விழுப்புரம்

என். எஸ். கே. மதுரம் தற்போது எத்தனை படங்களில் நடிக்கிறார்?

சுமார் அரை டஜன் படங்களில்.

ஸி. பி. ஸாரதி, ஜான்சி

ஹிந்தியில் வெளிவந்த 'மிஸ்டர்-X'ம் தமிழில் தயாராகும் 'மாய மனிதன்' படமும் ஒரே கதையைத் தழுவியதா?

'இன்விஸிபில் மேன்' என்ற ஆங்கிலக் கதையைத் தழுவியவை இரண்டும்.

ஹாஸ்ய நடிப்பில் சந்திரபாபுவும், வட இந்திய நடிகர் ஜானி வாக்கரும் போட்டியிட்டால் யாருக்கு முதல் பரிசு கிடைக்கும்?

சந்திரபாபுவுடன் போட்டியிடக் கூடிய நடிகர்களே அங்கு கிடையாது!

எஸ். எம். ஏ. அன்ஸாரி, மேலப்பாளையம்

'சம்பூர்ண ராமாயண'த்தில் மதுரை சோமு பின்னணியில் பாடிய பாட்டு என்னவாயிற்று?

படத்தின் நீளம் அதைச் சாப்பிட்டு விட்டது.

எம். வி. சந்திரன், அம்பலமணி

சிவாஜி கணேசனுக்கு ஆங்கிலம் பேசத் தெரியுமா?

''ஹவ் டு யூ டூ'' என்று ஆங்கிலத்தில் குசலம் விசாரிக்க இப்போது தான் ஆரம்பித்திருக்கிறார்.

கே. சையத் காசிம், திருச்சி

ஜெமினியின் மகத்தான படமான 'சந்திரலேகா'வுக்கும் 'வஞ்சிக்கோட்டை வாலிப'னுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

சந்திரலேகா, படத்தில் மகத்தானதாக இருந்தது; வஞ்சிக்கோட்டையின் விளம்பரங்களில் மட்டுமே 'மகத்தான' என்ற எழுத்துக்கள் காணப்பட்டன.

கண்ணன், சின்னவாடம்பட்டி

என். எஸ். கிருஷ்ணன் டைரக்ட் செய்த படங்கள் எவை?

மணமகள், பணம்.

எஸ். வி. பாண்டியன், சிறுகுடி

வட இந்திய டைரக்டர் சாந்தாராமுக்கும், தென் இந்தியத் தயாரிப்பாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

அவர் காரியத்தை சாதித்து விட்டுப் பேசுகிறார்; இவர்கள் சாதிக்காமல் பேசுகிறார்கள்.

துரை. முருகேசன், காரமடை

அழகு படையெடுத்தால் ஆவதென்ன?

பெண்ணின் உருவம் எதிரே நிற்கும்.

டி. எஸ். வெங்கடராமன், தஞ்சை

'கண்ணின் மணிகள்' படத்தை டைரக்ட் செய்த டி. ஜானகிராம் இதற்கு முன் எந்தப் படங்களை டைரக்ட் செய்திருக்கிறார்?

சேச்சி (மலையாளம்), நடிகை முதலான படங்களை டைரக்ட் செய்துள்ள அவர், தற்போது ஒரு சிங்களப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

டி. பாஸ்கரன், சென்னை

'நடிகர் திலகம்' ஏன் ஹிந்திப் படங்களில் நடிப்பதில்லை?

தமிழ்ப்பட வுலகிற்கு தன் பூரா சேவையையும் அர்ப்பணிக்க.

ஸி. வி. ஆர். மூர்த்தி, செங்கற்பட்டு

மாதுரிதேவி இப்போது ஏன் படங்களில் நடிப்பதில்லை?

யார் சொன்னது? அவர் தன் சொந்தப் படத்திலும், ஏ. டி. எம். 'தோழன்' முதலிய படங்களிலும் நடித்து வருகிறார்.

பிரேம்நஸீருக்கு திருமணம் ஆகி விட்டதா?

திருமணமாகி, குழந்தைகளும் இருக்கின்றன.

சு. நடராஜா, இலங்கை

'மாயா பஜா'ரின் சங்கீத டைரக்டர் யார்?

கண்டசாலா.

விசயபாலன், சென்னை

தற்கால தமிழ் நடிகர்கள் கலையை வளர்க்கிறார்களா; அல்லது பணத்தை வளர்க்கிறார்களா?

இரண்டையும்விட தங்கள் உடலைத் தான் வளர்க்கிறார்கள்!

பி. என். ரங்கசாமி, பனங்காட்டூர்

சாவித்திரி இனி படங்களில் நடிக்கமாட்டாரென்பது உண்மையா?

சில மாதங்களுக்கு மட்டும்.

தேன்மொழி, மலர்விழி, கோட்டப்பட்டி

'பார்த்திபன் கனவு' படத்தில் படகோட்டி பொன்னனாக நடிப்பவர் யார்?

எஸ். வி. சுப்பய்யா.

ந. சின்னய்யா, மஸ்கெலியா

'முதலாளி' புகழ் தேவிகாவின் விலாசம் என்ன?

ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28.

இந்தியாவில் சமீபத்தில் புதிதாகக் கட்டி திறக்கப்பட்ட திரைப் பட ஸ்டுடியோ எது?

ஹைதராபாத்திலுள்ள ஸாரதி ஸ்டுடியோ.

ஆர். ஜி. ராஜ், ஈப்போ

ஏ. எம். ராஜா, சௌந்தரராஜன் இருவரில் அதிகமான படங்களில் பாடியவர் யார்?

சௌந்தரராஜன்.

கணேசனும் சாவித்திரியும் விவாக ரத்து காரியாலயத்திற்கு செல்லப் போவதாகக் கேள்விப் பட்டேன். உண்மையா?

ஏதேனும் படத்திற்கான ஒத்திகையாக இருக்கலாம்.

பெண்களின் சிறந்த பொழுது போக்கு எது?

ஆண்களைக் கொல்லாமல் கொல்வது.

கே. வி. கே. சாமி, பம்பாய்

'கொஞ்சும் சலங்கை' வர்ணப் படம், 'ஜனக் ஜனக் பாயல்பாஜே' யின் தழுவலா?

அல்ல. அதே பாணியில் அமைக்கப்பட்ட புதிய கதை.

ந. கோவிந்தராசன், மேலப்பாலையூர்

புரட்சி நடிகரைப்பற்றி உங்கள் எண்ணம் எவ்வாறு இருப்பினும் 'பேசும் பட' ரஸிகர்களின் ஆர்வத்திற்காகவாவது அடுத்து வரும் இதழின் 'நவரஸ நாடக'த்தில் புரட்சி நடிகரைத் தோன்றச் செய்வீர்களா?

குதர்க்கத்தையும் கேள்வியில் கலந்திருக்கிறீர்களே. எம். ஜி. ஆரைப் பற்றிய ஒரு விசேஷக் கட்டுரை அடுத்த இதழில் வருகிறது.

நீங்கள்
களைப்பு
அடையும்
பொழுது
தேநீர்
உங்களுக்கு
உற்சாக
மூட்டுகிறது
TEA BOARD INDIA
நான்தான் டீ
மோசமான நிலையிலும்..உயர்ந்த நிலையிலும் உங்களுக்கு நான் நண்பன்

ஹிந்திப் பட உலகில்

ஓ.பி.நய்யார்

திருமணச் சடங்குகள் முடிந்து, குழுமியிருந்தோர் கோலாகலத்தில் மூழ்கியிருந்த நேரம் அது. பிற்பகல் மணி நான்கு.

'தந்தி' என்று வாசலில் ஒரு குரல் கேட்டது. விழுந்தடித்துக் கொண்டு சிலர் ஓடினார்கள்.

தந்தி மாப்பிள்ளைக்கே வந்திருந்தது. அதை அவர் பிரித்துப் படித்தார். அவர் கண்களை அவரால் நம்பவே முடியவில்லை. அவரது இதயமே வெடித்து விடும் போல் ஆகிவிட்டது!

அவர் சற்றும் எதிர்பாராத தந்தி தான்!

அவரை பம்பாய்க்குப் புறப்பட்டு வரும்படியும், 'ஆஸ்மான்' என்ற தனது படத்திற்கு ,மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கு அவரை சங்கீத டைரக்டராக நியமித்திருப்பதாகவும் டைரக்டர் தால்குஷ் எம். பாஞ்சோலியிடமிருந்து அவருக்கு தந்தி வந்திருந்தது.

கல்யாண முகூர்த்தம் முடிந்த நான்கு மணி நேரத்திற்கெல்லாம் மற்றொரு புதிய திருப்பத்தை தனது வாழ்க்கையில் கண்டு விட்ட அந்த மாப்பிள்ளை யார் தெரியுமா? ஹிந்திப் படவுலகின் முன்னணி சங்கீத டைரக்டர்களில் ஒருவரான ஓ. பி. நய்யார்தான்!

இன்றைய தினம் ரேடியோவில் 'நேயர் விருப்பம்' பகுதியில் அதிகமாக விரும்பி கேட்கப்படும் பாட்டுக்கள் நய்யாரினுடையது தான்.

இளம்வயதிலிருந்தே நய்யார் இசையில் அபார பற்றுடையவராக விளங்கி வந்தார். பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதும், மற்றும் கல்லூரி நாட்களிலும், ஏதேனும் நாடகம், மற்றும் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றால், நய்யார்தான் அதன் இசை அமைப்பாளராக இருப்பார்.

இளமையிலிருந்தே இவ்வாறு சங்கீத மோகத்தில் ஆழ்ந்திருந்த நய்யாருக்கு சினிமாவின் மீது திடீரெனக் கவனம் சென்றது. அத்துடன் அவருக்கு சுமாரான முக வெட்டும் இருக்கவே, படத்தில் நடிக்க வேணடும் என்ற ஆவல் நய்யாருக்கு எழுந்தது.

இதற்கு சரியான இடம் பம்பாய் தான் என்று தேர்ந்தெடுத்து, அங்கே தனது முற்றுகையை ஆரம்பித்தார் அவர். அவர் ஏருத படக் கம்பெனிகள் இல்லை; நுழையாத கலைக்கூடங்கள் இல்லை.

நய்யாருக்கு கிடைத்த ஒரே பதில் 'சந்தர்ப்பம் இல்லை' என்பதுதான். மனமொடிந்த நய்யார் படவுலகின் மீதே வெறுப்புற்று திரும்பினர்.

வாழ்க்கையிலேயே ஒரு பெரு முயற்சியில் தோல்வியடைந்து திரும்பிய அவருக்கு ஆறுதல் தரக்கூடிய சம்பவம் ஒன்று நடந்தது.

ஒருநாள் கண்காட்சி ஒன்றில் மோகினி என்ற பெண்ணைச் சந்தித்தார். முன்பின் அறியாத அந்தப் பெண்ணிடம் நேரே சென்று, "உன்னை நான் மணக்க விரும்புகிறேன். சம்மதமா?" என்று கேட்டார், துணிவோடு.

மோகினி இவரது உருவத்தில் மயங்கினர்.

அடுத்த இரண்டு நாட்களில் அவர்களது திருமணம் நிச்சயமாயிற்று. திருமணத்தன்றே அவருக்கு பாஞ்சோலியிடமிருந்து தந்தி வந்தது. ஒருவேளை அதிருஷ்டதேவதை மோகினியின் உருவில் காத்திருந்ததோ என்னவோ?

பாஞ்சோலி எப்போதுமே துணிவு மிக்கவர். பாடகி நூர்ஜஹானை திரையுலகுக்கு நடிகையாக அறிமுகப்படுத்தியவர் இவர்தான்; குலாம் ஹைதரை சங்கீத டைரக்டராக்கிய பெருமையும் பாஞ்சோலியினுடையதுதான்.

டெல்லியில் ஒரு விருந்தின்போது நய்யாரின் திறமையைக் கண்ட அவர், உடனே தனது அடுத்த படத்தின் சங்கீத டைரக்டராக அவரைத் தீர்மானித்து விட்டார்.

பாஞ்சோலியின் 'ஆஸ்மான்' படத்திற்கு நய்யார் முதன் முதலாக இசை அமைத்தார். ஆனல் படத்தின் சங்கீதத்தைப் பாமர மக்கள் ரஸிக்கவில்லை.

நய்யார் இதன் காரணத்தை அறிந்தார்.

சாஸ்திரீய சங்கீதத்தின் அடிப்படையில் ஆஸ்மானுக்கு அவர் இசை அமைத்திருந்தார். ஜனங்கள் மனதில் எது சுலபமாகப் படியுமோ அதுதான் எடுபடும் என்பதை அறிந்தார். இதற்காக எந்த நாட்டு சங்கீதத்தையும் கலந்து தரலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

அதன் அடிப்படையிலே அவர் சங்கீத டைரக்ஷன் செய்த படங்கள் அடுத்தடுத்து வரலாயின. 'மிஸ்டர் அண்டு மிஸர்ஸ் 55', 'ஸி. ஐ. டி.' 'ஆர் பார்', 'நயாதௌர்', 'முஜ்ரிம்'', 'தும்சா நஹின்தேகா' மற்றும் பல படங்கள் நய்யாரின் பெயரை ஒவ்வொரு ஹிந்திப்பட ரஸிகனுக்கும் அறிமுகப்படுத்தி, அவரது இசையையும் முணுமுணுக்க வைத்து விட்டன.

நய்யாரிடம் இன்று ஏராளமான பிறதேச இசைத்தட்டுகள் இருக்கின்றன. இவற்றிலிருந்துதான் அவர் இசையைப் பிரித்தெடுத்து, தனது மெட்டுக்களில் கலந்து கொடுக்கிருர். இதை ஒளிவு மறைவின்றி அவர் ஒப்புக்கொள்கிருர்.

"ஜனங்கள் அவை எந்த தேசத்திலிருந்து வருகின்றன என்பதை கேட்பதில்லை. சுலபத்தில் பாட முடியுமா என்பதைத்தான் கவனிக்கிருர்கள்'' என்று சொல்கிருர் நய்யார்.

"நான் இன்றைய நிலைக்கு வர முதல் காரணம் கடவுள்; இரண்டாவது காரணம் அதிருஷ்டம்; மூன்றாவது இசை" என்கிறார் அவர்.

அவரது மனைவி மோகினி சிறந்த கவிதைகளை எழுதக் கூடியவர். நய்யார் இசை அமைத்து இன்று பிரபலமாகி யிருக்கும் பல பாட்டுகளின் முதல் அடியை அவர்தான் தொடுத்துத் தந்திருக்கிறார். மற்ற அடிகளை படத்திற்காக அமர்த்தப்படும் கவிஞர்கள் தொகுக்கிறார்கள்.

நய்யாரின் சங்கீதம் பிறக்கும் வேளை காலை எட்டு முதல் பத்து வரைதான்.

நய்யார் ஹார்மோனியத்தை எடுத்து வைத்துக் கொள்வார். அவரது ஒரு கையின் விரல் அதன் 'ரீடு'களைத் தொட்டுச் செல்லும், மறு கை துருத்தியை அழுத்தும். வாய் மெதுவாக முணுமுணுக்கும்.

அருகில் அவரது சக ஊழியர் தபேலா வாசிப்பார்; மோகினி ஆழ்ந்து கவனிப்பார்.

திடீரென்று நய்யாரின் கை வேகமாக துருத்தியை அழுத்தும்; ரீடுகளைப் பலமாக அழுத்துவார்; உரக்கப் பாட ஆரம்பிப்பார்.

அவ்வளவுதான்! பிரபல மடைய நய்யாரின் 'மெட்டு' ஒன்று பிறந்து விடும். இதற்கு உடனே மோகினி சொற்களைத் தொடுத்து விடுவார்.

நய்யாரின் இசை இப்படித்தான் பிறக்கின்றது.

நய்யாரின் லக்ஷியம் ஒன்றே ஒன்றுதான். "என் இசையின் மூலம் மக்கள் தங்கள் கவலையை சிறிதளவாவது மறக்கச் செய்வதுதான் அது" என்கிறார் அவர்.

நர்கீசுக்குப் பரிசு

'இந்தியத் தாய்' படத்தில் நர்கீஸின் நடிப்பைப் பாராட்டி, கார்

சுதந்திர பாரதத்தின் பெருமை வாய்ந்த ஸப்த நதிகள் அல்ல... கேசவர்த்தினியால் கூந்தலை விருத்தி செய்து வரும் இந்திய பெண்மணிகளே இவர்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத் தந்து கூந்தலை மனோஹரமாக்குவது **கேசவர்த்தினி** ஒன்றே! முக அழகை கூந்தலினால் அழகுபடுத்துங்கள். உங்கள் கூந்தலைக் **கேசவர்த்தினி** கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாத்து, விருத்தி செய்து அழகுபடுத்துவது!

.... தயாரிப்பவர்கள் ....

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

கிராஸ்கட் ரோட், கோயமுத்தூர்.

G.P.

பொழுது போக்குக்கான

துப்பறியும் நாவல்கள்

	ரூ—காசு	
சூரக்கோட்டை மர்மம்	1.	50
மர்ம மனைவி	1.	50
மாயச் சமாதியில் மர்மப் புதையல்	1.	50
கவிழ்ந்த ரயிலில்...	1.	00
திரிசங்கு சொர்க்கம்	1.	50
மங்களவிலாஸ் மர்மம்	1.	25
மலை வீட்டு மங்கை	1.	50
மலையாளச் சிட்டின் மர்மம்	1.	50
துப்பறியும் ராஜு	1.	00
கொலைப்பித்தன்	1.	25
மாய மனிதர்கள்	1.	25
ரகசிய அறை	1.	50
துப்பறியும் காதலி	1.	50
எமகாதகன்	1.	25
பாரிஸ்டர் பரிமேலழகர்	1.	50
புலிப்பாண்டியன்	1.	50
மர்மக் கணவன்	1.	50
மலபார் ஹோட்டல் மர்மப் பெண்மணி	1.	50
இறந்தவளுக்கு விருந்து	1.	50
நடுநிசி நாயகி	1.	50
மர்மமாய் மறைந்த மாப்பிள்ளை	1.	50
அபிராம சுந்தரியின் குடும்ப ரகசியம்	1.	50
நரியம்மா விடுதி நங்கை	1.	50
சவுக்கடி சாந்தப்பா	1.	50
பாதாள பவனம்	1.	50

வியாபாரிகளுக்கு 25 சத விகிதம் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. இல்லை.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு,
சென்னை.2.

லிவி வாரியில் நடைபெற்ற திரைப் பட விழா குழுவினர் 'சிறந்த நடிகை' என அவரைத் தேர்ந் தெடுத்திருக்கின்றனர். பதினொரு பேர்கள் கொண்ட அந்தக் கமிட்டி யினர் நர்கீசைத் தேர்ந்தெடுப்பதில் ஒருமுகமான அபிப்பிராயம் தெரி வித்துள்ளனர்.

ஒரு இந்திய நடிகை அயல் நாட்டுத் திரைப்பட விழாவில் 'சிறந்த நடிகை' எனத் தேர்ந் தெடுக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

நான் ஏன் தயாரிப்பாளரானேன்?

நடிகர் பிரதீப்குமார் 'தீப் அண்டு பிரதீப் புரொடக்ஷன்ஸ்' என்ற படக்கம்பெனியை நிறுவி, படங் களைத் தயாரித்து வருகிறார்.

"நடிப்புத் துறையில் ஒரு நடிகன் தன் பெயரை நிலை நிறுத்திய பின், அவன் தன் மனதி லுள்ளதைப் பிரதிபலிக்க வேண்டு மானால், சொந்தத்தில் படமெடுக்க வேண்டும் என்ற எண்ணம் தானா கவே தோன்றி விடுகிறது. இது தான் நான் தயாரிப்பாளனாக மாறி யதற்குக் காரணம்" என்கிறார் பிரதீப்.

ஹிந்தியில் 'முதலாளி'

ஏவி. எம். புரொடக்ஷன்ஸார் எம். ஏ. வி. பிக்சர்ஸ் தமிழில் தயா ரித்த 'முதலாளி'யை ஹிந்தியில் தயாரிக்கப் போகிறார்கள்.

கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ஷனில் இது உருவாகும்.

அரசு தயாரிக்கும்

அரசு பிக்சர்ஸின் 'தேடி வந்த செல்வம்' படம் ஹிந்தியில் உரு வாகப் போகிறது. இதற்கான ஏற்பாடுகளை டைரக்டர் ப. நீல கண்டன் செய்து வருகிறார்.

வி. கே. சீனிவாசன்

'அன்பு' படம் திரையிடப்பட்ட சமயம் அது. படத்திலே 'ஒதெல்லோ' நாடகம் காட்டப்பட்டது. சிவாஜி கணேசன் அந்த நாடகத்திலே ஒதெல்லோ பாத்திரத்தை மிகச் சிறப்பாகப் பிரதிபலித்துக் காட்டினார். ஆங்கிலப் படங்களையே பார்த்து, ஆங்கில நாவல்களை நிறைய படித்து, ஆங்கில அறிவை நிறைய வளர்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞர், தான் கற்பனையில் கண்ட ஒதெல்லோவை நேரிலேயே (கணேசன் நடிப்பின் மூலம்) கண்டு மகிழ்ச்சி கொண்டார். தமிழ்ப் படங்களை வருஷத்திற்கு ஒரு தடவைமட்டும் பார்த்து வந்த அந்த இளைஞர், அதுமுதல் தானும் படங்களில், இதைப்போன்ற பாத்திரங்களில் நடிக்க விருப்பமும் கொண்டார். 'மாயா பஜார்' படத்தில் கர்ணனாக நடித்து ரசிகர்களிடம் சபாஷ் வாங்கும் வாய்ப்பும் பிறகு இந்த இளைஞருக்குக் கிடைத்தது. ரசிகர்களுக்கு இவ்விதழில் அறிமுகமாகும் வி. கே. சீனிவாசன்தான் அந்த இளைஞர்.

சீனிவாசன் ஒரு வைதீக குடும்பத்தில் பிறந்தவர். அவரது குடும்பத்தினர் பழமை விரும்பிகள். அவர் கூட பி. ஏ. வகுப்பில் மூன்றாம் ஆண்டு வரை குடுமியுடன்தான் காட்சியளித்தார்! மன்னார் குடியைச் சேர்ந்த கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் - லக்ஷ்மியம்மாள் தம்பதிகளின் மூன்றாவது குமாரராக சென்னையில் 1918-ம் ஆண்டு பிறந்தார் சீனிவாசன். அவர் பி. ஏ. படித்து முடிக்கும் வரை தமிழ்ப் படங்களை அதிகம் பார்த்ததில்லை. நாடகங்களில் பங்கு கொண்டதும் இல்லை. தானுண்டு, படிப்புண்டு, ஆங்கிலப் படங்களுண்டு என்றிருந்தார். பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் தேறி பட்டம் பெற்று வெளியேறிய பிறகுதான் முதன் முதலாக நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார் அவர்.



திருவல்லிக்கேணி பைன்ஆர்ட்ஸ் கிளப், அமைச்சூர் ஆக்டர்ஸ் குரூப் இரண்டிலும் அவர் அங்கத்தினராகி பவானி, சாம்சனும் டிலைலாவும், காரியதரிசி, மிஸ்டர் வேதாந்தம் முதலிய நாடகங்களில் நடித்தார். அவர் நாடகங்களில் நடித்தபோதிலும் கலைத்துறையில் அவருக்கு அப்போது பிரமாத மோகம் ஏற்பட்டிருக்கவில்லை. 'அன்பு' படத்தில் கணேசனின் நடிப்பு அவர் உள்ளத்தில் கலையார்வத்தை ஏற்படுத்திவிட்டது. ஆங்கில மோகியாக இருந்த அவர், தமிழிலும் இப்படித் திறமையைக் காட்ட முடியும் என்பதை அறிந்தார்.

ஜெமினி விளம்பர இலாக்காவிலிருந்த வி. கே. என். சாரி, சீனிவாசனை நன்கறிந்தவர். அவரிடம் சென்றார் சீனிவாசன். அப்போது ஜெமினியில் எதுவும் செய்ய இயலாததால், எஸ். டி. எஸ். யோகியாருக்குக் கடிதம் கொடுத்தார்

சாரி. ஆனால் அது ஒன்றும் சுகப் படாததால் 'ஒன்றே குலம்' தயாரிப்பில் ஈடுபட்டிருந்த கிருஷ்ணசாமிக்கு கடிதம் கொடுத்தார் சாரி. சீனிவாசன் அந்தப்படத்தில் டாக்டராகத் தோன்றினார். பிறகு அவரது நண்பரான பிலிம்சென்டர் மஜீதின் மூலம் 'நன்னம்பிக்கை'யிலும் டாக்டராக நடித்தார்.

சீனிவாசனுக்கு இரட்டையர்களின் உதவி கிடைத்தது. ஆமாம், விஜயா புரொடக்ஷன்ஸ் டெலிபோன் ஆபரேடர்களாக வேலை பார்க்கும் பி. எஸ். பத்மநாபன்--ரங்கநாதன் சகோதரர்கள் அவருக்கு நண்பர்களானார்கள். சில தயாரிப்பாளர்கள் 'நல்ல திறமையுள்ளவர்கள் இருந்தால் சொல்லுங்கள். நாம் சந்தர்ப்பமளித்துப் பார்க்கலாம். என்றார்கள். நடிகர்களில் சிலர் 'யாராவது கேட்டால் நம்மைப்பற்றிச் சொல்லுங்கள் 'என்றார்கள். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்தி அவர்களிருவரும் புரொடக்ஷன் இலாக்காவைச் சேர்ந்த ஜெகன்னாதன், சலபதிராவ் இருவரிடமும் சீனிவாசனை பற்றிக்கூறினர். அவர்களிருவரும் டைரக்டர் கே. வி. ரெட்டியிடம் சீனிவாசனை அழைத்துச் சென்றனர். 'சந்தர்ப்பம் வரும்போது பார்க்கலாம்' என்றார் கே. வி. ரெட்டி. விஜயாவின் 'மாயா பஜார்' மும்முரமாகத் தயாராகி வந்தது. கே. வி. ரெட்டி சீனிவாசனை அழைக்கவில்லை.

கர்ணன் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படவிருந்தன. கௌரவர்கள் கட்சியில் குறிப்பிடத்தக்கவனான கர்ணன் பாத்திரத்திற்கு நடிகர் தேர்தல் நடைபெற்றது. பலர் வந்தனர். மீண்டும் பத்மனாபன் - ரங்கநாதன் சகோதரர்கள், ஜெகன்னாதன் - சலபதிராவ் இருவரிடம் நினைவுபடுத்த,அவர்கள் கே. வி. ரெட்டியிடம் நினைவுபடுத்தினார்கள். கே. வி. ரெட்டி வசன பாடம் கொடுத்துப் பரீட்சித்தார். மீண்டும் மௌனம் சாதித்தார். பிறகு 'நேரம்' சரியாக இருந்ததால் உடனே வருமாறு சீனிவாசனுக்கு அழைப்பு வந்தது. 'மாயா பஜார்' பிரம்மாண்டமான தயாரிப்பு. விஜயா புரொடக்ஷன்ஸ் பெரிய ஸ்தாபனம். கே. வி. ரெட்டி சிறந்த டைரக்டர். உடன் நடித்தவர்கள் யாவரும் பிரபல நடிகர்கள். இத்தனையும் மனதில் கொண்டு சிரமப்பட்டு நடித்துப் பாராட்டப் பெற்றார் சீனிவாசன்.

மாயா பஜாரில் நடிக்கும்போதே, டி. வி. சேதுராமன் மூலம் 'செஞ்சுலக்ஷ்மி' தமிழ்ப் பதிப்பின் பொறுப்பாளராக இருந்த எம். கே. கோபாலனை சந்தித்தார் சீனிவாசன். அவர் மூலம் செஞ்சுலக்ஷ்மி தமிழ், தெலுங்கு படங்களில் தேவேந்திரனாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது அவருக்கு.

இதற்கிடையே கமலா பிலிம்ஸ் 'மாயாவினோதப் பரதேசி' படத்தில் நடிக்க ஆரம்பித்தார் சீனிவாசன். அசோசியேடட் பிரிண்டர்ஸில்

'மாயா பஜா'ரில் கர்ணனாக.

வேலை பார்க்கும் லூர்துசாமி என்ற நண்பர், கமலா பிலிம்ஸ் அதிபரான கன்னியப்பனிடம் சொல்லி, சீனிவாசனுக்கு ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் வாங்கி கொடுத்தார்.



'மணிமேகலை'யில் காஞ்சனனாக.

மீண்டும் பத்பனாபன் - ரங்கநாதன் சகோதரர்களின் முயற்சியால் ஜுபிலியின் சமூகப்படத்தில் சீனிவாசனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதைத் தொடர்ந்து ரேவதி சம்பத் மூலம், சேகர் ஆர்ட் என்டர்பிரைஸஸின் 'மணிமேகலை'யில் காஞ்சனன் பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமானார் அவர்.

சீனிவாசனுக்கு நாற்பது வயதாகிறது. நல்ல உடற்கட்டும் கவர்ச்சிகரமான தோற்றமும் கொண்ட அவர் படங்களில் நடிப்பதற்கு முற்றிலும் தகுதியுடையவர். 'நாடகங்களில் நடிக்க வேண்டும்; மேன்மேலும் நடிப்புக்கலையில் முன்னேற நாடகங்களே மிகவும் சிறந்தவை' என்ற அபிப்பிராயம் கொண்ட சீனிவாசன், மனோகரின் குழுவினருடன் நாடகங்களில் நடிக்கவிருக்கிறார். மனோகர் அடுத்து மேடையேற்றப் போகும் 'சகுனியின் சபதம்' நாடகத்தில் அவர் ஒரு முக்கிய பாத்திரமேற்று நடிப்பார்.

'செஞ்சுலக்ஷ்மி'யில் இந்திரனாக (வலது புறமிருந்து இரண்டாவதாக நிற்பவர்)

ஆங்கிலப் படங்களை ஏராளமாகப் பார்த்ததன் பயனாக, நடித்துக் கற்றதைவிட, பார்த்து அனுபவித்ததால் நடிப்புத் துறையைப் பற்றி நிறைய தெரிந்து கொண்டிருக்கிறார் சீனிவாசன். உணர்ச்சியைத் தூண்டி விடக்கூடிய விதத்திலே அமையும் சோக ரச பாத்திரமானாலும், படம் பார்ப்போர் நெஞ்சில் நிலைக்கும் விதத்தில் நடிப்புத் திறமையை வெளிக்காட்ட இடமளிக்கும் பாத்திரமானாலும் ஏற்று நடிப்பதற்கு சீனிவாசன் ரொம்பவும் பிரியப்படுகிறார். அதேபோல துணிகரமான, சாகஸச் செயல் புரியும்

கதா பாத்திரத்தில் நடிப்பது என்றால்அவருக்கு மிகவும் பிடிக்கும். அவர் இப்போது நிறைய தமிழ்ப் படங்களைப் பார்க்கிறார்! ஆமாம், தமிழ்ப்பட வுலகில் புகுந்துவிட்ட பிறகு, யார் யார் என்னென்ன செய்கிறார்கள், எப்படி யெப்படிச் செய்கிறார்கள் என்பதை யெல்லாம் பார்த்து அனுசரித்துப் போவதற்காகத்தான்.

சீனிவாசனுடன் பிறந்தவர்கள் இரண்டு பேர். குடும்பத்தின் முதல் குமாரர் நரசிம்மன். இரண்டாமவர் வரதாச்சாரியார். இவர் சமஸ்கிருதத்தில் நிபுணத்துவம் பெற்றவர். இவர்களிருவரும் தம்பி சீனிவாசனுடன் சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள 'ஸ்டேஷனரி எம்போரி'யத்தை நிர்வகித்து வருகிறார்கள்.

சீனிவாசன், பிரபல அமெச்சூர் நடிகரும் எஞ்சினியருமான எம். ஜே. பார்த்தசாரதியின் மகள் சுதாவை மணந்து கொண்டார். இந்த அன்பு தம்பதிகளுக்கு ஸ்ரீ தேவி என்ற ஏழு வயதான மகளும் கிருஷ்ணசாமி என்கிற ஐந்து வயதான மகனும் இருக்கிறார்கள்.

சீனிவாசன் பழகுவதற்கு மிகவும் ஏற்ற மனிதர். வீண் படாடோபமோ, போலி ஆடம்பரங்களோ அவருக்குப் பிடிக்காது. எதையும் பொறுமையுடனும், சமத்துவ நோக்குடனும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல் புரியும் பண்பு அவரிடம் இருக்கிறது.

சீனிவாசனிடம் மற்றொரு முக்கியமான குணமும் இருக்கிறது. தனது நடிப்பைப் பற்றி விமர்சிக்கும் நண்பர்கள், அதில் குறைகள் இருப்பதை எடுத்துச் சொன்னால் அதை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளுகிறார். அத்துடன் அதை எடுத்துச் சொன்னதற்காகப் பாராட்டவும் செய்கிறார். ஒருவர் தன்னிடம் உள்ள குறைகளை பிறர் எடுத்துச் சொல்லும்போது வரவேற்பது மிகவும் கடினம். இதற்கு நல்ல மனோதிடம் இருக்க வேண்டும். இது இவரிடம் நிறைய இருக்கிறது. இதனால்தான் இவரது நடிப்பில் படத்திற்கு படம் நாம் முன்னேற்றத்தைக் காண்கிறோம்.

'செஞ்சுலக்ஷ்மி'யில் தேவேந்திரனாக

படவுலகில் நடிகர் பஞ்சம் கோரத் தாண்டவமாடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது, இப்போது. சீனிவாசனைபோல் திறமையும் இளமையும் தோற்றமும் தேகக் கட்டும் கொண்ட ஆர்வமிக்க நடிகர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நிறையபேர் இந்தத் தொழிலை மட்டும் நம்பி வந்துவிட முடியாமல் ஒதுங்கியிருக்கிறார்கள். சீனிவாசன் கொடுக்கப்படும் எந்தப் பாத்திரத்திலும் திறம்பட நடித்து சோபிப்பார் என்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாக உண்டு.

'சம்பத்'



ஆர். ஆர். பிக்சர்ஸ்

காத்தவராயன்

காட்சிகள்



விரைவில் வெளிவர
விருக்கும் இதில் பிரபல
நக்ஷத்திரங்கள் நடித்தி
ருக்கிருர்கள். டி. ஆர்.
ராமண்ணு இந்தப்
படத்தை டைரக்ட்
செய்திருக்கிருர்.

கண்ணன் பிலிம்ஸ்
மனசுக்கேத்த
மாப்பிள்ளை
... காட்சிகள் ...



அஞ்சலிதேவி,
ஏ. நாகேஸ்
வரராவ், ராஜ
சுலோசன
முதலியோர்
நடித்துள்ளனர்

நீங்களும்
மிளிரலாம்!
பாரத் ப்ரொடக்ஷன்ஸ்
'விக்ரமாதித்தன்' படத்தின்
அழகு நட்சத்திரம் பத்மினி
LUX
TOILET SOAP
LUX
பத்மினி தலைசிறந்த நாட்டிய நடிகையாகப் பிரகாசிப்பது அவரது கலைத் திறனால் மட்டுமல்ல, அழகினால் கூடத் தான். பத்மினி போன்ற சினிமா அழகிகளுக்கு எப்படியோ அதே போல உங்களுக்கும் மாசற்ற மேனியே மகத்தான செல்வம். பேரழகி பத்மினி தந்துதவும் குறிப்பு இதோ: "மேனியழகிற்காக நான் உபயோகிக்கும் தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பின் மென்மையே மென்மை!" லக்ஸ் சோப்பின் மிருதுவான நுரையிலும், கொள்ளை கொள்ளும் நறுமணத்திலும் இன்பம் காண்கிறார் பத்மினி. நீங்களும் அவ்விதமே இன்புறலாம் — இன்றே லக்ஸ் சோப் உபயோகித்துப் பாருங்கள்!

தபால் பெட்டி

பும் முயற்சியும் எடுத்துக் கொள்ளுமா?

கஜேந்திரன்,
சென்னை

* நிறுவுவார்களா?

தென்னாட்டுத் திரைப் படத் தொழில் வெகுவாக முன்னேறி மிக முக்கியமானதாகவும் ஆகி விட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாகத் தமிழகத்தில்தான் ஆந்திர, கேரள, கன்னட, இந்தி, சிங்களப் படவுலகுக் கெல்லாம் சிறந்த படங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. சென்னை ஸ்டூடியோக்கள்தான் இன்று சுறுசுறுப்பாக இருக்கின்றன. இந்த நிலையில் லட்சக்கணக்கான டாலர் முதலீடு செய்து, கச்சா பிலிம் தொழிற்சாலை நிறுவுவதற்குத் துணை புரிவதாக ஆலோசனை வெளியிட்டிருக்கிறது கொடக் கம்பெனி. ஏற்கெனவே ஜெர்மன் அரசாங்கம் இத் தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவ முன் வந்ததையும் கண்டோம். இதுபற்றி மத்திய அரசாங்கம் சுமார் ஐம்பது கோடி ரூபாய் திட்டச் செலவில் கச்சாபிலிம் தொழிற்சாலை ஒன்றை இந்தியாவில் நிறுவ யோசித்து வருவதாகத் தெரிகிறது. எது எப்படி இருந்தாலும், இந்தத் தொழிற்சாலை தமிழ் நாட்டில்தான் நிறுவப்படவேண்டும். இந்தக் குரலில் நியாயம் மண்டி நிற்பதை எத்தனையோ ஆதாரங்களால் விளக்க முடியும். எனவே ஜெர்மன் நிபுணர்கள் கூறியபடி தமிழகத்தில் — உதகமண்டலத்தில்தான் கச்சா பிலிம் தொழிற்சாலை நிறுவப்படவேண்டும் என்பதை சென்னை அரசாங்கம் வற்புறுத்தி அதற்கான உழைப்

தவறு யாருடையது?

இன்றைய பிரபல நடிகர்களைப்பற்றிய குற்றச்சாட்டு ஒன்று இருக்கிறது. தயாரிப்பாளர்களுடன் அவர்கள் தக்கபடி ஒத்துழைப்பதில்லைஎன்பது தான் அந்தக் குற்றச்சாட்டு. இதில் ஓரளவு உண்மை இருக்கலாம், ஓரிருவர் சம்பந்தப்பட்டவரை. ஆனால் குற்றச்சாட்டு பொதுவாக நியாயமானது அல்ல. ஒரு நடிகர் இருபது படங்களுக்கு மேல் நடிக்கிறார். அவர் ஒப்புக் கொள்ள மறுத்தாலும்கூட, சிபார்சு பிடித்தோ, அல்லது விநியோகஸ்தர்களை வலைபோட அந்த நடிகரின் பெயர் விளம்பரங்களில் வரவேண்டும் என்று கெஞ்சியோ ஒப்பந்தம் செய்து விடுகிறார்கள். நடிகரும் ஒரு மனிதரே, தேவரல்ல! அவர் எல்லாத் தயாரிப்பாளர்களையும் எப்போதும் திருப்திப் படுத்த முடியுமா? அது இயலுமா? மனிதனுக்கு ஓய்வு தேவையில்லையா? எல்லோரும் ஒரே நடிகர் சம்பந்தப்பட்ட படங்களை விரைவில் திரையிட்டுவிட விரும்புகிறார்கள். அது முடிவதில்லை. ஆகவே எந்த நடிகருக்காகத் தவம் கிடந்தார்களோ, அவரைத் திட்ட ஆரம்பிக்கிறார்கள், ஒத்துழைப்பதில்லை என்று. ஆகவே 'என்னை விட்டுவிடு' என்று சொல்லும் நடிகர்களை விட்டுவிட்டு புதுமுகத்தைப் புகுத்திப் படம் எடுக்க தயாரிப்பாளர்கள் முனைய வேண்

* இக்குறியிட்ட கடிதத்திற்கு பத்து ரூபாய் பரிசளிக்கப் பட்டிருக்கிறது.

டுமேயல்லாது, பிரபல நடிகர்களின் ஒத்துழைப்பைப் பற்றிக் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

சுஜாதா,
சென்னை.

பாடலும் பொருளும்

தமிழ்ப் படங்களைப் பார்க்கப் போகிறோம். சில பாடல்கள் நம் மனதுக்கு வேதனையைத் தருகின்றன. சமீபத்தில் வெளி வந்த 'தேடி வந்த செல்வம்' படத்தில் 'பூவாடை நீ எனக்கு பாவாடை நான் உனக்கு' என்ற பாடல் கேட்பதற்கு வெறுப்பாக இருக்கின்றது. இதேபோல 'திருமணம்' படத்தில் 'அதிலே வை, இதிலே வை எதிலே வேணுன்னாலும் வை' என்ற பாடல் மிகவும் விரசமாக இருக்கிறது. பாடல் இயற்றுபவர்கள் இப்படிப் பட்ட ஆபாச சிலேடைச் சொற்களைச் சேர்க்காமலிருப்பார்களா?

ஆர். வி. செயராமன்,
கோயமுத்தூர்.

புதுமுகம் எங்கே?

பிரபல நடிகர்கள் ஏராளமான படங்களில் ஒப்பந்தமாகி விட்டதால் புதுமுகங்களைப் புகுத்திப் படமெடுக்கப் பலர் கிளம்பினர்கள். சில பெரிய தயாரிப்பாளர்கள் மின்னல் தயாரிப்புக்களை ஆரம்பித்தார்கள். ஆனால் இதனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், எம். ஜி. ஆர் மூவரையும் விட்டு ராஜேந்திரனிடம் பலர் போய், அவரையும் இதே நிலைக்குக்கொண்டு வந்து விட்டார்கள். அவரும் 'பிசி' நடிகர் ஆகிவிட்டார். பிறகு பாலாஜி. இவரது படம் அதிகம் வெளிவராத போதே இவரும் 'பிசி' நடிகராகி விட்டார். இப்போது மீண்டும் நடிகர் பஞ்சம். இது தீர வழியில்லையா? இருக்கிறது, செம்மறியாட்டுக் குணம் தயாரிப்பாளர்களை விட்டு அகன்றால். அசோகன் ஈஸ்வர், ஸ்ரீனிவாசன், பார்த்திபன், தாமோதரன் போன்ற பல நடிகர்கள் திறமையுடனிருந்தும் தகுந்த சந்தர்ப்பமின்றி இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் ஒப்பந்தம் செய்து படமெடுக்கலாம். புதுமை நடிகர் தேர்வில் அவசியம் இருக்கவேண்டும். அதுவே இன்றைய அவசிய, அவசர தேவை.

கே. எஸ். சுப்பிரமணியன்,
சென்னை.

ராயல் பிலிம்ஸ் 'நீலாவுக்கு நிறைஞ்ச மனசு' படத்தில் ராமதாஸ் தோன்றும் காட்சி.

சர்க்காரின் போக்கு

கச்சா பிலிம் உற்பத்தி சாலைக்கு உகந்த இடம் தென்னாட்டிலுள்ள ஊட்டிதான் என்று வெளிநாட்டார் அபிப்பிராயப்பட்டதாகச் செய்தியறிந்து மகிழ்ச்சியடைந்தேன். தென்னாட்டில் இந்தத்தொழில் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்காவது குறையும் என்ற நம்பிக்கை என்னுள் இருந்தது. ஆனால் அந்த நம்பிக்கை முறிந்தது. அத்துடன் இந்தியாவில் தயாராகாத கச்சா பிலிம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாவதை அரசாங்கம் படிப்படியாகக் குறைப்பதால் ஏற்படக்கூடிய நிலையை நினைத்தாலே பயமாயிருக்கிறது. தொழிலில் மந்தநிலை ஏற்பட்டாலே பலருக்கு வேலை போய்விடும். வேலை தேடித்தரும் இலாக்காவை நடத்திவரும் அரசாங்கத்தின் கச்சா பிலிம் இறக்குமதிக் கொள்கையினால் இப்போது வேலையிலுள்ளவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த விஷயத்தை உடனடியாகக் கவனித்து—ஆயிரமாயிரம் பேர்களின் வாழ்வுப் பிரச்னை இது என்பதை மனதில் கொண்டு இறக்குமதியை முழுக்க முழுக்க அனுமதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

வசந்தி-ரமா,
பம்பாய்.

இது நல்லதா?

'பேசும் படம்' பத்திரிகையில் சில குறிப்பிட்ட நடிக, நடிகையரின் படங்களும் கட்டுரைகளுமே அடிக்கடி பெரும்பாலும், வெளிவருகின்றன. 'பேசும் படம்' ரசிகர்களுக்காக நடத்தப்படும் பத்திரிகை. பொதுப்படையாக விருப்பு வெறுப்புகளுக்காக நடத்தக்கூடாத பத்திரிகை. அதில் பாரபட்சத்திற்கு இடமே இருக்கக்கூடாது. துரதிருஷ்டவசமாக அப்படி நேர்ந்து வருவது குறித்து வருந்துகிறேன். 'பேசும் படம்' இனியாவது பாரபட்சமின்றி நடக்கும் என்று நம்பலாமா?

கே. கலைக்கதிரோன்,
மதுரை.

'பேசும் பட'த்தின் பால் நீங்கள் கொண்டுள்ள அன்பை உங்கள் கடிதம் நிரூபிக்கிறது. ஆனால் உங்கள் குற்றச்சாட்டு தவறானது. 'பேசும் படம்' இன்று பதினேழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. சினிமாப் பத்திரிகை உலகிலேயே மகத்தான சாதனையான இதற்கு ரசிகர்களின் ஆதரவும் 'பேசும் பட'த்தின் பாரபட்சமற்ற கொள்கையுமே காரணங்களாகும். 'பேசும் படம்' முழுக்க முழுக்க சேவை நோக்கத்துடனேயே பிறந்து வளர்ந்திருக்கிறது. ஒத்துழைப்பவர்களுக்காகச் சேவை செய்ய அது எப்போதும் தயாராக இருக்கிறது. இது சம்பந்தமாக ஏற்கனவே விளக்கம் தந்திருக்கிறேன். நடிகர்களில் யாரும் வேண்டியவர் - வேண்டாதவர்

லலிதகலாவின் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' படத்தில் இ. வி. சரோஜா

நமக்குக் கிடையாது. இதை மீண்டும் கூற ஆசைப்படுகிறேன்.ஆ-ர்]

ஐயோ தமிழ்ப் படமே!

படம் பார்ப்பவன் படுமுட்டாள் என்ற நோக்கத்தோடு படத்தயாரிப்பில் ஈடுபடுகிறார்கள் சிலர். சமீபத்தில் திரையிடப்பட்ட ஒரு படத்தில் நகைச்சுவை, விறுவிறுப்பு என்ற பெயர்களில் மட்டமான சில காட்சிகளைப் பார்க்க நேர்ந்தது. வேட்டைக்காரரின் மகனுடைய கார் ஒரு சாக்கடைக்குள் நுழைந்து மறுபுறம் வருகிறது! இதைவிட விந்தை, அந்தக் கார் 'லெவல் கிராசிங்'கைத் தாண்டுவது! இதைப் போன்ற மட்டமான தமிழ்ப் படங்களிலிருந்து விடுதலை கிடைக்கும் நாளே படவுலகின் நன்னாள்.

கே. எஸ். அப்துல்காதர்,
சென்னை.

ஏன் சொல்லமாட்டார்கள்?

திரு காமராஜர் காரசாரமாகப் பேசுகிறார்; திரு கக்கன் கர்ஜிக்கிறார்; திரு பக்தவத்சலம் பாராட்டாமல் பதறுகிறார்; திருமதி லூர்தம்மாள் சைமன், 'சைத்தான்' என்கிறார்; திரு வெங்கட்ராமன் 'வேண்டாம் சினிமா' என்கிறார்; திரு ராமையா ரணகளத்திலே சமர் புரியும் வீரன்போல் தாக்குகிறார்; திரு மாணிக்கவேலர் 'மட்டம்' என்கிறார்; திரு கேஸ்கர் கேலியும் கிண்டலும் செய்கிறார்; திரு ராஜாஜி ராமபாணம் தொடுக்கிறார்; திரு ஈ. வே. ரா. ஈவு இரக்கமின்றி 'ஒழித்துக் கட்டுவேன்' என்கிறார்; திரு சிவஞானம் சீறி விழுகிறார்; திருமதி குழந்தையம்மாள் குற்றம் காண்கிறார்; திருமதி அனந்தநாயகி அலட்சியம் செய்கிறார்—சினிமாவைப் பற்றி. ஏன்? சமீபத்தில் 'திருமணம்' என்ற படத்தைப் பார்த்தேன். ஆடம்பரமும் முல்லையும் 'வை ராஜா வை, அதிலே வை, இதிலே வை, எதிலே வேணும்னாலும் வை, அடிச்சா அடிச்சது, அசந்தா அசந்தது'' என்று ஆடிப்பாடி சூதாடுகிறார்கள். போட்டிகளை சர்க்கார் சமீபத்தில் ஒழித்த பின் இப்படிப்பட்ட காட்சிகளை, அதுவும் சர்வ ஆபாசமானவற்றை அனுமதிப்பதே மிகவும் தவறு. இந்த ஆபாசப் பாட்டுக்கு ஆண், பெண் ஆட்டம்; அதைப் பார்க்க ஒரு கூட்டம். இப்படிப்பட்ட பல காட்சிகளைப் பல படங்களில் பார்த்து, கேட்டு அறிந்துதான் சினிமாவை பலரும் பழிக்கிறார்கள். பல மாதங்கள் ஓடிய படங்கள் பல நாட்கள் ஓடுவது கூட இல்லையென்றால் இதைப் போன்ற ஆபாசக் காட்சிகளே அதற்குக் காரணம்.

அருணா நமசிவாயம்,
திருச்சி.

கலையுலகில் பாரபட்சம்

நம் நடிக, நடிகையரில் சிலர் வெளிநாடு சென்று திரும்பினால் அவர்களைப்பற்றிப் பிரமாதப்படுத்துகின்றன பல பத்திரிகைகள். இன்னும் சிலர் சென்று திரும்பினால் அவர்களைப்பற்றி மூச்சுக்கூட விடுவதில்லை. அதே போல புகழ்பெற்ற ஒரு நடிகர் காலமாகி விட்டால் 'அவர் இறந்தது கலையுலகிற்கு மகத்தான நஷ்டம்' என்று எழுதுவதும், சாதாரண நடிகர் இறந்தால் அதிகம் குறிப்பிடாமலிருப்பதும் வேடிக்கையாயும் வேதனையாயுமிருக்கின்றன. நடிகர்களில் யார் வெளிநாடு சென்று திரும்பினாலும் நமக்குப்

பெருமையே. அதேபோல யார் இறந்தாலும் நஷ்டமே. பத்திரிகை யுலகில் இப்படிப்பட்ட பாரபட்ச முறை ஏன்?

ஆர். லலிதா.
சென்னை.

[நீங்கள் நினைப்பது தவறு. பத்திரிகைகள் பாரபட்சம் காட்டுவதில்லை. பத்திரிகைகள் செய்தியைத் தயாரிப்பதில்லை. அவற்றிற்கு சம்பந்தப்பட்டவர்கள் உண்மையான செய்தியை அனுப்ப வேண்டும்..அழைப்பு அனுப்ப வேண்டும். இதெல்லாம் அவரவர் பழகும் தன்மையில்தான் இருக்கிறது. கலைத்தூதுவராக யார் வெளிநாடு சென்று திரும்பினாலும் பத்திரிகைகள் அதைக் குறிப்பிடத் தவறியதில்லை. போவதும் வருவதும் ரகசியமாகவோ, திடீர்ப் பயணமாகவோ இருந்து விட்டால் யார் என்ன செய்ய முடியும்? குறிப்பிட்ட தொழிலில் ஒருவர் மேதை என்று எல்லா ரசிகர்களாலும் பாராட்டப்படுகிறார் என்றால் அவர் பிரிவு எல்லோருக்கும் கஷ்டமாகவும் கலையுலகுக்கு நஷ்டமாகவும் இருக்கும். எல்லாவற்றையும் ஒரே மாதிரி குறிப்பிட்டுவிட முடியுமா? சாதனைகளும், பழகும் பண்பும் தான் இதில் முக்கியம். உலகில் தினமும் எத்தனையோ பேர் இறக்கிறார்கள். எல்லோருமே கவலைப்படுகிறார்களா? அதுவே புகழ் பெற்ற கலைஞரோ, தலைவரோ, விஞ்ஞானியோ இறந்தால் அதை நாட்டுக்கு நஷ்டம் என்று குறிப்பிடுவதில்லையா? —ஆர்.]

மெய்ப்பொருள் காண்பது அறிவு

'ஒரு ஆடவனை அவன் மனைவி கீழே பிடித்துத் தள்ளுவதாக காட்டப் படுவது பெண்கள் சமுதாயத்தை அவமானப் படுத்துவதாகும்' என்று 'பேசும்படம்' ஆகஸ்ட் இதழில் குமாரி டி. சுந்தரா குறிப்பிட்டிருக்கிறார்; இது சரியல்ல. ஆண்களைக் கண்டபடிபேசி, கழியால் அடித்து விரட்டும் முரட்டு மனைவியரைப்போல், பெண்களுக்கு இயற்கையாக அமைந்து விட்ட அடக்கத்தை அஸ்திவாரமாக்கி அதன்மீது கொடுமைகள் பல புரியும் ஆடவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள், மக்களில் ஒரு சாரார் இப்படிப்பட்ட அநாகரிகச் செயல்களைக் கடைப்பிடிப்பதால்தான், சில குடும்பங்கள் சிதைவுற்று, சிறப்பற்ற வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது என்ற கருத்து வெளிப்படவே இப்படிப்பட்ட காட்சிகள் காட்டப்படுகின்றன; பெண்களை இழிவு படுத்துவதற்காக அல்ல. க. க. க. தெய்வம், மனம்போல மாங்கல்யம், இல்லறமே நல்லறம், குடும்ப கௌரவம், மங்கையர் திலகம் போன்ற பல படங்கள் இந்த அநாகரிகச் செயல்களையும் ஒழிக்க வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன. சினிமாவில் எல்லா அம்சங்களும் இருக்கின்றன. நாம் மெய்ப்பொருள் காண முயல வேண்டுமே அல்லாது சினிமாவைக் குறை கூறி விடக்கூடாது.

ஜி. எஸ். லிங்கம்,
சென்னை.

[சகோதரியின் அபிப்பிராயத்தையே நீங்களும் பிரதிபலிக்கிறீர்கள். ஆனால் சொல்லும் முறையில்தான் வித்தியாச மிருக்கிறது. பெண்களில் சிலர் முரட்டுக் குணம் படைத்தவர்கள் என்பதை அவரும் கூறியிருக்கிறார். நாள் வளர வளர பகுத்தறிவும் வளர வேண்டும். பெண்ணினத்தை அலட்சியப் படுத்தி ஹாஸ்ய(!)க்காட்சியை அமைக்க வேண்டாம் என்று மட்டுமே அவர் கூறுகிறார். அத்துடன் சினிமா மிகச் சிறந்த பிரசார சாதனமாக இருப்பதால் பெண்ணினத்தைப் பற்றிய இப்படிப்பட்ட காட்சிகள் அவசியமில்லையே என்கிறார். எப்படியும் சகோதரி மெய்ப்பொருளை மறைக்கவில்லையே. ஆர்.]

M/s சுராஜ் ஏஜென்ஸீஸ், 11, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14.
ஸ்ரீ பால பட்டாபி செட்டியார், 246, வைசியாள் தெரு, கோவை.
M/s மீனாக்ஷி என்டர்பிரைஸஸ், 4, கூட்ஸ் ஷெட் தெரு, மதுரை.

நான் ரசித்த காட்சி

தேடிவந்த செல்வம்

பொருள் தேடும் நோக்கத்தோடு வீட்டைவிட்டு வெளியேறி வந்த சிதம்பரம் உண்ண உணவின்றி மயங்கித் தவிக்கிருன். அப்போது ஒரு ஆப்பக் கடைகாரத் தாய், தன் மகனுக்காக வைத்திருந்த கஞ்சியை சிதம்பரத்திற்கு அன்போடு கொடுத்து, அவன் பசி தீர்த்து, அவனுக்கு ஆறுதலும் உற்சாகமும் அளிக்கிருள். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்ற பழமொழியை நிரூபிக்கும் அருமையான இக்காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

கே. பாலசுப்பிரமணியன்,
சம்பை.

அமிர்தலிங்கம் பணம் வாங்குவதற்காகத் தன் எஜமானனிடம் செல்கிருன். அங்கு அவன் எஜமானர், "பணம் ஒன்றும் இல்லை. போய் முதலில் சாப்பிட்டுவிட்டுவா" என்று கூறுகிருர். அங்கு பாவாடை அமிர்தலிங்கத்திற்குச் சோறு போட்டு "வயிற்றுக்குத் துரோகம் செய்யாமல் நிறைய சாப்பிடு" என்று கூறுகிருன். ஏழைத் தொழிலாளரின் அன்பைப் பிரதிபலிக்கும் இந்த ரசமான காட்சியை நான் ரொம்பவும் ரசித்தேன்.

கே. கே. ரமணி,
புத்தூர்-திருச்சி.

ஏலக்கடையிலிருந்து பண்ணையாரும் நிம்மியும் வீடு திரும்புகின்றனர். பண்ணையார் தன் மனைவியிடம் தான் அங்கு பார்த்த அம்பலம்தான் மாப்பிள்ளையாக வேண்டும் என்று கூறுகிருர். 'நான் ஏலக் கடையில் பார்த்தேன் மாப்பிள்ளையை. அவன்தான் நம் மகளுக்குத் தகுந்தவன்' எனக்கூறுகிருர். அங்கிருந்த பாவாடை, 'ஏனுங்க, மாப்பிள்ளைகளை ஏலம் போடுகிருர்களா?' என்று கேட்கிருன். சிந்தையைக் கிளறும் சிறந்த ஹாஸ்யக் காட்சி இது.

ம. வே. வரதராஜன்,
பூவிருந்தவல்லி.

பண்ணையார் மகளுக்கும் குடியானவன் மகனுக்கும் திருமணம் நடந்து விடுகிறது. பண்ணையார் ஏமாற்றப்பட்டோம் என்கிற கோபத்தால் குடியானவன் சப்பந்தியை நயவஞ்சக, போலிச் சிரிப்புடன் மாடிக்கு அழைத்துச் சென்று சவுக்கால் அடித்து துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்துகிருர். குடியானவன் பயந்து மாடியிலிருந்து விழுந்து விடுகிருன். ஒரு கால் முடமாகி அவஸ்தைப்படுகிருன். கல் மனதையும் கரையச் செய்யும் காட்சி இது. பணத்திமிர் பிடித்தவர்களின் மனப்பான்மையை விளக்கும் சிறந்த காட்சி இது.

அருணு நமசிவாயம்,
திருச்சி.

இல்லறமே நல்லறம்

தன் மகள் லக்ஷ்மியை காண ஓடோடி வருகிருர் தந்தை. அப்பொழுது அவர் மருமகன் வேணுகோபால் வேசியுடன் கும்மாளமடித்து விட்டுக் குடிபோதையில் வீடுதிரும்புகிருன். "ஐயா! என் மகளை 'கண்ணின் மணியைப் போல் காப்பாற்றுகிறேன்' என்று சொல்லி விட்டு இப்போது இப்படிச் செய்கிறீர்

களே'' என்றுகேட்கிறார். ''என் மனைவியை நான் அடித்தால் நீ யாரய்யா கேட்பதற்கு?'' என்று கூறுகிறான் வேணுகோபால். ''இந்த பெண்ணைப் பெற்றவர்கள் இந்த மாதிரிவிட்டு விட்டுத் தான் நாடு இந்த நிலைமைக்கு வந்து விட்டது. மனைவியை அடிக்கும் மாபாதகர்களைத் தக்கபடி தண்டிக்க வேண்டும். அந்த உலுத்தர்களை — குடும்பத்தை பொறுப்புடன் நடத்தத் தெரியாதவர்களை—காரணம் இல்லாமல் கண்டபடி மனைவியை அடிப்பவர்களைச் சமூகம் இனி விட்டு வைக்காது'' என்று கர்ஜிக்கிறார், லக்ஷ்மியின் தந்தை. பெற்றவரின் மனப்போக்கை விவரிக்கும் சிறந்த காட்சி இது.

எம். ஆறுமுகம்,
பாண்டமங்கலம்.

தன் மகள் மேலுள்ள பாசத்தால் தன் மருமகன் வேணுகோபாலின் மேல் கோபத்தோடு பாய்கிறார் பெருமாள். அப்போது அவர் மகள் இருவருக்குமிடையே பாய்ந்து தடுக்கிறாள். அத்துடன் நில்லாது, 'எங்கள் குடும்ப விஷயத்தில் நீங்கள் தலையிடாதீர்கள்' என்று கணவன் பக்கம் பேசுகிறாள். என்னதான் பெற்று வளர்த்தவர்களானாலும் பெற்றோரை விட மணமான பெண்ணுக்குப் புருஷனே உயர்ந்தவன் என்பதை விளக்கும் ரசமான காட்சி இது.

கே. மகாதேவன்,
தென்காசி.

வேணு, தன் நிலத்தைப் பார்வையிட வந்தவன், லக்ஷ்மியை கண்டு காதல் கொள்ளுகிறான். ஒருநாள் தன் தாயாரிடமிருந்து வந்த கடிதத்தை லக்ஷ்மியிடம் கொடுத்துப் படிக்கும்படிக் கூறுகிறான். லக்ஷ்மி ஒவ்வொரு எழுத்தாகக் கூட்டி ராகம் போட்டுப் படிக்கிறாள். கிராமப் புறத்துச் சூழ்நிலையை அருமையாக விளக்குகிறது இக்காட்சி.

கே. சையத் காசிம்,
திருச்சி.

கணவன் செல்வராஜு சிறைக்குச் சென்ற பிறகு, திக்கற்ற நிலையில் பலவிதத்திலும் கொடுமைப்பட்ட பின், சென்னைத் தெருக்களில் அலைந்து அலுத்துப்போய் ஓரிடத்தில் இளைப்பாறுகிறாள் மாலதி. அவள் மகன் வேணு, ஒருவரிடம் பிச்சை கேட்டுக் காசு

தஞ்சாவூர் T. A. அப்துல் ரஹீம்
காஷ்மீர்-குஸும்
சேவல்
மார்க்கு
ஸான்டலக்ஸ்
நறுமணக்களிம்பு
நஞ்சன்கூடு பல்பொடி
மற்றும்
54, குடும்ப மருந்துகள்
விபரப்புத்தகத்திற்கு எழுதுக
வைத்தியர் உதவி யிருப்பதால் எழுதியும் சிகிச்சை பெறலாம்.

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, சென்னை-1.

வாங்குகிறான். இதைக் கவனித்த மாலதி அவனை அடித்து, 'இம்மாதிரியெல்லாம் பிச்சை வாங்கினால் நான் உன்னோடு பேசமாட்டேன்' என்கிறாள். ஏழையானாலும் பிச்சை கேட்கக்கூடாது என்ற நல்ல தத்துவத்தைப் போதிக்கும் சிறந்த காட்சி இது.

வே. முத்துக்குமரன்,
கும்பகோணம்.

தன் நடவடிக்கைகளைப் பற்றி தன் மனைவி லக்ஷ்மியிடம் கூறியவன் தன் வேலைக்காரன் தர்மாவே என்பதறிந்த வேணு, அவனிடம் சென்று கடிந்து பேசி, தள்ளி விடுகிறான். மாடியிலிருந்து விழுந்த தர்முவிடம் வேணுவின் தாய் மாலதி, ''தர்மா! நீ கோபித்துக் கொள்ளாதே. எங்கள் குடும்பத்தின் மீது ரொம்ப விசுவாசம் உள்ளவனாக இருக்கிறாய்'' என்று கூற அவன், ''இல்லிங்க, நான் கோபப்படவில்லை. அவர் நல்லபடியாகத் திருந்த வேண்டுமென்பதுதான் என் ஆசை. இது என் பொறுப்புத்தானம்மா'' என்கிறான். தன் மனைவி

மக்களிடமே தான் யார் என்பதைச் சொல்ல முடியாமல் பரிதவிக்கும் ஒருவனுடைய நிலையை மிகச் சிறப்பாக நாகய்யா சித்தரிக்கும் இக்காட்சியை மிகவும் ரசித்தேன்.

டி. கி. ரா. விந்தன்,
திருச்சி.

செங்கோட்டை சிங்கம்

புத்தி சுவாதீனமின்றி வைத்தியரிடம் தங்கியிருக்கிறாள் லக்ஷ்மி. தன் குழந்தையைப் பிரிந்து புத்தி பேதலித்திருக்கும் லக்ஷ்மி, வைத்தியரின் மகன் தன் தாயை ''அம்மா'' என்றழைக்கும்போது, தன் நினைவுபெற்று அவனைத் தன் மகன் என்று நினைத்து அள்ளி அணைக்கிறாள். பாசத்தை விளக்கும் காட்சி இது.

வி. கோசன்,
வலம்புரி.

திருமணம்

'நம் திருமணத்துக்கு அப்பா ஒப்புக்கொண்டு விட்டார்' என்று காதலன் நட.ராஜனிடம் கூறுவதற்காக மகிழ்ச்சியுடன் ஓடி வருகிறாள் வாணி. அப்போது நடராஜனுடன் வேறொரு பெண் இருப்பதைக் கண்டு சந்தேகம் கொண்டு வீடு திரும்பி தனக்குத் திருமணம் வேண்டாம் எனக்கூறிவிடுகிறாள். வாணி திருமணத்தை வெறுக்கும் காரணத்தை அறிந்த அண்ணி, 'ஒரு ஆணுடன் ஒரு பெண் இருந்தால் காதலி என்றுகூறி விடக்கூடாது. சகோதரியாகவும் இருக்கலாமல்லவா' என்று விளக்குகிறாள்..

எம். கே. பிக்சர்ஸ் 'வாழவைத்தவன்' படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியும்.

ஆத்திரக்காரருக்கு புத்திமட்டு என்பதை விளக்கும் இந்தக் காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

ரமா ராஜன்,
பம்பாய்.

வேலைதேடும் பொருட்டு தன் அண்ணனைப் பிரிந்து பட்டணத்துக்கு கிளம்புகிறான் நடராஜன். அப்போது அவன் அண்ணன் மகள் மேகலை ஓடி வந்து தனக்கென்று கிடைத்த மாங்கனியை அவனுடன் சாப்பிட விரும்பியதாகவும் அவன் பட்டணம் கிளம்புவதால் அங்கு சென்று சாப்பிடட்டும் என்றும் கூறுகிறாள். ஒரு கிராமப் பெண்ணின் வெள்ளை யுள்ளத்தைப் பிரதிபலிக்கும் ரசமான காட்சி இது.

ராம. நல்லவன்,
வலம்புரி.

அன்னையின் ஆணை

தன் தந்தையின் மேலுள்ள ஆசையால் கணவனைத் துன்புறுத்தி விட்டோமே என்று அவனிடம் வருகிறாள் பிரேமா. தன் அன்னையின் ஆணையை நிறைவேற்றுவதற்காக உடல், பொருள், ஆவியை அர்ப்பணிக்கத் தயாராகும் கணேஷ், அவள் தன் மனைவி என்றும் பாராமல் துண்டினால் அடித்துவிடுகிறான். பிறகு அவளைத் தூக்கி அணைத்தபடி தாயின் படத்தருகே செல்கிறான். தந்தையைக் காண வேண்டுமென்ற துடிப்பு அவளுக்கு. அன்னையின் ஆணையை நிறைவேற்றும் துடிப்பு அவனுக்கு. சிவாஜி கணேசனும் சாவித்திரியும் அதியற்புதமாக நடித்திருக்கும் இந்தக்காட்சி மிகமிகச் சிறந்ததாகும்.

எஸ். எஸ். வீரப்பன்,
காரைக்குடி.

உலகப்பிரசித்தி பெற்ற தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்கு க்குணமளிக்கும்

பெப்ஸ்
வில்லைகள் உட்கொண்டு பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது.

தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் முதலியவை பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும் வில்லைகளை உட்கொண்ட உடனேயே அகலுகின்றன. பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும், வலியைக் குறைக்கவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள்.

பெப்ஸ்
தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணம் அளிக்கும் வில்லைகள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட.

FPY-56-TAM

சோல் ஏஜண்டுகள்:
தாதா & கோ.,
86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

அன்னையின் ஆணை

'அவனைப் பழி வாங்கும் வரை வாழ்க்கையின் எந்த இன்பத்திலுமே உன் எண்ணம் செல்லக் கூடாது' என்று கூறுகிறாள் தாய். 'அன்னையின் ஆணையை நிறைவேற்றுவதைத் தவிர வாழ்க்கையில் ஒரு மகனுக்கு வேறு இன்பம் என்னம்மா இருக்க முடியும்?' என்கிறான் கணேஷ். ஒரு உத்தமமான மகனின் உள்ளப் பண்பைச் சித்தரிக்கும் சிறிய காட்சி இது.

ஏ. வி. ராமானுஜாசாரியார்,
வாரணவாசி.

கணேஷ் தன் மனைவியை முகம் துடைக்கும் மேல் துண்டினால் அடித்து விடுகிறான். துவண்டு விழும் அவளைத் தூக்கி அணைக்கிறான். அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதை விளக்கும் உணர்ச்சி மயமான இக்கட்டத்தை ரசிக்காமலிருக்க முடியுமா?

வி. வி. சுப்பிரமணியன்,
சென்னை

மாலையிட்ட மங்கை

மணமாகி கணவனுடன் வீடு செல்லும் சரசுவதி, தன் கணவனின் முறைப் பெண்ணான கமலம், தன்னிடம் கடுமையாக நடந்து கொள்வதைக் கண்டு காரணம் கேட்கிறாள். பிறகு, தான் வெளியேறுவதால் கமலத்திற்கு வாழ்வு கிடைக்குமானால் தான் சர்வ பரித்தியாகம் செய்யத் தயார் என்கிறாள். ஒரு பெண் தன் போன்ற மற்றொரு இளம் பெண்ணுக்கு வாழ்வு தர எந்தத் தியாகம் செய்யவும் துணிவாள் என்பதை விளக்கும் சிறந்த காட்சி இது.

ராம. நல்லகருப்பன்,
வலம்புரி.

'சிரஞ்சீவி'யின்

அற்புதமான மர்ம நாவல்

நள்ளிரவில் நடந்தது

பிரபல நடிகை சுகந்தியின் அறையில் மாண்டவனின் சவம் மறைந்த மாயம். அதைத் தொடர்ந்து பல மர்மங்கள். படித்து முடிக்கும் வரை புஸ்தகத்தை கீழே வைக்க மனம் வராது.

விலை ரூ. 1. 25

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை-2.

JL
M211,N47
N58.17.1
89688

வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!

இல்லறமே நல்லறம்

ராணி முதலில் செல்வராஜி டம் பத்திரத்தைப் படிக்கும் படிச் சொல்லுகிறாள். படித்த செல்வராஜ் கையெழுத்திட மறுக்கிறார். உடனே நடன மாது ராணி 'நான் கையெழுத் திடவா சொன்னேன்? படிக்கத்தானே சொன் னேன்?' என்று உடலழகு வெளிப்படும்படி நெளிகி றாள். பிறகு அவரைத் தன் வசப்படுத்த, ஒன்றும் பேசாமல் பஞ்சு மெத்தை யில் நெஞ்சு படபடக்க கொஞ்சும் பாவனையில் உட்காருகி றாள்! உடனே செல்வராஜ் தானாகவே சென்று பத்தி ரத்தில் கை யெழுத்திடு கிறார்! இளம் உள்ளங்களைப் பாழ்படுத்தும் இது ஒரு ஆபாசக் காட்சி.

கிருட்டினன்,
மதுரை.



கமால் சகோதரர்களின் 'சுமதி' படத்தில் சிவாஜி கணேசன்.

தேடி வந்த செல்வம்

சிதம்பரமும் அவனது காதலியும் சந்திக்கும் போது, பழகும் கட்டங்கள் சில மிகையாக — ஆபாசத்தின் எல்லையைத் தொடும்படியாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை நாசூக்கான முறையில் காட்டியிருக்கலாம்.

பிரேமா,
சென்னை.

நிர்மலாவின் தந்தையின் பாத்திரம்படத்தில் கேலிக் கூத்தான முறையில் சித் தரிக்கப்பட் டிருக்கிறது. அம்பலத்தைச் சந்தித்து, அவன் சொன் னதையெல் லாம் அப்ப டியே நம்பும் அப்பாவியாக அவரைச் சித்த ரித்திருக்கிறார் கள். தன் மக ளுக்கு விவா கம் நடத்தும் ஒரு தந்தை, மாப்பிள்ளை யைப் பற்றி பூராவும் சரி வர விசாரி யாமல் இருப்

பதை இதில்தான் நான் காண்கிறேன்.

ஞானமுத்து,
சிவகங்கை.

மாலையிட்ட மங்கை

அயல்நாடு சென்று திரும்பிய ஒருவன், ஜாதி மதங்களுக்கு அப்பார்ப்பட்டவனாக இருப்பான். ஆனால் இந்தப் படத்தின் கதாநாயகன், தன் மாமியைப் பற்றிய அவதூறுக்காக, கர்ப்பிணியான தன் மனைவியை வீட்டை விட்டு நடு நிசியில் அனுப்புகிறான். அவள் தொலைவிலுள்ள ஊருக்கு அந்த இரவிலேயே வந்து விடுகிறாள்! அந்த நட்ட நடுநிசியில் ஒரு பிச்சைக்காரன் பாடிப் பிச்சையெடுக்க, அவனுக்குப் பிச்சையிடுகிறார்கள் சிலர். போக்குவரவு இருக்கிறது நிறைய அந்தத் தெருவிலே, அந்த நேரத்திலே! இந்த இயல்புக்கு மாறான காட்சியை வெட்டிவிட வேண்டும்.

முல்லை நாதன்,
தச்சநல்லூர்.

சரசுவதி கணவனால் விரட்டப்பட்டு தாய் வீட்டுக்கு வருகிறாள். தாய் மரணப்படுக்கையில் அவளுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு மாண்டு போகிறாள். அந்தக் கடிதம் முடிக்கப்படும்போது 'போய் வருகிறேன்' என்று இருக்கிறது. அந்த அம்மையார் கடலூருக்கோ, காரைக்குடிக்கோ போகவில்லை. மீளாத் துயிலில் கிடக்கப் போகும் அவள் 'போய் வருகிறேன்' என்பது அபத்தம். இறப்பவரின் ஆவி பிரிந்து சென்று மீண்டும் பிறவி யெடுப்பதாகக் கூறுவதை ஒப்புக் கொள்ளாவிடில், வசனகர்த்தா இதை உடனே வெட்டிவிட ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தக்காட்சி நடுநிசிக் காட்சி. அப்போது நடக்கும் சம்பவங்களெல்லாம் அபத்தம். இரவில் கண்விழிப்போரைப் பற்றிய அக்காட்சியால், அந்தத் தாயின் பாத்திர விசேஷம் பாதிக்கப்படவில்லையா?

வீராசாமி,
காஞ்சீபுரம்.

திருமணம்

அண்ணனைப் பிணக்கோலத்தில் கண்ட நடராஜன், 'அண்ணா! என் உயிரைக் காக்க உங்களையே பலி

வாணி தமிழ்–இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசை யில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை: இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் ஒத்தாசை யில்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

கொடுத்து விட்டீர்களே'' என்று கதறுகிறான். இந்தக் குறிப்பிட்ட வசனத்தை வெட்டிவிட வேண்டும். அண்ணன் சிதம்பர தேசிகர் தம்பியின் உயிரைக் காப்பாற்றி விட்டதாகக் கூற முடியாது.

கிறிஸ்டியன் டிவோட்டா,
சென்னை.

செங்கோட்டை சிங்கம்

ஒரு கார் வருகிறது. நாம் ஏதோ அது வேகமாகப் போக முடியாமல் அகப்பட்டுக் கொள்ளும் என்று நினைக்கிறோம். காரில் போகிறவர் மந்திர தந்திரம் தெரிந்தவர்! ஆகவே மந்திர சக்தியால் காரை ஒரு சாக்கடைக்குள் புகுத்தி மறுபக்கம் வரச்செய்கிறார். ஒரு கேட்டை அப்படியே தாண்டிச் செல்கிறார்! இந்த அபத்தமான காட்சிகளை வெட்டி விடவேண்டும்.

சரோஜா,
காஞ்சீபுரம்.

அன்னையின் ஆணை

சங்கரைப் பெற்றவர் கருணாகரம். அவர் தன்னை விட்டுப் பிரிந்து போய்விட்ட மகன் சங்கரின் உருவப் படங்களைப் பெரிதாக்கி வீடு முழுவதும் மாட்டி வைத்திருக்கிறார். அவர் நாடகத்துக்குத் தலைமை வகிக்கும்போது, கணேஷைக் கண்டவுடனே சந்தேகப்படுவதாக விவரமாகக் காட்டப்படவில்லை. பிறகு அவர் வீட்டில் கணேஷ், தன் தகப்பனாரின் படம் இருப்பது கண்டு விவரம் கேட்கும்போதுதான் கருணாகரம் விஷயம் அறிகிறார். பெற்ற மகனைப் போலவே இருக்கும் ஒருவனைக் கண்டதும் திடுக்கிட்டு, விசாரிக்கும் மனப்பான்மைகூட ஒரு தகப்பனுக்கு இருக்காதா? இந்தக் காட்சி வெட்டப்பட வேண்டும். நாடகம் முடிந்ததும் கருணாகரம் கணேஷை விசாரிப்பதாகக் காட்ட வேண்டும்.

பி. எஸ். ஆர்.,
சிதம்பரம்.

பரோபகாரம் கணேஷின் வேண்டுகோளின்படி அவன் மலையடிவார பங்களாவுக்குச் செல்கிறான். கணேஷை அப்படியே உரித்து வைத்தது போல் தன் முன் முதன் முதலில் தோன்றும் போதே கணேஷை கண்டு பரோபகாரம் திடுக்கிட்டிருக்க வேண்டும். ஆனால் நடை உடை பாவனைகளால் அவன் புரியாதபடி நடந்து கொண்டதாக இருந்தாலும் பிறகு அவன் வீட்டுக்குப்போனவுடன் அவன் தோரணையில் கூடப் புரிந்து கொள்ள முடியாதா? பரோபகாரம் கணேஷை கண்டதும் சங்கரின் ஆவியோ என்று திடுக்கிட்டிருக்க வேண்டும். நயவஞ்சகனை அவன் சர்வசாதாரணமாக வேறொருவன் வலையில் விழுவதாகக் காட்டப்படுவது நன்றாக பொருத்தமாக இல்லை. கணேஷின் வீட்டில் சங்கர் – கௌரி படங்களைப் பார்த்த பின்னர் தான் பரோபகாரத்திற்கு விஷயம் புரிவதாகக் காட்டப்படுவது, பாத்திரத்தையே பலவீனப்படுத்துவதால் அதை வெட்டி விட்டு, அவனை அவர் சந்தேகப்பட ஆரம்பித்து, பிறகு நாளடைவில் அலக்ஷியமாக விட்டு விடுவதாகக் காட்ட வேண்டும்.

சீனிவாசன்,
கீழையூர்.

இனும்! இனும்!! இனும்!!!

சேலம் பொருட்காட்சியில் உள்ள எங்கள் ஸ்டால் நிர் 130ல் ஒரு புட்டி ஆர். எஸ். பதி மருந்து வாங்கினுல் ஒரு அதிர்ஷ்டப் பிரைஸ் உண்டு.

49 ஆண்டுகளாக புகழ் பெற்றது

மேரி ராம் பற்பொடி

(REGD)

பி. சரோஜாதேவி

பல்வலி, வாய்நாற்றம், ஈறுகளில் இரத்தம் வடிதல் முதலியவைகளை கண்டிக்க வைத்திய முறைப்படி தயாரிக்கப்படுகிறது.

VARAN

டின் 1க்கு விலை 25 காசுகள்

ஆர்.எஸ்.பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்:1909)

த.பெ.எண் 99 .... 2/4 & 2/5 மேலமாசி வீதி, மதுரை.

சென்னை விற்பனை நிலையம்: 111.தேவராஜ முதலித் தெரு, சென்னை 3.

சேலம், கோவை இவ்விரு ஜில்லாக்களுக்கு மட்டும் எங்கள் விநியோகஸ்தர்கள் : K. V. S. B. & சன்ஸ், ஈரோடு.

நாடோடி மன்னன்

(தொடர்ச்சி)

வீரா : சே சே...அப்படி ஒண்ணும் இல்லே...அதிருக்கட்டும். உன்னை ஏன் சிறையிலே அடைச்சிருக்காங்க?

மத : உம்...மன்னராட்சி கூடாதுன்னு பிரசாரம் செய்தேன். அதுக்குத்தான்.

வீரா : ஓகோ...நீயும் நம்பளைப் போலத்தான் போலிருக்கு.

மத : ம்...என்ன சொன்னே?

வீரா : ஆ...! ஒண்ணுமில்லே. எனக்குத் தூக்கம் வருது. பிறகு சந்திப்போம்.

மத : தூங்காதே தம்பி தூங்காதே...நீ தூங்காதே.

என்று வீராங்கன் பாடியதைப் பாடுகிறாள்.

வீரா : நீ பெரிய குறும்புக்காரியா இருப்பே போலிருக்கே...!

மத : நம்ம இரண்டு பேருக்கும் ஆளை அடையாளம் தெரியாது. எப்போ விடுதலைன்னும் தெரியாது. 'பிறகு சந்திப்போம்' அப்படின்னா என்ன அர்த்தம்?

வீரா : நியாயம்தான். இப்ப என்ன செய்யறது?

மத : ம்...இப்போ பேசாமே இருக்க வேண்டியதுதான். (கைக்குட்டையை குழாய் வழியாகப் போட்டு) இந்தா, நீ வெளியே போன பிறகு இந்தக் கைக்குட்டையைக் கையிலே வச்சிக்கோ. நான் அடையாளம் தெரிஞ்சுக்கறேன், என்ன?

வீராங்கன் கைக்குட்டையை உற்றுப்பார்க்கிறான். யோசிக்கிறான்.

காட்சி 4

வீரபாகு!

மாண்டு போன மன்னரின் மெய்க்காப்பாளனான வீரபாகு, மகன் பூபதி முதலிய பலரைக் கொண்டு ஒரு திட்டம் தீட்டுகிறான். "இளவரசி ரத்னா கடத்தப்பட்ட பின் அதே ஏக்கத்தில் மன்னர் இறந்ததால், அவளைத் தேடிப் பிடித்து முடி சூட்ட வேண்டும். அல்லது மக்களாட்சி மலர வேண்டும். மார்த்தாண்டன் போன்ற யாரும் அரியாசனம் அமரவிடக் கூடாது" என்ற திடத்துடன் வேலை செய்யும் கூட்டம் அது. ரகசியமான அந்த இடத்திற்கு வெளியிலிருந்து ஓடி வருகிறான் பூபதி.

பூப : (கோபத்துடன்) மார்த்தாண்டனுக்கு மகுடாபிஷேகம்....

வீர : மார்த்தாண்டன் 'மக்களுக்குக் காவலனாக வரப்போகிறானாம். காணாமற் போன இளவரசியைக் கண்டுபிடித்து மகுடம் சூட்டட்டும். இல்லை, மக்களின் மதிப்புக்கு ஏற்ற தலைவனைத் தேர்ந்தெடுத்து ஆட்சியை ஒப்படைக்கட்டும். இந்த இரண்டில் ஒன்று நடைபெறாமல் ரத்னபுரி

சிம்மாசனத்துக்கு எவன் வந்தாலும் அவன் பிணமாகத்தான் ஆக முடியும்.

பூப: அப்பா! இதை ஊரெங்கும் ஒட்டச் சொல்லியிருக்கிறார்கள். தெருவெங்கும் தோரணம் கட்டி, ஊரெங்கும் கோலமிட்டு, வரப்போகும் மன்னனை வரவேற்க வேண்டுமாம் மக்கள்...சே...!

வீர: முன் நிலை மறந்தவர்கள் தன் நிலை அறியாதவர்கள். வேடிக்கையும் இருந்து விட்டால் வாழ்க்கை நிரம்பி விடும் என்று நினைப்பவர்கள் மக்கள். அவர்களுக்கு நாம்தான் சொல்ல வேண்டும், 'மன்னன் உங்களை அடிமையாக்க நினைக்கிறான்' என்று. பூபதி! மார்த்தாண்டன் மன்னனாக வராமல் தடுக்கும் பொறுப்பு உன்னுடையது.

பூப: அப்படி மார்த்தாண்டன் மீறி நுழைத்தால் மகுடம் அவன் தலையில் ஏறு முன்னர் அவன் தலை மண்ணில் சாய்ந்து விடும்.

நகரா அடித்து பறையறிவிக்கிறார்கள் சிப்பாய்கள்.

சிப்: நல்லவர்களே, பெரியோர்களே! நமது நாட்டுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. ரத்னபுரிக்கே ஒரு புதிய சகாப்தம் உதயமாகி விட்டது.

அறிவிப்பாளன் படிக்கிறான்.

அறி: புதிய மன்னர் மார்த்தாண்டர் அவர்களுக்கு வருகிற வெள்ளிக்கிழமை உதயத்தில் முடி சூட்டு விழா நடத்த குருநாதரால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நன்னாளை முன்னிட்டு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள். ஆகவே மக்கள் அந்த நன்னாளை திருநாளாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது அரண்மனை உத்தரவு.

நகரா முழக்கமும் அறிவிப்பும் கேட்டு வீரபாகு பேசுகிறான்.

வீர: பறையறிவிப்பதைப் பார்த்தால் அதிக நாட்களில்லையே மன்னன் ஆட்சிக்கு வர...

பூப: அதனாலென்ன? இட்ட வேலையைச் செய்ய ஆளுண்டு. திட்டத்தை நிறைவேற்ற நமக்குத் திறமையும் உண்டு.

வீர: சந்தர்ப்பத்தின் துணையால்தான் எந்தவிதத் திறமைக்கும் பெருமையுண்டு. அரண்மனையில் நடக்கும் ரகசியங்கள் நமக்குத் தெரிந்தாக வேண்டும். **(ஆட்களைப் பார்த்து)** விஜயா - வீரா! நீங்கள் இருவரும் கோட்டை வாயிலில். **(இரு பெண்களிடம்)** ஆ... நீங்கள் இருவரும் அந்தப்புரத்திற்கு. **(ஒருத்தியிடம்)** அம்பிகா! உன்னை ஒரு தனி இடத்திற்கு அனுப்பப் போகிறேன்.

அம் : எங்கே?

வீர : பிங்களன் மாளிகைக்கு. அங்கே நீ வேலைக்காரியாக இரு. உளவுக்காரியாகப் பணியாற்று. சாமர்த்தியமாகவே நடந்து கொள்.

அம் : அப்படியே...

பூப : அப்பா! மன்னர் மாறு வேடத்தில் அலைவதாக வதந்தி. அவர் உருமாறியிருக்கும் வேளை யில் அவன் உருவமே இல்லாமல் செய்துவிட வேண்டும்.

உறுதி தொனிக்கிறது அவன் குரலிலே.

காட்சி 5

மார்த்தாண்டன் வந்தான்

மன்னன் மார்த்தாண்டன் வந்து இறங்குகிறன். நேர்மையேஉருவான மார்த்தாண்டன் நியாயம் எனப் பட்டதை, விம்பைப் பாராமல் ஏற் கும் வெள்ளையுள்ளம் படைத்தவன். ஒரு சிறந்த வீரனை அவனை ராஜ குரு, கார்மேகம், பிங்களன், தளபதி முதலியோருக்கு அறிமுகப்படுத்து கிறார் மந்திரி. ராஜகுரு ஒரு கபட வேஷதாரி. ஆட்சியைத் தன் பிடி யிலே வைத்திருக்க விரும்பும் அவன், குருபக்திகொண்ட கார் மேகத்தை தன் பணியாளாக வைத் திருக்கிறன். பிங்களன் ராஜகுருவின் கைப்பொம்மை. மண்ணாசையால் மதியிழந்து ராஜகுரு சொற்படி யெல்லாம் நடக்கும் உறுதிகொண்ட வன் அவன். தளபதி ஒரு உத்தமர். அவரும் மந்திரியும் நாட்டைக் காக்கத் துணிவு கொண்டதால் தான், மன்னரின் மருமகனை மார்த் தாண்டனை மன்னனுக்குகிறார்கள். அறிமுகப் படலம் ஆரம்பமாகிறது. மந்திரி முதலில் ராஜகுருவை அறி முகப் படுத்துகிறார்.

மந்திரி : மன்னா! இவர்தான் நமது குருநாதர். அரசருக் கெல் லாம் அரசர்...நமது அரசாட்சி இவரை நம்பித்தானிருக்கிறது.

மார் : **(ஏளனமாக)..ஹாம்...**

மங் : இவர்தான் நம் தளபதி. நாட்டை இமைபோல் காப்பவர்.

மார் : ஓஹோ!

தளபதி : வணக்கம் மன்னா!

மங் : இவர்தான் பிங்களன்.

ராஜகுரு : **(இடைமறித்து)** உங்களுக்கு அடுத்த வாரிசு.

பிங்களன் : அது மட்டுமல்ல, உங்களைப்போல் அரச பரம்பரைக் குத் தூர பந்துதான். மிக மிக நெருங்கிய உறவினன்.

மங் : இவர் அரசியல் "ஆலோச கர் கார்மேகம்....உள்ளே போக லாமா?

மார் : ஏன்?

மங்: அரண்மனைக்கே சென்று ஓய்வெடுத்துக் கொள்ளலாமே?

ராஜ : உங்கள் ஜாதகப்படி மகு டாபிஷேக தினம் வரை நீங்கள் உங்கள் மனைவியைச் சந்திக்கக் கூடாது.

மார் : சந்தித்தால்?

கார் : உயிருக்கே ஆபத்து உண்டாகுமாம்.

மார் : யாருடைய உயிருக்கு?

பிங் : உங்கள் உயிருக்கு.

மார் : ஹா....

மங் : மன்னிக்க வேண்டும். போகலாமே.

மார் : (கிண்டலாக) ஓ... வணக்கம் குருநாதா.

போகிறுன்.

காட்சி 6

உயிருள்ள சித்திரம்!

மார்த்தாண்டனின் மனைவி மனோகரி மஞ்சத்திலே படுத்திருக்கிறுள். அவள் ஒரு உத்தமி. கணவன் 'ஒருவனே தேவன்' என்று நம்புகிறவள். அவன் அவளைப் பிரிந்திருந்த காலத்திலும் அவன் சித்திரத்தை வைத்துப் பூஜை செய்து வருகிருள் அவள். ராஜகுருவை முதல் பார்வையிலேயே சந்தேகித்த மார்த்தாண்டன், மனோகரியின் அறைக்குள் யாரும் அறியாமல் நுழைகிறுன். மனோகரி மகிழ்ச்சியுடன் அவனிடம் ஓடுகிறுள். !

மனோ : அத்தான்!

மார் : மனோகரி!

அவன் மார்பிலே சாய்கிறுள் அவள்.

மார் : மனோகரி! எங்கே, இப்படிப் பார்!

மனோ : (தலையைத் தூக்காமலேயே) ஹூ.....ம்.

மார் : ஏன், பார்க்க மாட்டாயா?....இதயத்தோடு பேசுகிற ரகசியம் அறுபட்டு விடுமா?

மனோ : பின்னே எத்தனை நாட்கள்தான் படத்தையே பார்த்துக் கொண்டிருப்பது?

மார் : பார்த்துக் கொண்டே இருந்ததனுல்தானே படத்திற்கு உயிர் வந்து விட்டது! கண்ணே! உறவு நெடுங்காலம் வளர்வதற்குத்தான் பிரிவு துணை செய்கிறது.

மனோ : ம்...அது வரை படும் அவதியை யாரிடம் போய்ச் சொல்வது?

மார் : உன்னை நேரில் பார்த்த பிறகுதான் 'இப்படி...ஆ...பைத்தியம்...சித்திரம் போன்ற உன் சிங்கார முகத்தை இந்த இதயத்திலே படம் பிடித்து வைத்துக் கொண்டு தன்னந் தனியே அமர்ந்து, 'கண்ணே, [மணியே' என்றெல்லாம் தனக்குத்தானே பேசிக் கொண்டு உன் அத்தான் எவ்வளவு மகிழ்ச்சியோடு வந்திருக்கிறுன் பார்!

மனோ : நான் மட்டும் என்ன? தங்கள் எண்ணம் மேலோங்கும் போது என் கன்னத்தை வைத்துச் சித்திரமெழுதி, அந்தச் சித்தி

வீட்டில் சினிமா புரொஜக்டர்



தியேட்டர்களில் படம் பார்க்கும் போது ஏற்படும் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் இந்த அழகிய போர்டபிள் சினிமா புரொஜக்டரைக் கொண்டு வீட்டிலேயே அடையலாம். மின்சார சக்தி, டார்ச் விளக்கு இரண்டினாலும் இவற்றை இயக்கலாம். தியேட்டர்களில் உபயோகப்படுத்தும் 35 மி. மீ. பிலிம்களை இதில் உபயோகிக்கலாம். 4'x4' அளவுள்ள அழகிய திரையில் வர்ணப் படங்களையும் முழு அசைவுகளுடன் இதில் பார்க்க முடியும். ஒவ்வொரு புரொஜக்டருடன் 10 கெஜம் பிலிமும் இயக்கும் முறைகளை விளக்கும் புத்தகமும் இலவசமாகத் தரப்படும். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் ரூ. 15/50. வி.பி.பி.சார்ஜ் ரூ. 4/50. அதிகப்படி பிலிம் கெஜம் ஒன்றுக்கு 50 நயே பைசே. ரிபைன்ட் ஸ்கிரீன் ரூ. 3.

(டீலக்ஸ்) தானாகவே 50 முறை சுடும் பிஸ்டல்

லைசென்ஸ் தேவையில்லை. தானாகவே இயங்கி, 50 முறைகள் சுடக்கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல். இது வெடிக்கும்போது வரும் பயங்கர ஒலியும், தீப்பொறிகளும், திருடர்களையும் வன விலங்குகளையும் பயப்படச் செய்யும். சினிமா நாடக நடிகர்களுக்கு முற்றிலும் பயன்படக்கூடியது. விரோதிகளிடமிருந்து தப்பவும் மற்றும் இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கும் உங்களுக்கு சிறந்த துணை இது. விலை ரூ. 10/50. வி. பி. பி. சார்ஜ் ரூ. 2/50. 25 ரவைகள் இலவசம். அதிகப்படி ரவை டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 1. பிஸ்டல் கேஸ் விலை ரூ. 3. பிஸ்டலை சுத்தம் செய்யும் எண்ணெய் ஒரு சீசா ரூ. 1. (திருப்திக்கு உத்தரவாதம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.)

எலக்ட்ரிக் & ரேடியோ கைட்: சிறந்த மெக்கானிக்காக மாற உதவும் புத்தகம். 117 படங்கள் கொண்டது. ரூ. 15. செலவில் வீட்டிலேயே ரேடியோ தயாரிக்கவும், மற்றும் ரேடியோ ரிப்பேர் செய்வது, வயரிங், எலெக்ட்ரிகெல் மெகானிஸம் மற்றும் மின்சார சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள உதவும் புத்தகம். மற்றும் வேறு தொழில்கள் பற்றியும் கற்கலாம். புதுப்பிக்கப்பட்ட பெரிய பதிப்பு ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1.

மொழிகள் ஆசான்: யாருடைய உதவியுமின்றி ஜப்பான், சீனா, தமிழ், மலையாளம், வங்காளி, ஜெர்மன் முதலிய இந்திய அந்நிய மொழிகளை இதன் மூலம் கற்கலாம். ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1. தையற்கலையும், துணிகள் கத்தரிப்பதும் ரூ. 4. சோப்புகள் தயாரிப்பது ரூ. 3. புகைப்படக்கலை ரூ. 3. வாசனை திரவியம் செய்யும் முறை ரூ. 1-50. ஒரே மாதத்தில் ஹிந்தியைக் கற்க உதவும் புத்தகம் ரூ. 4. திருமண வாழ்க்கையின் நுணுக்கங்கள் 88 படங்களுடன் ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1-25 ஒன்று முதல் மூன்று புத்தகங்களுக்கு.

TARUN TRADERS. (P.P.) P. B. 19 ALIGARH (INDIA)

ரத்தில் வண்ணக் கலவையிட்டு... இட்ட மலர்போல் என் இதயம் தளிரும்போது பொட்டு பொட்டாக நான் வடித்த கண்ணீர், எப்படித் திட்டு திட்டாக மாறியிருக்கிறது என்று போய்ப் பாருங்கள்.

மார்: ஹூம்... இப்போது?

மனோ: ஏதோ பனிப்பிரதேசத்தில் இருப்பதுபோலிருக்கிறது.

மார்: ஓகோகோ....ஜாக்கிரதை! அதிக குளிர்ச்சி உடம்புக்கு ஆகாது.

மனோ: ம்....போங்களத்தான்!

மார்த்தாண்டன் சைகை காட்ட மனோகரியும் அவனுடன் நகருகிறாள். யாரோ வரும் சப்தம் கேட்டு திரைக்குப் பின் அவன் படம் இருக்குமிடத்தில் அவனே நின்று கொள்கிறான். அந்த மெல்லிய திரையை மூடிவிட்டு மனோகரி திரும்பும் போது சிப்பாய் ஒருவன் வந்து வணங்கி நிற்கிறான்.

சிப்: மந்திரியும் தளபதியும் தங்களை அவசரமாய்ப் பார்க்க வேண்டுமாம்.

மனோ: வரச்சொல்.

மார்த்தாண்டன் மனோகரியின் காதில் ஏதோ கூறுகிறான். அவள் திரைக்கு முன்னால் நகருகிறாள். மந்திரியும் தளபதியும் வருகிறார்கள்.

மனோ: வாருங்கள்!

மந்திரி, தள: வணக்கம் மகாராணி!

மனோ: வணக்கம்! என்ன சேதி?

மந்: மகாராஜா வந்து விட்டாரா?

மனோ: ஓ வந்து விட்டாரே.... (*தவறை உணர்ந்து*) மன்னருக்கு ஏதாவது....?

மந்: ஆபத்து ஒன்றுமில்லை. முடி சூடு முன்பு மன்னர் தங்களைப் பார்க்கக் கூடாதென்று...

மனோ: பார்த்தால்?

மந்: மன்னருக்கு உடனே ஆபத்தாம்....

மனோ: ஆ...

மந்: கால நேரமெல்லாம் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார் குருநாதர். அதனால்தான் மன்னரை நகருக்கு வெளியே உள்ள வேட்டை விடுதியில் தங்க வைத்திருக்கிறோம்.

மார்த்தாண்டன் மனோகரிக்குச் சைகை செய்ய, திரை அறுந்து விழுகிறது. மனோகரி அதுகண்டு அதிர்ச்சியடைந்து திரையருகில் சென்று சரி செய்கிறாள். சிலைபோல் நிற்கிறான் மார்த்தாண்டன்.

தள: மன்னருக்கு ஏதாவது செய்தி?

மனோ: சொல்லுங்கள். 'அவர் அருகிலேயே இருப்பதாக எண்ணி அமைதியாக இருக்கிறாள், மனோகரி' என்று சொல்லுங்கள்.

மந்திரியும் தளபதியும் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றதும் மார்த்தாண்டனிடம் பேசுகிறாள் மனோகரி.

மனோ: என்ன இதெல்லாம்?

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50 - க்கு, 96" × 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல்பணம்வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.

ரூ. 1000 சவால்

மாயக் கைக்குட்டை

அதிசயமான இக்கைக் குட்டை மாய சக்தியைக் கொண்டு, 16 வருஷங்களாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் எல்லா விஷயங்களிலும் அது எவ்வளவு கடினமாக இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும், வெற்றி பெறுவீர்கள். ஒரு முறை சோதனை செய்து பாருங்கள். முதல் இரவிலேயே இதன் மாய சக்தியை அறிவீர்கள். விலை ரூ. 2. ஸ்பெஷல் ரூ. 3/75. தபால் செலவு தனி. அயல் நாடு 10 ஷில்லிங் பி.பி.ஓ. மூன்று கேள்விகளுக்கு பதில் இலவசம். கடிதப்போக்கு வரத்தும், உங்கள் விலாசமும் ஆங்கிலத்தில்.

PROF. B. S VERMAN
Mesmerist & Hypnotist,
8/1, JULLUNDUR (Pb)

மார் : *(சிரித்து)* இதெல்லாம் குருநாதர் தயவு.

மனோ : உங்களுக்கு ஏதோ ஆபத்தாமே?

மார் : இப்படி, குருநாதர் வயிற்றுப் பிழைப்புக்காகச் சொல்லியிருக்கிறார். நான் வரட்டுமா?

மனோ : அதற்குள்ளாகவா?

மார் : மந்திரியும் தளபதியும் வேட்டை விடுதிக்குப் போவதற்கு முன் நான் அங்கு போய் விட வேண்டும். தினமும் இதே நேரத்தில் வருவேன்.

மனோ : நீங்கள் ஒரு ஆள் அரண்மனையில் இருக்கும் எல்லோரையும் முட்டாளாக்கி விடுகிறீர்களே!

மார் : சேச்சே! அதெல்லாம் இல்லை. அரண்மனையில் எத்தனை முட்டாள்களிருக்கிறார்கள். என்று கண்டு பிடிக்கிறேன். வரட்டுமா? மனோகரி! சந்தோஷமாக இரு... வருகிறேன்.

அவன் அவளிடம் நின்று பேசுவதை நவமணி என்ற தோழி கண்டு மற்ற தோழிகளிடம் சொல்ல யாவரும் சிரிக்கிறார்கள். மார்த்தாண்டன் போய் விடுகிறான்.

காட்சி 7

நன்றி கெட்ட ஆம்பளே

சிறையிலிருந்து விடுதலை பெற்ற வீராங்கன் கைக்குட்டையுடன் வெளியே வருகிறான். பல் எடுப்பாக இருக்கும் ஒரு பெண்ணைப் பார்க்கிறான். அவள் கோபிக்கிறாள்.

பெண் : சீ...சீ...போ அந்தப் பக்கம். ஆளைப் பாரு ஆளை.

வீரா : *(கைக்குட்டையை நீட்டி)* ஆ......என்னது?...ஆ.... என்னை ஏமாத்த முடியாது. இதை நீதானே குடுத்தே? இந்தா.

பெண் : ஐயய்யோ, இதென்ன அநியாயம்? மாமா!

ஒரு முரடன் வருகிறான்.

பெண் : மாமா...மாமா...!

வீரா : மாமாவா...?

மாமா : என்னம்மா, இது என்ன?

பெண் : இந்தா பாரு மாமா, இந்த ஆளெ?

மாமா : டேய்...

வீரா : அவதான்.......எனக்குப் பல்லு இருக்கு என்றெல்லாம் சொல்லி இந்தக் கைக்குட்டையைக் குடுத்தா?

பெண் : ஐயய்யோ....பொய் மாமா பொய்.

வீரா : என்ன பொய்?

மாமா : *(சட்டையைப் பிடித்து)* டேய்...நீ எப்படியடா பேசலாம்?

வீர : ஏய்! நான் சொல்றதைக் கேளு. கையை எடு முதல்லே.

மாமா : முடியாது.

வீரா : முடியாதா?

அப்போது 'தூங்காதே தம்பி தூங்காதே' என்ற பாடல் கேட்டுத்

திரும்புகிறான் வீராங்கன் அழகே உருவான மதனா அங்கே நிற்கிறாள் குறும்புச் சிரிப்புடன். வீராங்கன் அவளைப் பார்க்கிறான்.

வீரா: நீ...பல்லு...?

மத: பல்லு...கிடையாது. வா.

இருவரும் சிரித்தபடி நகருகிறார்கள். ஒரு கடையின் முன் மதனா நிற்கிறாள். இருவர் அவளைப் பார்க்கின்றனர்.

ஒருவன்: இது யாரு?

மற்றவன்: இவன் எப்போ இவளைப் பிடிச்சான்?

ஒரு: சிறைச்சாலைக்குப் போனானில்லே: அங்கே கிடைச்சிருக்கும்!

மத: ஹூம்...இருக்கும். ஹூக்கும்...ஆளைப்பாரு!

ஒரு: ...அப்போ நாம்பளும் சிறைச்சாலைக்குப் போகலாமா?

மற்: நாட்டுக்குப் பாடுபட்டேன்னு சொல்றதெல்லாம் சுத்த... வெறும் வெளிவேஷம்தானய்யா.

ஒரு: பின்னே என்னவாம்? இவங்க ரெண்டுபேரையும் பார்த்தாலே தெரியலே.

மத: டேய் ... என்னசொன்னே?

இருவரும் பயந்து போய் விடுகிறார்கள். வீராங்கன் விடைபெறுகிறான்.

வீரா: அப்ப நான் வர்றேன்.

மத: நான் மட்டும் என்ன, இங்கே உக்காந்து தவம் பண்ணப் போறேன்னு நினைச்சுட்டியா?

வீரா: அதுக்கில்லை.... நான் வேறே வழியாப் போகணும்... வாய்ப்பு கிடைச்சா நகரத்தில் சந்திப்போம்...வரட்டுமா?

மத: போறவங்க போகலாம்... வரவேண்டாம்.

சிரித்தபடி போகிறான் வீராங்கன். அலுத்துக் கொள்ளுகிறாள் மதனா.

மத: வேறே வழியாப் போறானாம். ஹூக்கும்...இந்த ஆம்பளைங்களே இப்படித்தான். கொஞ்சங்கூட நன்றியே கிடையாது... ஹூம்...

போகும் வழியில் ஒரு பெண்ணிடம் இரண்டு முரடர்கள் வம்பு செய்வதைக்கண்டு அவர்களை அடித்து விரட்டுகிறான். பிறகு மதனா அவ்வழிவர அவளுக்குத் துணையாக வர ஒப்புக் கொண்டு இருவரும் ரத்னபுரி நோக்கிச் செல்கிறார்கள். "வரி

கொடுக்காமல் யாரும் ஊருக்குள் நுழையக்கூடாது'' என்று சொல்லும் காவலாளி, பிறகு, வீராங்கனை வணங்குகிறான். மன்னன் மார்த்தாண்டனைப் போன்ற முகச் சாயல் கொண்ட வீராங்கனைப் பார்த்து ''மாறுவேடத்தில் நம்மை மன்னர் மார்த்தாண்டர் வந்து சோதிக்கிறார்'' என்று நினைத்து, தன்கூட இருப்பவனிடமும் கூறுகிறான். அந்த ரத்னபுரிக்குள் வரி கொடாமல் ஆட்டுமந்தையுடன் புகுந்து பசி காரணமாக சிப்பாயின் சோற்றையும், மன்னன் குதிரைகளுக்கு என்றிருந்த முட்டைகளையும் தின்று துரத்திவரப்பட்ட சகாயம் வீராங்கனின் மேல் வந்து விழுகிறான்.

சகா : வீராங்கா! காப்பாத்து... என்னைக் காப்பாத்து.

வீரா : என்ன, என்னது?

சகா : அடிக்க வர்றான்.

வீரா...ஏன்...?

சிப் : சாப்பாட்டைத் திருடிகிட்டு வந்துட்டான். இவனைச் சும்மாவிட...

பேசிக்கொண்டே வீராங்கன் முகத்தைப் பார்த்துத் திடுக்கிடுகிறான். மன்னர் என நினைக்கிறான்.

சிப் : (உளறலுடன்) உங்க சிநேகிதர்னு தெரியாதுங்க. மன்னிச்சுக்குங்க

வேகமாக ஓடி விடுகிறான்.

சகா : என்னைப் பாத்து ஓட ஓட விரட்டினவன் உன்னைப் பாத்து ஏன் இப்படி ஓட்றான்?

மத : ஆமா, கோட்டை வாசல்லேகூட இப்படித்தான் நடந்தது.

சகா : (மதனாவைக் கண்டு) இது யாரு புது ஆளா இருக்குது.

மத : ஹா! இது யாரு, விசித்திரமான உருவமா இருக்கு?

வீரா : (சகாயத்திடம்) உன்னைப் போல இவளும் எனக்கு ஒரு சிநேகிதி. பெயர் மதனா.

சகா : ம்...இந்தாப்பா......இந்த மாதிரி சிநேகிதம் வேறே ஒரு முறையிலே கொண்டு போய் நிறுத்திடும், தெரியுமில்லே.

இனாம் ! **இனாம் !!** **இனாம் !!!**







எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (P. P. M.)

Jullundur City.

மதனு சகாயத்தை அடிக்கப் போகிருள். வீராங்கன் தடுக்கிருன்.

வீரா : கோவிச்சுக்காதேம்மா! இவன் ரொம்ப நல்லவன். இவன் பெயர் சகாயம்.

சகா : ஆபத் சகாயம், தெரியுமில்லே?

மத : ஹூக்கும். ஆபத் சகாயமா, இல்லே ஆபத்துக்குச் சகாயமா?

சகா : (வீராங்கனிடம்) ஆம்... பாத்தியா?

வீரா : இல்லே......மதனு! வா போகலாம்.

போகிருர்கள்.

காட்சி 8

நாடோடிக்கு விருந்து

மதனு தன் தகப்பனுர் வீரபாகுவிடம் சென்று வீராங்கனைப் பற்றிக் கூறி, அவனை அழைத்து வர அனுமதியும் பெறுகிருள். வீராங்கனும் சகாயமும் தேவி வாசம் உணவு விடுதிக்குச் செல்ல, அங்கிருக்கும் முரடர்களுக்கும் சிப்பாய்களுக்கும் சண்டை மூள்கிறது. வீராங்கனும் சகாயமும் தீரத்துடன் முரடர்களிடம் சண்டையிட்டுத் தப்புகின்றனர். சகாயம் நவமணி என்ற மனேகரியின் தோழி வீட்டில் பதுங்கி பிறகு மாட்டிக் கொள்ளுகிருன். மன்னரின் தோழன் என்பதற்காக அவனுக்கு அங்கே மரியாதை நடக்கிறது. வீராங்கன் அரண்மனை வீரர்களிடம் மாட்டிக் கொண்டு, பிறகு மன்னனென வணங்கப்பட்டு மார்த்தாண்டன் மாளிகை முன் நிற்கிருன். தாதியுடனிருக்கும் வீராங்கனை மார்த்தாண்டன் என்றெண்ணிய மந்திரியும் தளபதியும் வணங்குகிருர்கள். வீராங்கன் விழிக்கிருன்.

மந் : ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? வாருங்கள். (அறைக்குள் சென்றதும்) உட்காருங்கள்.

வீரா : ஐயா! நீங்கள் என்னை வேறு யாரோ என்று தவருக நினைக்கிறீர்கள்.

தள : நாட்டு மக்களை ஏமாற்றுவது போல எங்களையும் ஏமாற்ற முடியாது. உங்களுடைய மாறு

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்திஞல் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 4-00

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் (இங்கிலீஷில்) இருக்க வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!

மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1,94. எக்ஸ்ட்ரா. ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, BENGAL MESMERISM HOUSE

(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

வேடம் எங்களுக்கு நன்றாகப் புரியும்.

வீரா : மாறு வேடமா?

மந் : இனியும் ஏனிந்த வேஷம்?

தாடியைப் பிடித்து இழுக்கிறார் மந்திரி. 'என்ன இது விளையாட்டு?' என்று கேட்டு அலறுகிறான் வீராங்கன். அப்போது அவனைப் போலவே சாயலுள்ள ஒரு வாலிபன் அங்கே தோன்றுகிறான். வீராங்கனும் அந்த வாலிபனும் ஒருவரையொருவர் கண்டு ஆச்சரியப்படுகின்றனர். அந்த வாலிபன் யார்?

மன்னரின் வாரிசான மார்த்தாண்டன்தான் அவன்!

மார் : (மந்திரியிடம்) யாரது? ஏன் அவனைத் துன்புறுத்துகிறீர்கள்?

மந் : மன்னிக்க வேண்டும். தாங்கள்தான் மாறுவேடமிட்டிருப்பதாக எண்ணி வேடிக்கையாக தாடியைப் பிடித்திழுத்தோம். இவன் வேறு யாரோ...

தள : **(வீராங்கனைப் பார்த்து)** ...ம்...ம்...போ வெளியே.

வீராங்கன் கிளம்புகிறான்.

மார் : நில்!...நண்பா!...வா... **(அருகே வீராங்கன் வந்ததும்)** ம்... ஹா...நீ யார்?

வீரா : நாடோடி...

மார் : ஹூம்...உன் பெயர்?

வீரா : வீராங்கன்.

மார் : வீராங்கன்! நீ என்னைப் போலவே இருக்கிறாய்.

வீரா : எனக்கும் அதுதான் ஆச்சரியம்.

M211.N4 N58.17.1

1958-59 உங்கள் எதிரில்



ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும் உங்கள் பெயர் விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ரூ. 1.25க்கு தனித் தபால் செலவுடன், உங்களுக்கு வரும் 12 மாதங்களில் ஏற்படும் பலன்களையும் வியாபாரத்தில் லாப நஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம், குழந்தைப் பேறு, சந்துஷ்டி மற்றும் தேக அசௌகரியங்களையும் அவைகளினின்றும் பாதுகாக்கும் குறிப்புகளையும் அனுப்புகிறோம்.

SHREE SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(P.P.M.) Jullundur City. (Pb.)

ஆசிரியர் "அகிலன்" எழுதிய

வாழ்வில் இன்பம் நாடகம்	ரூ. 2 00
குழந்தை சிரித்தது சிறுகதைத் தொகுதி	2 50
கண்ணான கண்ணன்	0 75
அவளுக்கு-கடித நாவல்	1 00

அச்சில்

பாவை விளக்கு

"அகிலன்"

மற்றும் இவ்வாசிரியரின் நூல்கள் அனைத்தும் ஏனைய நூல்களும் எம்மிடம் கிடைக்கும்.

பழனி பிரசுரம்,

3, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

இனாம் ரூ. 1000

89688

ஜலந்தரில் ஒரு தோலா தங்கம் விலை ரூ. 2-50 தான்

இந்த அமெரிக்கன் நியூ கோல்ட் அசல் தங்கத்தைப் போன்றது. நீண்ட கம்பிகளாக்கவும், எல்லாவிதமான ஆபரணங்கள் செய்வதற்கும் ஏற்றது. மிக்க அனுபவசாலிகளான வியாபாரிகள்கூட, அசல் தங்கத்திற்கும் இந்த அமெரிக்கன் நியூகோல்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கத் திணறுவார்கள்.

விலைவாசி உயர்ந்துள்ள இந்நாளில் கல்யாணத்திலும், மற்றும் இதர விசேஷங்களில் பணத்தைச் சேமிக்க இன்றே உங்கள் தேவையைக் குறித்து அனுப்புங்கள். இந்த அமெரிக்கன் நியூ கோல்ட் பொய்யானது என்பதை நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஒரு தோலா ரூ. 2-50. மூன்று தோலா ரூ. 7. ஆறு தோலா ரூ. 13. பத்து தோலா ரூ. 20. தபால் செலவு தனி. இன்றே எழுதுங்கள். **நீங்கள் அங்கீகரிக்காவிட்டால் உங்கள் பணத்தை வாபஸ் செய்ய நாங்கள் உத்திரவாதம் தருகிறோம்.**

IMPERIAL COMMERCIAL COMPANY

(PM) JULLUNDUR CITY.

மார் : என் பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை.

வீரா : என் பெற்றோருக்கு நானும் ஒரே பிள்ளைதான்.

மார் : அதிசயமான ஒற்றுமை. ம்...அதிருக்கட்டும். நீ எங்கே எப்படி வந்து இதற்குள் நுழைந்தாய்?

வீரா: நான் வெளியூரைச் சேர்ந்தவன். இப்படியே நகரப் பக்கம் வந்தேன். சிலர் என்னைக் கொல்ல முயன்றார்கள்......தப்பி வரும்போது இதற்குள் நுழைந்தேன்.

மார் : ஆ...உனக்கு விரோதிகள் இந்நகரில் யாராவது இருக்கிறார்களா?

வீரா : நகரில் இருக்க நியாயமில்லை. அரண்மனையில்தான் இருக்கிறார்கள்.

மார் : அரண்மனையா?

வீரா : நான் புரட்சிக்கூட்டத்தைச் சேர்ந்தவன்.

இதோ ஒரு சஞ்சீவி!

காலாணிக்கு

மேல் பூச்சு மருந்து

குதிகாலிலும், பாதத்திலும் பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணிகளைப்போல் ஏற்பட்டு, நடக்கும்போது பாதத்தைத் தரையில் வைக்க முடியாமல் துடிதுடிக்கும் நிலையை இம்மருந்து ஆச்சரியகரமாய் கண்டித்து, ஆணிகளை அறவே நீக்குகிறது. ஆணிகளுக்குமேல் இம்மருந்தைப் பூச வேண்டும்.

புட்டி விலை
தபால் செலவுடன்) ரூ. 4.25

ஜகன்னாத் அண்டு கோ
தபால் பெட்டி எண் 1859
சென்னை - 1

மந்திரி ஆட்களை அழைத் வீராங்கனை பிடிக்கச் செய்கிற அவர்களை விலகச் செய்து மந்திரி தளபதி இருவரையும் வெளியே அனுப்பிவிட்டு வீராங்கனிடம் மன திறந்து பேசுகிறான் நேர்மையா னான மார்த்தாண்டன். நந்தனன் என்ற ஊழியன் இவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்கிறான்.

மார் : எதற்காகப் புரட்சி யாரை எதிர்த்துப் புரட்சி?

வீரா : உங்கள் ஆட்சியை எதிர்த்து. சர்வாதிகார முறையை ஒழிப்பதற்கு.

மார் : அப்படியானால் என்னை ஒழித்து விடப் போகிறீர்களா?

வீரா : எங்கள் லட்சியம் ஆளை ஒழிப்பதல்ல; மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சியை ஏ படுத்துவது.

மார் : நானும் மக்களில் ஒ வன்தானே? நானே ஆட்சி செ தால் என்ன?

வீரா : மக்களில் ஒருவர்தா நீங்கள். ஆனால் மக்களின் நி யறியாதவர். ஏழை இந்நாட்டை ஆள வேண்டுமென்கிறோம் நா கள்.

மார் : அதெப்படி முடியும் விவசாயிக்கு உழத் தெரியும். அ சனுக்குத்தானே ஆளத் தெரியும்

வீரா : (சிரித்து) அப்படி தான் மக்கள் இதுவரை நம்பி வ தார்கள். ஆனால் விதிக்கப்படு கொடிய வரிகளும், கொடுக்கப படும் சவுக்கடிகளும் மன்னராகிய நீங்கள் வாழத் தெரி தவர்களே தவிர, ஆளத்தெரிந்தவரல்ல என்பதை நிரூபித்து விட்டன.

மார் : மக்கள் அவ்வளவு கஷ்டப்படுகிறார்களா? வெளி நாடுகளில் எல்லாம் மக்கள் எவ்வளவு சந்தோஷமாக வாழ்கிறார்கள் தெரியுமா? அதுமாதிரிதான் நம் நாடும் இருக்கும் என்றல்லவா நினைத்தேன்?

வீரா : ம்...பாத்திரம் நிறைய பாலைக் கண்டு பழகிய உங்களுக்குச் சாக்கடை நடுவே வாழும்